# மனசெல்லாம்....

# நந்தினி !

## அகிலா கோவிந்த்



# மனசெல்லாம் .... நந்தினி!

**1**

நந்தினிக்கு அந்த நிமிடம் ஒரே பரபரப்பாக இருந்தது. எல்லோரும் அவளை அலங்கரித்தார்கள். வாசனைத் திரவியங்களை அவள் மீது ஊற்றாத குறையாய் தெளித்தார்கள். அம்மா பக்கத்தில் வந்து கிசுகிசுப்பாய், "உன் பிடிவாதத்தை எல்லாம் விட்டுட்டு, நீ பார்த்து நடந்துக்கணும்..." என அறிவுரைத்தாள்.

தோழிகள் விடாது அவள் காதுகளில், "ஹேய்! மாப்பிள்ளை, பார்க்க முரட்டு ஆளாய் தெரியறார். இன்னிக்கு நீ தூங்கவே முடியாது" என பயம் காட்டினர்.

நந்தினியும் நிமிர்ந்து கல்யாணச் சடங்குகளின் போது மாப்பிள்ளை வினோத்தை அரைகுறையாய் பார்க்கத்தான் செய்தாள். நெடு நெடு உயரம், பரந்த நெற்றி, ஊசி போல் குத்தும் காந்த விழிகள், கறுப்பு இறுக்கத்துடன் உதடுகள், முறுக்கிய மீசை, திடகாத்திரமான உடற்கட்டு என எல்லாமே சண்டைக்குத் தயாராய் நிற்கும் ஒரு மல்யுத்த வீரனின் பிம்பத்தை பயமாய் அவளுக்குக் கொடுத்தது.

அவளால் எதையும் யோசிக்க முடியவில்லை. யாரும் அவளை யோசிக்கவும் விடவில்லை. கல்லூரி படிப்பு முடிந்த மறு வாரமே கல்யாண புரோக்கர் அப்பாவைத் தேடி வந்து விட்டார். "நல்ல ஒரு சம்பந்தம் இருக்கு சார்..." என்ற படி அவர் விவரிக்க, அப்பாவும் அம்மாவும் வாய் பிளக்க கேட்டு சந்தோஷ பூரிப்புடன் சம்மதமும் சொல்லி விட்டனர்.

விஷயம் இது தான். நகரின் பெரும் பணக்காரப்புள்ளியான வினோத் தற்செயலாய் நந்தினியை கோவிலில் வைத்து பார்த்திருக்கிறான். இருபது வயது தங்கச்சிலை போல் பளிச்சிட்டுத் தெரிந்த அவளது முகத்தையும், வனப்பான உடல் அழகையும் ஒரு கணம் மெய் மறந்து ரசித்தவன் அக்கணமே, 'இவள் தான் மனைவி. இவளைத் தான் கட்டிக் கொள்ள வேண்டும்' என முடிவு செய்து விட்டான்.

உடனடியாக புரோக்கர் மூலம் நந்தினியின் விலாசம் விசாரித்து, பெண் கேட்டும் ஆள் அனுப்பி விட்டான். அப்பாவும் சும்மா இருக்கவில்லை. தனக்குத் தெரிந்த இடங்களில் வினோத் பற்றி விசாரித்தார்.

'அவரா... பெரும் கோடீஸ்வரர் ஆயிற்றே...? விதவிதமான கார், பங்களா... என சொகுசு வாழ்க்கை வாழ்பவராயிற்றே! உங்கள் பெண், கொடுத்து வைத்திருக்க வேண்டும்...!' என சொல்ல அப்பா பெரும் தலையாட்டலுடன் கல்யாணத்திற்கு சம்மதித்து விட்டார்.

நந்தினிக்கு இந்த ஆடம்பரம் பிடிக்காதது தான். கார், பங்களா என வாழ்வது தான் வாழ்க்கையா? என்றெல்லாம் நினைத்து மறுத்துப் பார்த்தாள். ஆனால் தாயும் தந்தையும் பிடிவாதமாய் இருந்து அவளுக்கு மூளைச்சலவை செய்து விட்டனர்.

நல்ல இடம். எல்லாம் உன் நல்லதுக்குத்தான் என கட்டி வைத்து விட்டனர்.

இதோ... முகூர்த்த தேதி குறிக்கப்பட்டு கல்யாணம் நடந்து முதலிரவும் வந்தாயிற்று.

எல்லா மணப்பெண்களும் போல நந்தினியும் பயத்துடனே முதலிரவு அறையினுள் நுழைந்தாள்.

குளிரூட்டப்பட்ட அறை. விலையுயர்ந்த வேலைப்பாடுகளுடன் தேக்கு மர கட்டில். இதமான நுரை மெத்தை. கட்டிலை அலங்கரிக்கும் விதவிதமான மலர்கள். புதுப்புது புஷ்பங்கள். கட்டிலில் கால் மேல் கால் போட்டு கம்பீரமாய் வினோத் அமர்ந்திருந்தான்.

நந்தினி நிமிர்ந்து பார்த்தாள். எந்தவித சலனமுமில்லாத அவனது முகத்தை விட, அவன் கையில் இருந்த தடிப்பான சிகரெட் அவளை உறுத்தியது. மெல்ல பால் தம்ளருடன் இவள் நகர்ந்த போது அவன் நிமிர்ந்தான்.

அவளது காந்த விழிகளை, முழுதும் விரித்து அவளை விழுங்குவது போல் பார்த்தான். இதுவரை அவன் பார்த்திராத வனப்பு நளினமான உடலமைப்பு! ஒரு கணம் அந்த அழகில் மெய் மறந்த படி அவளையே பார்க்க... நந்தினியும் பதிலுக்கு இமைகள் விரிய அவனைப் பார்த்தாள்.

வினோத் எழுந்து கொண்டான். கையில் உள்ள சிகரெட்டை கண்டி உதறியபடி அவளை நோக்கி வந்தான்.

நந்தினியுள் பரபரப்பு கூடியது.

பக்கத்தில் வந்தவன் பால் தம்ளரை வாங்கி ஓரமாய் டீபாயில் வைத்து விட்டு நேருக்கு நேர் அவளைப் பார்த்தான். அவனது பார்வையின் சூடு தாங்காமல் நந்தினி குனிந்தாள்.

அவளது மலர்க்கரங்களை தொட்டான். மெல்லிய நடுக்கம் அவ

-அகிலா கோவிந்த்

உள் பரவ ஆரம்பித்தது.

அவன் விடாமல் விரல்களால் முன்னேறி தோள்களையும் வளைவான இடுப்பையும் ஒரு சேர பிடித்தவன் அப்படியே அவளை இறுக அணைத்தான்.

அவனது இறுக்கமான உடல் முழுவதும் தழுவிய அணைப்பு அவளைத் திடுக்கிடச் செய்தது. ''வந்ததும் உட்கார வைத்து ஏதாவது மனம் விட்டு புரிந்து கொள்ளலாம்'' என்றெல்லாம் எதிர்பார்த்தவளுக்கு இந்த வெறியான அணைப்பு ஸ்பரிசம் பெரும் ஏமாற்றத்தை உருவாக்கியது.

அதை விட அவன் கண்களில் தெரிந்த வெறி அவளைக் கலவரப் படுத்தவே அப்படியே கண்களை மூடிக் கொண்டாள்.

கண்கள் மூடியதை, சுகத்தில் பரவசமாகி விட்டாள் என அவள் நினைத்துக் கொண்டவன், அப்படியே அவளது உடைகளில் கை வைத்து அகற்ற ஆரம்பித்தான்!

நந்தினி திகைத்தாள்...!

''எவ்வளவு புனிதமாய் மெல்ல மெல்ல தெரிந்து கொள்ள வேண்டிய தாம்பத்யத்தை இப்படி ரவுடி போல்... பெண்ணிடம் வலுக்கட்டாயமாய் சுகம் தேடும் தெருப்பொறுக்கி போல்... இவன்...''

அவள் நினைத்துக் கொண்டிருக்கும் போதே அவளை படுக்கைக்கு கொண்டு போய் கிடத்தியவன் அவள் மேல் படர்ந்து மூர்க்கத்தனத்துடன் செயல்பட ஆரம்பித்து விட்டான்.

காணாததைக் கண்டது போல் பாய்ந்து, முத்தமிட்டு அவளது அவ்வளவு அழகையும் ஒரே இரவில் அனுபவித்து விட வேண்டும் என வெறியாய் அவன் செயல்பட்டது கண்டு மிரண்டு போனாள்.

உடம்பு முழுவதும் எரிவது போலிருந்தது நந்தினிக்கு. அவனை அப்படியே தள்ளி விட வேண்டும் என்று எண்ணி முயற்சிக்கவும் செய்தாள்.

ஆனால் அவனது ஆக்ரோஷமான இரும்புப் பிடிக்குள் பருந்திடம் சிக்கிய கோழிக்குஞ்சாய்த்தான் அவளது நிலைமை இருந்தது.

வேக வேகமாய் செயல்பட்டு மலரிடம் தேன் குடித்த வண்டின் திருப்தியுடன் அவன் விலகினான். கசக்கியெறியப்பட்ட மலர் போல் கிடந்தவளின் நெற்றியில் பெரிய மன்மத கொக்கு போல கடைசியில் முத்தமிட்டான்.

திகைத்து வெறித்துப் போனவளின் முகத்தை தன் பக்கம் திருப்பினான்.

''உன் பெயரென்ன...? ஆ... ஆங்... நந்தினி? நந்தினி, நானும் எத்தனையோ பெண்களை பார்த்திருக்கிறேன். ஆனால் உன் போன்ற சுகம் யாரிடமும் கிடைத்ததில்லை. நான் அதிர்ஷ்டக்காரன் தான்...!''

சொல்லியபடி அவன் சிரித்தான். அவன் சொல்வதின் முழு அர்த்தத்தையும் உணர்ந்த நந்தினி பயங்கரமாய் திடுக்கிட்டாள்.



## 2

நந்தினிக்கு பலாத்காரமாய் அவன் செயல்பட்டதை விட கடைசியில் அவன் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட போது தலையில் இடி விழுவது போலிருந்தது.

என்ன சொன்னான்? ''எத்தனையோ பெண்களை பார்த்திருக்கிறேன். உன் போல் சுகம் எந்தப் பெண்ணிடம் கிடைத்ததில்லை...'' என்று தானே? ...அப்படியானால் இவனுக்கு பல பெண்களுடன் தொடர்பு உண்டா? காமவெறி பிடித்த பெண் பித்தனா?''

அவள் மிரட்சியுடன் அவனை பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவன் எழுந்து உடைகளை சரி செய்து கொண்டான். திரும்பி கட்டிலில் உட்கார்ந்து சாய்ந்தவாறு படுத்துக் கொண்டவன் அரைகுறையாய் இருந்த அவளை அப்படியே இழுத்து தனது பரந்த நெஞ்சில் போட்டுக் கொண்டான். அவனது விரல்கள் பரிவுடன் அவளது தலை முடியை கோதி விட்ட போது அவள் திகைத்தாள்.

இவனுக்கும் மனம் என்ற ஒன்று இருக்கத்தான் செய்கிறது என்ற எண்ணம் சமாதானமாய் எழுந்து கொதிப்பாய் தவித்த அவளது மன நிலையை சரிப்படுத்தியது.

''உன்னிடம் நிறைய பேச வேண்டும். பேசலாமா?'' என்றான் அவன்.

அவள் கைவிரல்களை சேர்த்து அவன் நெஞ்சில் வைத்து அதன் மேல் தன் முகத்தை வைத்தவாறு அவனை அதிசயமாய்ப் பார்த்தாள். அவன் ஒரு கணம் அவள் கண்களை உற்று நோக்கினான்.

''கண்களில் மை வைத்திருக்கிறாயா? உன் மை விழிகள் பார்ப்பதற்கு ரொம்பவும் அழகாக இருக்கிறது!'' என்றான்.

இப்போது தான் தன்னை இவன் நிதானமாய் பார்க்க ஆரம்பித்திருக்கிறானோ... என அவள் எண்ணும் போதே படக்கென தன் முகத்தை அவள் பக்கம் கொண்டு வந்தவன் தனது உதடுகளை அவளின் இரு கண் இமைகளிலும் ஒற்றியெடுத்து முத்தமிட்டான்.

திடுக்கிடலுடன் வியந்தவளின் நெற்றியைத் தட்டி சிரித்தவன்,

''மன்னா பத்துப் பாட்டு பாடவா?''
''வேணாம்... குத்துப் பாட்டு பாடு..!''
- தேவி, பாபநாசம்.



"நந்தினி... இது... இது தான் என் சுபாவம். எந்த அழகையும் பார்த்து... ரசிப்பேன். ரசித்ததும் உடனே அதை அனுபவித்து விட வேண்டும் என்ற ஆசை வரும். வந்ததும் அதை உடனே செய்து விடுவேன். இது தான் எனது ஸ்டைல் புரிகிறதா?" என்றபடி திரும்பவும் அவன் சிரித்த போது அவனது சிரிப்பு விகாரமாய் ஒலித்தது நந்தினிக்கு.

அவன் இப்போது அவளது கழுத்தை விரல்களால் தடவியபடி தோளுக்கு வந்தவன் இரு தோள்களையும் அழுத்தப்பற்றி தன் நெஞ்சோடு அணைத்தான்.

"உன்னிடம் நிறைய பேச வேண்டும் என்று சொன்னது எதைப் பற்றி தெரியுமா?" என்றபடி நிறுத்தியவன், திரும்பவும் அவள் மோவாயை உயர்த்தி, சிறு பிள்ளையை கொஞ்சுவது போல் அவள் செவ்விதழ் உதடுகளை இழுத்து கைகளால் ஆட்டினான்.

செக்ஸ் விஷயத்தில் பெரும் மன்னனாக இருப்பான் போலவே என அவள் எண்ணியபடியே அவனை விநோதமாய் பார்க்க அவன் தொடர்ந்தான்.

"என்னைப் பற்றி... என்னைப் பற்றி... நீ முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டும் நந்தினி. அதைப்பற்றி உன்னிடம் விரிவாக பேச வேண்டும். அதற்கு முன் ஒரு கேள்வி. என்னைப் பற்றி என்ன தெரியும் உனக்கு?"

அவன் திடீரென கேட்டதும் அவள் புரியாமல் விழித்தாள்.

"என்ன கேட்கிறீர்கள் நீங்கள்?" என்றாள்.

"புரியவில்லையா? என்னைப்பற்றி எந்த அளவுக்கு உனக்கு தெரியும் என கேட்கிறேன்."

"நீங்கள் ஒரு தொழிலதிபர் என்று..."

"ம்ம்... தொழிலதிபர் என்று தெரியும். என்ன தொழில் செய்கிறேன் தெரியுமா?"

அவள் திரும்பவும் விழித்தாள்.

அவன் சிரித்தபடி, "திகைக்காதே. எல்லாவற்றையும் விரிவாய் நானே சொல்லி விடுகிறேன். நான் இந்த ஊரின் குறிப்பிட்டுச் சொல்லும்படியான பரம்பரை பணக்காரன்! என் தாத்தா, கொள்ளு தாத்தா எல்லோரும் ஜமீன்தார் பரம்பரையில் வந்தவர்கள். அதனால் பூர்வீக சொத்துக்கள் நிறைய உண்டு. உட்கார்ந்து ராஜபோக வாழ்க்கை வாழும் அளவுக்கு வசதி இருக்கிறது. இருந்தும் பெயருக்கு ஒரு தொழில் செய்கிறேன். அது என்ன தொழில் தெரியுமா?"

அவன் நிறுத்தி விட்டுப்பார்க்க அவள் பேசாமல் இருந்தாள்.

அவனே தொடர்ந்தான். "நான் செய்வது அட்வர்டைசிங் எனப்படும் விளம்பர குறும்படம் எடுக்கும் தொழில்."

இந்த விளம்பரப்படங்களை "மாடல்கள்" எனப்படும் நிறைய அழகான இளம்பெண்களை வைத்துத் தான் எடுக்கிறேன். வெவ்



வேறு மாநிலத்தில் இருந்து வரும் அழகிகள் தான் இத்துறையில் விளம்பரப் பெண்களாய் நடிக்கிறார்கள். அவர்களுடன் எனக்கு நெருக்கமான, மிக நெருக்கமான தொடர்பு உண்டு. அதை நீ தெரிந்து கொள்ள வேண்டும்...!" என்று சர்வசாதாரணமாய் அவன் சொன்ன போது நிஜமாகவே அதிர்ந்தாள் நந்தினி.

இருந்தும் தன் அதிர்வைக் காட்டாமல் அவனைப் பார்த்தாள்.

"நெருக்கமான தொடர்பு என்றால்... தொழில் ரீதியாகத் தானே சொல்கிறீர்கள்?" என்றாள் நப்பாசை பொங்க.

"இல்லை நந்தினி..." அவன் குரல் உறுதியாய் ஒலித்தது.

"பின் எப்படிச் சொல்கிறீர்கள்?"

"உனக்கு புரியவில்லை?"

"புரியவில்லை..."

"தொழிலுக்கு அப்பால் நந்தினி. அதை தொடர்பு என்று கூட சொல்லக்கூடாது. உறவு என்றே சொல்ல வேண்டும். அந்த உறவு நட்பில் ஆரம்பித்து படுக்கை வரை வந்து விடும்...!"

அவன் சொல்லச்சொல்ல... அப்படியே விக்கித்துப் போனாள் நந்தினி.

## 3

விநோத் சாதாரணமாக எல்லாவற்றையும் சொல்லிக்கொண்டு போனான்.

நந்தினி பயம் விலகாமல் மெல்ல தலையசைத்தாள்.

"நந்தினி ஒரு விஷயத்தை தெரிந்து கொள்..." என ஆரம்பித்தவன், "இது கம்ப்யூட்டர் யுகம். உலகம் விஞ்ஞான வளர்ச்சியில் எங்கோ போய் விட்டது. இன்னும் கற்பு அது இதுவென நாம் பேசிக்

"உனக்கு என்ன வரம் வேண்டும் பெண்ணே?"

"இப்போது உள்ள கணவரே அடுத்தடுத்த பிறவிகளிலும் கணவனாக வர வேண்டும்; ஏன்னா அவரு நல்லா சமைப்பாரு!"

-இ. ஞானாம்பாள், மதுரை.



கொண்டிருந்தால் அது முட்டாள்தனமாகி விடும். மேலும் வாழ்க்கையில் முக்கியமான ஒரு விஷயம் என்ன தெரியுமா? ஒன்றைப் பெற, ஒன்றை நாம் கொடுத்தாக வேண்டும் என்ற விதிதான். அந்த விதிப்படி விளம்பரப்படங்களில் நடிக்க இருக்கும் மாடல் அழகிகள் தங்களது உடம்பை மகிழ்வோடு எனக்குக் கொடுக்கிறார்கள். நானும் மகிழ்வோடு எடுத்துக்கொள்கிறேன். இதில் தப்பு எதுவும் இல்லை...'' அவன் சொல்லிவிட்டு நிறுத்தியபடி அவள் முகத்தை உற்றுப் பார்த்தான். நந்தினி, பிரமை பிடித்தாற்போல் அப்படியே விழித்துக் கொண்டிருந்தாள்.

அவள் தலையைப் பிடித்து மெல்ல உலுக்கினான்.

''உனக்குப் புரிகிறதா... இல்லையா?''

அவள் அதற்கும் பேசாமலே இருந்தாள்.

''இதோபார் நந்தினி! நம் முதலிரவிலேயே இதையெல்லாம் நான் சொல்வது உனக்கு குழப்பமாகக் கூட இருக்கும். ஆனால் நான் என்ன நினைக்கிறேன் என்றால், நீ இந்த விஷயங்களை எல்லாம் முதலிரவிலே தெரிந்து கொள்வது பிடிக்காமல் போனால் கூட....'' என்றபடி அவன் நிறுத்திவிட்டு மறுபடியும் அவளது கண்களை ஊடுருவினான்.

''நீ விலகிக் கொள்ளலாம். இந்த திருமண பந்தத்தை முறித்துக் கொள்ளலாம்...'' சர்வசாதாரணமாய் பழத்தில் ஊசியேற்றுவது போல் அவன் சொல்ல அவள் துடித்துப் போனாள்.

''எ... என்... என்ன... என்ன... சொல்கிறீர்கள்? உங்கள் வாயிலிருந்து இப்படி வரலாமா? நீங்கள் இப்படிப் பேசலாமா...? என்ன சொல்கிறீர்கள்?'' ஒரு கணம் பரிதவித்துப் போனவளாய் துடிப்பு அடங்காமல் அவள் கேட்க, அவன் பெரும் சிரிப்புடன், தன் நெஞ்சில் இருந்து விலகியவளை இழுத்து நெஞ்சோடு அணைத்தான்.

''பதட்டம் வேண்டாம் நந்தினி. நீயும் என்னைப் போல் மனநிலையுடன் இதை சாதாரணமாக எடுத்துக் கொண்டால் ஒன்றும்

''என் காதலியோட பேரையும், நட்சத்திரத்தையும் சொன்னதும் பூசாரி ஆடிப்போயிட்டார்..''

''ஏன்...?''

''அவர் பொண்ணோட பேர், நட்சத்திரமும் அதே தானாம்!''

- நக்கி, கோவை





இல்லை. மாறாக, கணவன் என்றால் கட்டுப்பெட்டியாய் உன் முந்தானையைப் பிடித்துக் கொண்டு ராமன் போல் இருக்க வேண்டும் என்று நினைத்தால் என்னால் முடியாது. அதைத்தான் இப்படி விளக்கினேன்...''

அவள் இன்னமும் தவிப்பு அடங்காமல் மூச்சு வாங்கியது வினோதத்திற்கு வேடிக்கையாய் இருந்தது. கோழிக்குஞ்சு போல் தன் நெஞ்சோடு ஒட்டிக் கொண்டிருந்தவளின் முகத்தை நிமிர்த்தினான்.

''நான் திருமண பந்தத்தை முறித்துவிடுவோம் என்று சொன்னதும் நீ பயந்து விட்டாய் அப்படித்தானே?'' அவள் மூச்சிழுத்தபடி தலையசைத்தாள்.

''பயப்படாதே... நான் அப்படியெல்லாம் முறித்து விடமாட்டேன். நீ என்னை புரிந்து கொண்டால் போதும். என் விஷயங்களில் தலையிடாமல் இருந்தால் போதும். உனக்கு எந்த பிரச்சினையும் ஏற்படாது...''

நந்தினி பதிலளிக்காமல் அவனையே பார்த்தாள்.

''நந்தினி...''

முதல் முறையாய் அவன் குரலில் லேசான கனிவு தொனித்திருப்பதை கவனித்தாள்.

''என்னைப் பிடித்திருக்கிறதா?''

''ம்...'' என்றாள் லேசான தலையசைப்புடன்.

''இவ்வளவு சொல்லியும் என்னைப் பிடித்திருக்கிறதா? உனக்கு வெறுப்பு வரவில்லையா...?''

அவனது கேள்வி அவளை ஊமையாக்கியது. உண்மையில் அவன் மீது ஆசையா அவளுக்கு? இப்படி ஒரு கணவன் வந்து அமைந்து விட்டானே என்று வெறுப்புதானே? இதையெல்லாம் எப்படி வெளிக்காட்ட முடியும்? கடப்பாரையை விழுங்குவது போல் விழுங்கி வாழ்க்கையை ஏற்றுக் கொண்டுதானே ஆக வேண்டும்? அவள் நிலைமையும் அது தானே!

ஒரு கணம் இந்த கல்யாணத்திற்காக அப்பா பணம் புரட்ட அலைந்தது, தெரிந்த சொந்த பந்தங்களிடம் எல்லாம் கடன் வாங்கி சமாளித்தது எல்லாம் ஞாபகத்திற்கு வந்தது. கல்யாணத்திற்கு முந்தைய இரவும் அவளை தனியே சந்தித்து அப்பா கண்கலங்கி பேசிய... அந்த வார்த்தைகள் இன்னும் அவள் நினைவில் இருக்கிறது.

''இதோ பாரம்மா, மாப்பிள்ளை நம் கைக்கு மீறிய பணக்கார இடம். அவர் பணத்தாலே வளர்ந்துவிட்டதால் குணத்தில் கொஞ்சம் முன் பின் இருக்கத்தான் செய்யும். நீதான் அதை புரிந்து கொண்டு நல்ல விதமாய் உன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்...''

அப்பா சொன்னது சரிதான். மாப்பிள்ளை கொஞ்சம் முன் பின்

அல்ல நிறைய முரணாகவே இருக்கிறார். அவரை எப்படிப் புரிந்து
எப்படித்தான் வாழ்க்கையை நடத்தப்போகிறாளோ...!
யோசித்தவள் தன் உதடுகளில் ஏதோ ஈரம் ஏற்படுவது கண்டு
உணர்வுக்கு வர... நிஜத்தில் அவன் அவளது உதடுகளில் அழுந்த முத்
தமிட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது.
அவனது செய்கையெல்லாம் அவளுக்கு திகைப்பைத் தான் ஏற்
படுத்தியது.

# 4

மறுநாள் விழித்தவளுக்கு முதலிரவில் நடந்ததெல்
லாம் பயங்கர கனவு போல இருந்தது. ஒரே இரவில் எத்
தனை விஷயங்களில் எத்தனை உணர்வுகளில் அவள்
அலைக்கழிக்கப்பட்டு விட்டாள்.
அறையை விட்டு வெளியேவந்து குளிர்ந்த நீரில் முகம் கழுவினாள்.
விநோத்தை க்காணவில்லை. அவளுக்கு முன்பே குளித்து முடித்து
அலுவலகத்திற்குச் சென்று விட்டான். அவ்வளவு பெரிய பங்களா
வீட்டில் அவள் ஒருத்தி மட்டும் தான். சுற்றிலும் பணியாட்கள். சமை
யல் கட்டில் வயதான சமையல்கார அம்மாள்.
ஒரு பேச்சுத் துணைக்குக் கூட இந்த வீட்டில் ஆள் இல்லையே
என நந்தினி நினைத்தாள். திடீரென கண்ணைக் கட்டி திக்குத் தெரி
யாத காடு ஒன்றில் விட்டு விட்டது போல் அவள் நிலை இருந்தது.
அவசரப்பட்டு கல்யாணம் செய்து விட்டார்களே என தந்தை மீது
கோபமாகவே நினைத்தாள்.
அவள் அப்படி நினைத்துக் கொண்டிருந்த போதே தொலைபேசி
ஒலித்தது. எந்தவித உணர்வில்லாமல் எடுத்தாள். மறுமுனையில் அப்
பாதான்! நேற்று இரவே பஸ் பிடித்து ஊருக்குச் சென்றுவிட்டவர் ஆவ
லாய் அவள் நலம் விசாரித்தார்.
நந்தினிக்கு சொல்ல ஓராயிரம் விஷயங்கள் இருந்தும் அவர்
மனதை நோகடிக்க விரும்பாதவளாய் பேசினாள். நலமுடன் இருப்
பதாய் எல்லாம் நல்லபடியாக நடப்பதாய் பேசி அவர் மனம் குளிர
வைத்தாள்.
கனத்த மனத்துடன் பேசி முடித்து விட்டு ரிசீவரை கீழே வைத்
தாள். முகத்தில் எழுந்த வேதனை கண்களில் நீர்த்துளியாய் வெளிப்
பட்டது. ஒரு கணம் மனம் கலங்கியவள் மறுகணமே சிலிர்ப்புடன்
நிமிர்ந்து கொண்டாள்.
இப்போது என்னாயிற்று? எதற்கு கலங்க வேண்டும்? என
வீராப்பாய் நினைத்தாள். அப்போது ஒரு விஷயம் அவளுக்கு
உரைத்தது. இது எல்லாவற்றுக்கும் காரணம் அவள் மனது தான்!
மனதில் தனக்கு கணவனாக வரப் போகிறவன் எப்படியெல்லாம்
இருக்க வேண்டும் என்று முன்பே அவள் கனவுக் கோட்டை கட்டி



வைத்திருந்தாள். தனக்கு வரப்போகிறன் மென்மையாக நடந்து
கொள்ள வேண்டும். மலர் போல தன்னை வைத்து தாங்க வேண்டும்
என்றெல்லாம் அவளுக்கு ஆசை தான். அப்படி அவன் அவளைத்
தாங்கும் போது பதிலுக்கு அவளும் அவன் மீது அளவு கடந்த பிரி
யம் வைத்து குடும்பம் நடத்துவாள்.
அவனுக்கு ஒன்றென்றால் துடித்துப் போவாள். தன்னை முழுவ
துமாய் அவனிடம் ஒப்படைத்துவிட்டு அவன் காலடியே சரணம்
என்று கிடப்பாள். தனது சிந்தனைகளை, விருப்பு வெறுப்புகளை
எல்லாம் அழித்து விட்டு அவனது நினைப்புகளை, விருப்பு வெறுப்
புகளை தனதாக்கிக் கொள்வாள். இப்படியெல்லாம் அவள் முன்பே
நினைத்து மனதில் கணவனைப் பற்றிய உருவம் ஒன்றை உருவாக்கி
யிருந்தாள்.

ஆனால் இப்போது...?

அவள் கற்பனை பண்ணியிருந்த உருவத்திற்கும் நிஜத்திற்கும்
கொஞ்சமும் சம்பந்தம் இல்லாமல் அல்லவா கணவன் அமைந்து
விட்டான்!

அவளைப் பற்றியோ அவளது உணர்வுகள் பற்றியோ அவனுக்கு
கொஞ்சமும் கவலையோ அக்கறையோ இல்லையே...!

இது எல்லாவற்றையும் விட மேலாக அவனுக்கு நிறைய பெண்
களுடன் தொடர்பும், உறவும் உண்டு என அவனே பறை சாற்றிக்
கொள்கிறானே!

என்ன செய்வது? என்ற நினைப்புடன் ரொம்ப நேரம் தலையில்
கை வைத்தபடி உட்கார்ந்திருந்தவள் சமையற்கார அம்மாள் உலுக்
கும் போது தான் உணர்வுக்கு வந்தாள்.

காலை டிபனாக இட்டிலியும், வெண் பொங்கலும் சமைத்திருந்
தாள். பீங்கான் பிளேட் ஒன்றில் வைத்து ''சாப்பிடும்மா...'' என்று
பரிவுடன் அவள் நீட்டியபோது மறுக்க மனமில்லாமல் வாங்கிக்
கொண்டாள். பசி வயிற்றைக் கிள்ள இட்டிலியைப் பிட்டு படபட

''உன் கணவருக்கு
இரண்டாம் கல்யாணம்
செய்து வச்சியாமே
ஏன்?''
''என் ஒருத்தியால
என் மாமியாரை சமாளிக்
கிறது ரொம்ப கஷ்டமாயி
ருக்கு அதான்!''
-சிவ. ராமலிங்கம்,
ஆத்தூர்.



லெவ இரண்டு மூன்றை வாய்க்குள் போட்டாள். தன்னையே கண்
களை இடுக்கிப் பார்க்கும் சமையல்கார அம்மாவை அவளும் உற்
றுப் பார்த்தாள்.
இவளுக்கு விஷயம் தெரிந்திருக்குமோ? வினோத் சொன்னதை
வைத்துப் பார்த்தால், பத்துப் பன்னிரண்டு வருடமாய் வேலை பார்த்
துக் கொண்டு வருவதாய் அல்லவா தெரிகிறது... இவளிடம் வினோத்
பற்றி கேட்கலாமா? வினோத் எப்படி... அவன் முழு குணாதிசியங்
கள் என்ன என்று தெரிந்து கொள்ளலாமா...? என்று நினைத்தாள்.
மறுகணமே அந்த எண்ணத்தை உதறிக் கொண்டாள். நேரிடை
யாக தெரிந்து கொள்வதை விட்டுவிட்டு இது போன்ற குறுக்குவழி
எதற்கு என சிந்தனை அவளுள் ஓடியது. சமையல்கார அம்மாள் அப்
படியே அவள் எதிரிலே உட்கார்ந்து விட்டாள்.
அவள், சாப்பிடுவதையே பார்த்துக் கொண்டிருந்தவளை நந்தினி
யும் பரிவுடன் பார்த்தாள். அவளைப் பற்றி வினோத் சொன்ன விப
ரங்கள் எல்லாம் அவள் நினைவில் ஓடியது.
சொந்த பந்தம் ஏதும் கிடையாதாம். வயிற்று ஜீவனத்திற்காக
வீட்டு வேலை செய்ய ஆரம்பித்து முழுநேர வேலைக்காரியாகவே
ஆகிவிட்டாளாம். கல்யாணம் அது இதுவென எதிலும் நாட்டமில்
லாமல் அப்படியே வண்டியை ஓட்டி இன்று அறுபது வயதை
நெருங்கி விட்டாள். வேலையில் ரொம்ப சுறுசுறுப்பாம். காலை ஏழு
மணிக்கு வினோத் கீழிறங்கும் போதே டைனிங் டேபிளில் உணவு
தயாராய் இருக்குமாம்.
வினோத் அவளைப் பற்றி சொன்ன விஷயங்கள் சரியாகவே
இருந்தன. அனாவசியமாக எந்த கேள்வியையும் கேட்காமல் அவளது
வேலைகளிலே கவனமாய் இருந்தாள். நந்தினியும் சாப்பிட்டு முடித்
தவள் எழுந்து பங்களாவைச் சுற்றிப் பார்க்க ஆரம்பித்தாள்.
விஸ்தாரமான முன்புறத்துடன் பங்களா கட்டப்பட்டிருந்தது.
பெரிய ஹால், நீளமான அறைகள், விலையுயர்ந்த பொருட்களால்
அலங்கரிக்கப்பட்டு இருந்தது.
பங்களா பின்புறம் தோட்டம் போல் புல்தரையுடன் பெரிய
பெரிய மரங்கள் ஆக்கிரமித்திருந்தன. புல்தரை ஓரமாய் கீச்சு கீச்சு
என சப்தம் கேட்க அதிசயமாய் குனிந்து பார்த்தாள் நந்தினி.
பெரிய மரக் கூண்டில் வித விதமான கிளிகள் போல் தென்பட...
உற்றுப் பார்த்தாள். அத்தனையும் 'லவ் பேர்ட்ஸ்'' எனப்படும் காதல்
பறவைகள்! கீச்சு கீச்சுவென ஒவ்வொன்றும் நெருங்கி அலகால் உரசி
ஒன்றையொன்று கூண்டுக்குள்ளே விரட்டியபடி பறந்து... உற்சாக
மாய் துள்ளித் திரிவதை கண்குளிர ரசித்தாள்.
'லவ் பேர்ட்ஸ்' பற்றி கல்லூரித் தோழி ஒருவள் சொன்ன விஷ
யம் அவள் ஞாபகத்திற்கு வந்தது. லவ் பேர்ட்ஸ், ஆண், பெண் என
இரு ஜோடிகளாய்த்தான் இருக்குமாம். அந்த ஜோடியில் ஆணோ,



பெண்ணோ பிரிந்து விட்டால் தனித்து விடப்பட்ட லவ் பேர்ட் எதை
யும் உண்ணாது. பட்டினி கிடந்து தன் உயிரை மாய்த்துக் கொள்ளு
மாம். அதனாலே அதற்கு ''லவ் பேர்ட்ஸ்'' என்று பெயரிட்டு அழைக்
கின்றார்களாம். நந்தினி அந்த சிறு பறவைகளை அதிசயமாய்ப் பார்த்
தாள். பக்கத்தில் இருந்த உணவுத்தானியங்களை எடுத்து கூண்டுத் தட்
டில் வைத்தாள்.

மெல்ல மெல்ல அவைகள் தத்தி வந்து கொத்திச் சாப்பிடும் அழகை ரசித்தாள்.

சிறு குருவிக் கூட்டம் ஒன்றும் சுற்றிச் சுற்றி உணவிற்காக வட்ட மடித்துக் கொண்டிருந்தது. தானியங்களை எடுத்து அவைகளுக்கும் போட்டாள். ஆவலாய்ப் பறந்து சிறு அலகுகளால் கொத்தி சாப்பிடும் அவைகளின் அழகை பார்த்துக் கொண்டே இருக்கலாம் போலிருந்தது.

கொஞ்ச நேரம் அப்படியே இருந்தவள் எழுந்து தோட்டச் செடிகளின் பக்கம் வந்தாள். விதவிதமான செடிகள் வண்ண வண்ணப் பூக்கள்! வினோத்திற்கு இவ்வளவு கலாரசனை உள்ளதா என நினைத்தாள். இச்செடிகளை பராமரிக்க மாலை தோறும் தோட்டக்கார வேலையாள் ஒருவனை வினோத் ஏற்பாடு பண்ணியிருப்பதும் அவள் ஞாபகத்திற்கு வந்தது.

அப்படியே நிழலான அந்த செடிகளுக்கு நடுவே உட்கார்ந்து கொண்டாள். வெயில் உறைக்கும் அந்த வேளையிலும் சுகமான தென்றல் அவளைத் தழுவியது.

ஒருவாறு நேரம் போனதே தெரியாமல் இருந்தவள் மதியம் ஒரு மணி வாக்கில் காரின் ஹாரன் ஒலி கேட்டு நினைவுக்கு வந்தாள்.

வாட்ச்மேன் கதவைத்திறக்க வினோத்தின் பளபளப்பான கறுப்பு நிற கார் ஜிவ்வென உள்ளே நுழைந்தது. வினோத்தேதான் ஓட்டி வந்தான்.

நந்தினி எழுந்து முன்புற ஹால் பக்கம் வந்தாள்.

'ஹாய்...' என்றபடி உற்சாகமாய் நுழைந்தான் வினோத். நுழைந்தவன் சும்மா இருக்கவில்லை. பின்புறமாய் வேகமாய் வந்து அவளை இடுப்போட கட்டியணைத்தான். அவள் கழுத்துப் பக்கம் தன் முகத்தைத் தேய்த்து முகர்ந்தான்.

நந்தினி அவனின் இந்த செய்கையை எதிர்பார்க்காததால் அப்படியே ஒன்றும் பேசாமல் நின்றாள்.

''ஹேய்... நந்தினி!... ஏன் ஒன்றும் பேசாமல் இருக்கிறாய்... ஏதாவது பேசு...'' என்றான்.

அவள் திரும்பவும் பேசாமல் இருக்கவும், ''நீ பேசாமல் இருந்தால் என்ன செய்வேன் தெரியுமா?'' என்றபடி தன் முகத்தை வேண்டுமென்றே அவளது உதடுகள் பக்கம் கொண்டு போனான்.

நந்தினியின் முகம் கலவரமானது கண்டு கடகடவென பெரிதாய்

சிரித்தான்.

"இன்னும் உனக்கு பயம் போகவில்லையா? முதலிரவு நடந்த பிறகும் என்னைப் பார்த்து இந்தப் பயம் பயப்படுகிறாய்?" அவளைப் பிடித்திருந்த இறுக்கமான பிடியை தளர்த்திவிட்டு கை தட்டிச் சிரித்தான்.

அவன் பார்வை அவள் உடுத்தியிருந்த சேலையில் போனது. ஜரிகை பார்டரில் பச்சைப் பூ நிற... சேலையை உடுத்தியிருந்தாள்.

"இது என்ன பட்டிக்காடு மாதிரி! எட்டு முழ சேலை...? நோ நந்தினி... உன்னோட கெட் அப்புக்கு இந்த சேலை எல்லாம் சரிவராது...!"

தலையை வேகமாய் குலுக்கினான் அவன்.

நந்தினி அவனையே பார்த்தாள்.

"உன்னோட நளினமான உடலமைப்புக்கு நீ சேலை எல்லாம் உடுத்தக்கூடாது. மாடர்ன் டிரஸ் தான் போடணும். அதான் எனக்குப் பிடிக்கும்..."

"மாடர்ன் டிரஸ்ஸா?"

"ம்ம்... மாடலிங் பொண்ணுங்க டிரஸ் பண்ற மாதிரி குட்டைப் பாவாடை! சின்ன ஸ்கேர்ட், டி ஷர்ட் மாதிரி இறுக்க பனியன், ஜீன் சின்னு எல்லாத்தையும் நீ போடணும். நான் பார்த்து ரசிக்கணும்..."

"நான்... நான்..." குரல் வராமல் திணறினாள் அவள்.

"பயப்படாதே... சாயங்காலம் நானே அந்த டிரஸ்களை எடுத்து வந்து நானே உனக்கு போட்டு விடுறேன்..."

அவன் சொல்லச் சொல்ல அவள் முகம் மேலும் கலவரமாகத் தான் செய்தது.

அதற்குப் பின் அவனே அவளைத் தைத்தாங்களாய் இழுத்துக் கொண்டு டைனிங் டேபிள் பக்கம் போனான். அவளை உட்கார்த்தி வைத்து விட்டு அவனும் பக்கத்தில் உட்கார்ந்தான்.

"இன்னிக்கு பயங்கர பசி. உடனே சாப்பிடணும்..." என்றான்.

"இருங்கள். நான் பரிமாறப் போகிறேன்..." என அவள் எழப் போனாள்.

அவளை அப்படியே கைகளால் அமர்த்தினான். "இரு... நாம் இருவரும் சேர்ந்தே சாப்பிடுவோம். செல்ஃப் சர்வீஸ்" சிரித்தான்.

மதிய உணவாக ஃப்ரைடு ரைஸ், தக்காளி சூப், புதினா துவையல் என அவனுக்குப் பிடித்தமான எல்லா அயிட்டங்களையும் சமையல்கார அம்மாள் தயார் பண்ணியிருந்தாள்.

படபடவென அவன் சாப்பிட்டுக் கொண்டே அவளையும் சாப்பிடச் சொன்னான்.

அவன் தன் மீது அன்பு காட்டினாலும் நந்தினியால் ஏனோ கணவன் என்ற நினைப்புடன் அவனுடன் ஒன்ற முடியவில்லை. அவனது ஒவ்வொரு செய்கையையும் மிரட்சியோடு பார்த்தாள்.

அவனது ஸ்பரிசம் படும் போதெல்லாம் அவளது உடலும் பழகிப்போகாமல் ஏதோ அன்னியன் தொடுவது போல் சிலிர்த்து விலக முயற்சித்தது.

அதற்கு ஏற்றார்போல் அவன் ஒருகையால் சாப்பிட்டுக் கொண்டே மறுகையின் விரல்களால் அவள் உடம்பின் இடுப்பு, முதுகு, தோள் என தொட்டு நர்த்தனமாடிக் கொண்டிருந்தன. அலுவலகத்தில் நடந்த சாதாரண விஷயம் ஒன்றை சுவாரஸ்யமாய் பெருஞ் சிரிப்புடன் சொல்லிக் கொண்டிருந்தான் வினோத்.

நந்தினி வலிப்பில்லாமல் எரிச்சலை அடக்கிக் கொண்டு இருப்பவள் போல அமர்ந்திருந்தாள். வினோத் ஒரு வழியாய் சாப்பிட்டு முடித்து எழும்பியவன், எழும்பும் போது சும்மா இருக்காமல் அவளை பிடித்து இழுத்து இறுக அணைத்தான்! அவளது உதடுகளில் ஆசையுடன் அழுந்த முத்தமிட்டான்.

உடம்பே எரிவது போல் இருந்தது நந்தினிக்கு!

## 5

அதற்குப்பின் வந்த இரண்டு நாட்களும் எந்தச் சலனமுமின்றி சென்றது. ஆனால் இரவுகளில் வழக்கமான அனுபவம் தான் அவளுக்கு ஏற்பட்டது.

புலி வேட்டைக்கு கிளம்பிய வேட்டைக்காரன் போல் தான் சுற்றி வந்து அவள் உடம்பைப் பார்ப்பான். அவன் விழிகளில் மெல்ல பளபளப்பு ஏறிடும் இரை தேடும் புலி போல் அவளை நெருங்குவான். கொஞ்ச நேரத்தில் வலுவான அவனது இரும்புப்பிடிக்குள் கோழிக்குஞ்சு போல அவள் சிக்கியிருப்பாள்.

அவளுக்குப் பிடிக்கிறதோ இல்லையோ என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் இரையைக் கண்ட மிருகமாய் நடந்து கொள்வான்.

அதற்குப்பின் தான் அவன் எழுந்து, உடைகளை சரி செய்து நிதானத்திற்கு வருவான். தூங்கப் பிடிக்காமல், ரொம்ப நேரம், தூங்கிக் கொண்டிருக்கும் அவனை முறைத்தபடி விசித்திரமாய்ப் பார்ப்பாள்.

சில சமயம் அவள் அப்படிப் பார்த்துக் கொண்டிருக்கும் போது



தற்செயலாய் அவன் முழித்து விடுவான். "என்ன இன்னும் தூங்கவில்லையா?" என்று பரிவாய் கேட்டபடி அவனது கைகள் ஆதரவாய் அவளை அணைக்கும். அவள் பதில் சொல்லாமல் நடக்கப் போவதையறிந்து 'ம்ம்' என்று முணங்குவாள்.

கொஞ்ச நேரத்தில் ஆதரவாய் அவன் பிடித்த 'பிடி' இரும்புப்பிடியாகும். மறுபடியும் அவன் வேட்டைக்குத் தயாராகி விட்டான் என்பது அவளுக்கு புரிந்து விடும். மறுபடியும் கண்களை மூடிக் கொள்வாள்.

அவளுக்கு அவன் விஷயத்தில் ஒன்று தான் புரியாமல் பெரிய ஆச்சரியத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அவன் ஒரு நாளாவது தன்னைப்பற்றி நினைப்பானா, தனக்கும் மனம் என்ற ஒன்று உண்டு என்பதை புரிந்து கொள்ள மாட்டானா? என்று ஏங்கினாள்.

அவள் அறிந்து கொண்டதில், அவன் பேச்சும் சரி, செய்கையும் சரி அவனைச் சுற்றியே, அவனது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்பவே அமைந்து கொண்டிருப்பதைக் கவனித்தாள். அவளும் அவன் அதன் படியே நடக்க வேண்டும் என வற்புறுத்துவதை உணர்ந்தாள்.

அதை ஒரு முறை மீறி தன் இஷ்டப்படி நடக்க வைக்க முயலுமா என நினைத்தாள். அவள் முயற்சித்துப் பார்க்க சந்தர்ப்பம் ஒன்று மறுநாளே வந்தது.

மறுநாள் வினோத் அலுவலகம் விட்டு வந்தவன் இரண்டு கைகளிலும் பெரிய பெரிய துணிப்பைகளுடன் வந்தான்.

"இதில் உனக்குத்தான் டிரஸ் நந்தினி..." என்ற போது அவளுக்கு வியப்பாகவே இருந்தது.

பைகளில் இருந்து அவன் உடைகளை எடுத்த போது நிஜமாகவே அவள் அதிர்ந்தாள். அத்தனையும் அரை குறை மினி ஸ்கர்ட், ஆடை வகையறாக்கள் எல்லாமே அவள் கால் முட்டு வரைக்கும் தான்.

திகைத்தவளை பார்த்து, "அன்று சொன்னேனே நந்தினி, இந்த எட்டு முழ சேலைச் சமாச்சாரங்களை விட இது தான் இப்போதே எடுப்பாக இருக்கும் என்று! ம்ம்... இதை இப்போதே அணிந்து

"கராத்தே வீரர் விமானத்துல போறப்பக் கூட பந்தா பண்ணிக்குவார்.."

"எப்படி..?"

"இருக்கை வில பிளாக் பெல்ட் தான் கட்டுவார்ன்னா பாரேன்...!"

- ஜக்கி, கோவை





கொண்டு வா... பார்ப்போம்..." என்றபடி துணிகளை எடுத்து அவள் கைகளில் திணித்த போது அவளுக்கு வாய் குழறியது.

"வே.. வேண்டாம்... இது... இது... எல்லாம் அசிங்கமாக இருக்கும்..."

"அசிங்கமா?" அவிழ்த்துப் போட்டு நின்றால் தான் அசிங்கம்... நான் உன்னை அப்படியா செய்யச் சொல்கிறேன்? ம்ம்... போட்டுக் கொண்டு வா..." அவன் விரட்டியும் அதிராமல் நின்றாள்.

"வேண்டாம்... எனக்கு இஷ்டமில்லை..." மெல்ல அவள் குரலில் உறுதி கூடியது.

"என்ன இஷ்டமில்லையா?" அவன் குரலிலும் உஷ்ணம் ஏறினான்.

"வேண்டாம்... ஒரு போதும் அணிய மாட்டேன்..." என்றாள் தீர்க்கமான குரலில்.

"என்ன ஒரு போதும் அணிய மாட்டாயா? அதையும் பார்த்து விடுவோமே?" என்றபடி கடும் குரலில் பேசி அவள் முன் வந்து நின்றவன், சற்றும் எதிர்பாராத நேரத்தில் அவள் கன்னத்தில் அறைந்தான்.

"எதிர்த்துப் பேசுவது எனக்குப் பிடிக்காத விஷயம். இனியாவது புரிந்து கொள்...!" என்றான் கடுமை மாறாமல்.

நந்தினி ஒரு கணம் நடுங்கிப் போய் விட்டாள்.

முதல் முறையாய் அறைந்திருக்கிறான். இதுவரை அவனது வித்திர பழக்கங்களையும், மிரட்டல் பேச்சுக்களையும் பார்த்து பயந்தவளுக்கு தேவைப்பட்டால் அவன் கை நீட்டவும் செய்வான் என்பது நடுக்கத்தையே கொடுத்தது.

கண்களில் சட்டென நீர் துளிர்த்து அழுவது போல் அவள் முக பாவனை மாறியது. அதற்கும் முன் வந்து அவளை உற்றுப் பார்த்தவன், "ஷ் ஷ் இந்த அழுகை... விக்கல், விசும்பல் எல்லாம் இங்கு கூடாது. நிறுத்து முதலில்! அழுதால் இன்னொரு அறை விழும்" என்றான் மிரட்டலாய்.

அவள் சப்த நாடி ஒடுங்கினாள்.

"இப்போது என்ன சொல்லி விட்டேன். இந்த ஆடைகள் எல்லாம் எனக்குப் பிடிக்கும். அதுபடி அணிந்து வா என்கிறேன்! அதை விட்டு விட்டு எதிர்த்துப் பேசுகிறாய்? போ... போய் அணிந்து வா...! என் விருப்பப்படி நடப்பது தான் உன் வேலை...!"

அவள் பதில் பேசாமல் பல்லைக் கடித்தபடி திரும்பி நடந்தாள். இப்போது அவளுக்கு எல்லாம் புரிந்து விட்டது.

அவன் சொல்வது சரி. அவன் விருப்பப்படி நடப்பது தான் அவள் வேலை! அவளுக்கென்று மனமோ, குணமோ... கிடையாது. இருக்கவும் கூடாது.!

அவள் கையில் திணித்திருந்தது.. சினிமாவில் கவர்ச்சி நடிகைகள் அணிந்து வரும் சிறிய மினி ஸ்கர்ட்! இடுப்பிலிருந்து தொடைப்பகுதி

வகையுமே இருக்கக் கூடியது. வழியில்லாமல் சகித்துக் கொண்டு உடைகளை சுற்றி அதை அணிந்தாள். மேல் பகுதிக்கு ஸ்லீவ்லெஸ் பனியன் ஒன்று இருக்க... அதையும் அணிந்தாள். கண்ணாடியில் தன்னைப் பார்த்த போது அவளுக்கே கூசியது. இப்படி அரை குறை உடைகளோடு யாராவது பெண்கள் அவள் எதிரே நடமாடினால் முகம் சுளித்து அவர்கள் காது படவே ஏசியிருக்கிறாளே! இன்று அவளே அந்த ஆடைகளோடு...

வேறு வழியில்லாமல் கூனிக்குறுகி அவன் முன் போய் நின்றாள்.

அவன் அவளையே மேலும் கீழும் பார்த்தான்.

[illegible] ரசிப்பது போல் அவனது பார்வை பட அவள் மேலும் அவமானமாய் உணர்ந்தாள்.

சிறிது நேரத்தில் விடுவிடுவென உள்ளே ஓடிச் சென்று விட்டாள். மெத்தையில் விழுந்து அடக்க முடியாமல் அவள் கண்ணீர் விட்ட போது அதையும் அவன் ரசித்தான்.

நந்தினி கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

'என் நினைப்புப்படி நான் விரும்புகிறபடி தான் நீ இருக்க வேண்டும். நீ நடக்க வேண்டும்...' அடிக்கடி அவன் சொல்வது அவள் காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டே இருந்தது. அப்படியே தூங்கிப் போனாள் நந்தினி.

## 6

நந்தினி அன்றைய காலண்டர் தேதியை கிழிக்கும் போது கவனித்தாள். தேதி பத்தொன்பது. அவளுக்கு கல்யாணமாகி ஒரு மாதம் ஓடி விட்டது. நாட்கள் அப்படி இப்படியென வேகமாக ஓடி விட்டனவே.. என நினைத்தாள்.

அன்று காலை எழுந்தது முதலே வீட்டு நினைப்புகள் அவளை ஆக்கிரமித்துக் கொண்டது. அப்பா, அம்மா, தம்பி, தங்கைகள் என ஒவ்வொருவரையும் நினைத்தாள். அவர்களுடன் பேசியது, சண்டை போட்டது எல்லாம் நினைவலைகளாய் அவளுள் ஓடின. அந்த நாட்கள் திரும்பி வராதா என அவள் உள் மனம் ஏங்கியது.

உணர்ச்சிகள், எதையும் வெளிக்காட்டாதவாறு, வினோத்திற்கு தேவையான பணிவிடைகளைச் செய்து அவனை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தாள். அவன் அகன்றதும் அகலமான மொசைக் படிக்கட்டில் வந்து உட்கார்ந்தாள். கன்னத்தில் கை வைத்தபடி சுவரை வெறித்தாள்.

மீண்டும் வீட்டு நினைப்பு...

காலை நேரம்... இந்நேரம் வீட்டில் கலகலவென எப்படி இருக்கும்? ஒரு பக்கம் தாத்தா ரேடியோ பெட்டியை அலற விடுவார். இன்னொருபுறம் தம்பிகள் டி.வி.யில் கார்ட்டூன் சேனலின் சப்த ஒலியை அதிகரிப்பர். தங்கச்சிகள் இருவரும் டிரஸ்ஸுக்காக வம்பு பேசிக் கொண்டிருக்க.. இவளும் சமையலறையில் அம்மாவைச் சீண்டி விதண்டாவாதம் செய்து கொண்டிருப்பாள்...

நந்தினிக்கு நினைத்துப் பார்க்கையில் பழைய நினைவுகள் தித்திப்பாய் சுகமான அனுபவமாய்த் தெரிந்தது. அதையெல்லாம் விட்டுவிட்டு இப்படி வனாந்திரம் போல் பெரிய வீட்டில் அனாதையாய் உட்கார்ந்து கொண்டிருக்கிறோமே... என நினைத்தாள்.

எண்ணிப் பார்க்கும் போது ஒரு விஷயம் ஆச்சரியமாகவும் இருந்தது. கல்யாணம் என்ற சடங்கு அதுவரை அவள் அனுபவித்த சந்தோஷங்களை, இனிய உறவுகளை எப்படி வேரோடு பிடுங்கிப் போட்டு விடுகிறது.. என நினைத்தாள்.

எந்தப் பெண்ணுக்கும் பிறந்ததில் இருந்து இருபது இருபத்தைந்து வருடங்கள் தான் தாய் வீடு., உடன் பிறந்த சொந்தங்கள் எல்லாம்..! அதற்குப்பின் அதையெல்லாம் மறந்து விட வேண்டும். கல்யாணம் என்ற பெயரில் யாரோ முன் பின் தெரியாத ஒருவன் அவளை அடிமாட்டை இழுத்துச் செல்வது போல் இழுத்துச் சென்று விடுவான்.

கூடவே இருந்து தினம் தினம் பார்த்து மகிழ்ந்து கொண்டு இருந்த முகங்களை அதன் பின் அவள் பார்க்கவும் முடியாது. பிறகும் மன உணர்வுகளை எல்லாம் அடக்கி அவர்களை அவள் மறந்து விட வேண்டும். எப்போதாவது ஆறு மாதத்திற்கு ஒரு முறை வருடத்திற்கு ஒரு முறை என்று தான் அவளால் பார்க்க முடியும்.

விஞ்ஞான பூர்வமாய் வளர்ந்து வரும் உலகில் பெண்களுக்கு மட்டும் என்ன ஒரு நியதி. இந்த வழிமுறையை யாரும் மாற்ற மாட்டார்களா? என அப்பாவியாய் நினைத்தாள்.

வெறித்தபடி நினைத்தவளின் கண்களில் புக்ஷெல்ஃப் பக்கம் இருந்த டெலிஃபோன் தென்பட்டது. வீட்டுக்கு அடித்து பேசலாமே.. என எண்ணியவள் உற்சாகம் கிளம்ப எழுந்தாள்.

"கமலா எதுக்கு இப்படி மாமியாரை முட்டித் தள்ளுற மாதிரி பேசறா?"

"அவங்க மாட்டுப் பொண்ணுன்னு சொன்னதை தப்பாப் புரிஞ்சுட்டா!"

- ஆர்.ஜி.கலியாணி, நெல்லை



ஆவலாய் அவள் வீட்டு நம்பரை ரிசீவரில் சுழற்றினாள். மறுமுனையில் எடுத்தது அவள் அப்பாவே தான்! அவளுக்கு அந்நேரத்தில் அப்பா வீட்டில் இருந்து பேசியது பெரும் சந்தோஷத்தைக் கொடுக்க.. அந்த சந்தோஷத்தில் 'அப்பா..' என ஆரம்பித்து அவ்வளவையும் கொட்டி தீர்த்து விட்டாள்.

சதா வீட்டு நினைப்பு அவளை வாட்டுவதையும், அவர்களை எல்லாம் வந்து பார்க்கும் ஆசை தினம் தினம் அதிகரித்துக் கொண்டிருப்பதையும் உரைத்தாள்.

அவள் சொல்வது எல்லாவற்றையும் பொறுமையாய் கேட்டார் தந்தை சிவராம். அவரே அவளை ஆறுதல் படுத்தும் வகையில், ''இதோ பாரம்மா... கல்யாணமான புதிதில் இப்படித்தான் கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். ஆனால் எல்லாம் போகப்போக சரியாகி விடும். நீ இப்போது இங்கு வருவது நன்றாக இருக்காது. உனக்கும் ரொம்பத் தேடுகிறது என்கிறாய். வேண்டுமானால் ஒன்று செய்யட்டுமா?'' என்றார்.

''என்னப்பா?'' என்றாள் இவளும் ஆர்வமாய்.

''நம் கடைக்குட்டி வினுவிற்கு பத்து நாட்கள் லீவு தான். அவனை வேண்டுமானால் அங்கு ஒரு வாரம் அனுப்பி வைக்கிறேன். உனக்கு ஒரு ஆறுதலாக இருக்கும்.'' எனவும் இவளும் சந்தோஷமாய் சம்மதித்தாள்.

வினோத்திடம் விஷயத்தைச் சொன்ன போது ''ம்ம்.. வரட்டும்...'' என்றான். பின் கிளம்புகையில், ''பஸ் வரும் நேரத்தை கேட்டு தெரிந்து கொள். கார் அனுப்புகிறேன். நீயே போய் அழைத்து வந்து விடு..'' என்றான். இவள் உற்சாகமாய் தலையாட்டினாள். நம் வீட்டினர் மேலும் இவனுக்கு கரிசனம் இருக்கிறதே என உள்ளூர சந்தோஷமும் அவளுக்குத் துளிர்த்தது.

அப்பாவிடம் பஸ் டயம் கேட்டு பஸ் ஸ்டாண்ட் சென்று தம்பியை அழைத்து வந்தாள். 'கடைக்குட்டி வினு' என்று தான் பெயரே தவிர வினு நெடு நெடுவென வளர்ந்து பத்தாம் வகுப்பு படித்து வந்தான். நந்தினிக்கு கடைக்குட்டி என்பதால் இயல்பிலேயே அவன் மீது பாசம் அதிகம். சிறு வயதில் சதா அவனை இடுப்பில் தூக்கி வைத்தபடி ஓடியாடி விளையாடியது இன்னும் அவள் ஞாபகத்தில் இருக்கிறது.

ஒரு மாதம் எல்லோரையும் பிரிந்து தவித்தவளுக்கு வினு பெரும் ஆறுதலாய்த்தான் இருந்தான். காணாததைக் கண்டது போல் அவனைப் பார்த்து விடிய விடிய பேசினாள். வீட்டு விஷயங்கள் ஒவ்வொன்றாய் கேட்டாள். அவள் இல்லாத போது வீட்டில் நடந்தவைகளைக் கேட்க... கேட்க ஆசையாகவும், பெரும் ஏக்கமாகவும் அவளுக்கு இருந்தது.

வினுவையும் அவள் விடவில்லை. ஒரு இடம் விடாமல் சுற்றிக்



காண்பித்தாள். வினோத்திடம் அனுமதி கேட்டு பொட்டானிகல் கார்டன், அறிவியல் மையம், பிரதான மியூசியம் என ஒவ்வொன்றாய் கொண்டு போய் காண்பித்தாள். மூன்று நாள் எவ்வித சோதனையுமில்லாமல் மகிழ்ச்சியாகவே அவளது பொழுது கழிந்தது.

நாலாவது நாள்.... வழக்கம் போல் தம்பி வினுவிற்கு டைனிங் டேபிளில் காலை உணவை பரிமாறிக் கொண்டிருந்தாள். அப்போது தான் வினோத் உருவில் பெரும் சோதனை அவளுக்கு ஏற்பட்டது.

வினோத் குளித்து முடித்து டவலால் துவட்டியபடி வந்தவன் டக்கென அவள் பக்கம் வந்ததும் நின்றான். மேலிருந்து கீழ்வரை ஊடுருவுவது போல் அவளை ஒரு பார்வை பார்த்தான். அன்று அவள் தங்க நிற பூனம் ஸேரியை கட்டியிருந்தாள்.

காலை குளித்து முடித்து புதுமலராய் பளிச்சிட்ட அவளது அழகும், நளினமாய் உடலைத் தழுவியிருந்த சேலை அமைப்பும் ஒரு தேவதையைப் போல் அவளைக் காட்டின. அந்த அபரிமிதமான அழகில் வினோத் வியந்து ரசித்தவன் அப்படியே அவள் பின்புறமாய் வந்தான்.

சற்றும் எதிர்பாராத நேரத்தில் அவளை இறுக கட்டியணைத்தான். தம்பி வினு முன்னிலையில் அவன் இப்படி நடப்பது கண்டு நந்தினி பயங்கரமாய் திடுக்கிட்டாள். ''ஐயோ...! விடுங்கள்... தம்பி இருக்கிறான்...'' என திமிறியவாறு அவன் பிடியிலிருந்து விடுபட முயன்றாள்.

ஆனால் வினோத்தோ பிடிகளின் இறுக்கத்தைக் கூட்டினான். ''தம்பி இருந்தால் என்ன? எத்தனை சினிமாவில் அவன் பார்த்திருப்பான்?'' என்றபடி மேலும் அவளை இரும்புப் பிடியாய் அணைத்தவன், வேண்டுமென்றே அவள் இதழ்களில் முத்தமிடவும் செய்தான்.

நந்தினி அந்த இடத்தில் கூனிக் குறுகிப் போய் விட்டாள்.

தம்பி முன்னிலையில் அவன் இப்படி சல்லாபிப்பான் என அவள் கொஞ்சமும் நினைக்கவில்லை. என்ன ஒரு அசிங்கம் இது!

வெகுண்டு போய் முறைப்புடன் பார்க்க வினோத்தோ எகத்தாளச் சிரிப்புடன் அவள் இடுப்பை ஒரு தட்டு தட்டியபடி சர்வசாதாரணமாய் நடந்தான்.

அவன் சொன்ன வார்த்தைகளும் அவளுக்கு உரைத்தது. தம்பி இருந்தால் என்ன? அவன் சினிமாவில் பார்த்திருக்க மாட்டானா?

நிமிர்ந்து தம்பி முகத்தைப் பார்க்கவே அவளுக்குத் திராணியில்லை.

ஆனால் வினு எல்லாவற்றையும் புரிந்தவன் போல் குனிந்தபடியே விறுவிறுவென சாப்பிட்டு விட்டு எழுந்து போய் விட்டான்.

நந்தினி வேறு வழியில்லாமல் பொறுத்துக் கொண்டு வேலைகளைக் கவனித்தாள்.

ஆனால் வினோத் விட்டபாடில்லை. அடுத்து வந்த இரண்டு நாட்

சுயம் வேண்டுமென்றே அவளைச் சீண்டினான். தம்பி முன்னிலையில் டி.வி. பார்க்கும் போது அவளைப் பிடிவாதமாய் இழுத்து தன் மடியில் உட்கார்த்தி வைத்தபடி டி.வி. பார்க்கச் செய்தான்.

திகைத்து முறைத்தவளிடம், "கணவன் மடியில் மனைவி அமர்ந்து பார்ப்பது தப்பா?" என கேள்வியும் கேட்டான்.

இவளுக்கு வினு முன்னிலையில் அவன் இப்படி நடந்து கொள்வது முள் மேல் நடப்பது போல் இருக்கும். எழுந்து விலகலாம் எனப் பார்த்தால் அவன் பிடி இரும்புப்பிடியாய் இருக்கும்.

சரி... உட்கார்ந்து தொலைப்போம்... என்று நினைத்தால்... அவன் கைவிரல்கள் சும்மா இருக்காமல் சில்மிஷ சேட்டையை ஆரம்பித்துவிடும். விரல்களால் கழுத்து, கை, இடுப்பு பகுதி என வருடுவான். அவள் சங்கடத்தில் நெளிவது அவனுக்கு ரொம்பவும் ரசிப்பாகவும் இருக்கும்.

அதற்குமேல் அங்கு இருக்க முடியாமல் வினுவும் எழுந்து முன்னறைக்கு ஓடி விடுவான்.

அவன் வினு அகன்றதும் அவன் சேஷ்டைகளை நிறுத்தி அவளை விடுவித்து விடுவான்.

இப்படி இரண்டு மூன்று முறை வினு முன்னிலையில் அவன் காதலாய் சல்லாபிப்பதும், அவன் அகன்றதும் டக்கென விடுவிப்பதையும் கவனித்தவள், சந்தேகமாய் ஒரு விஷயத்தை உணர்ந்தாள்.

வேண்டுமென்றே அவன் இப்படிச் செய்கிறான் என்பது புரிந்தது.

எதற்காகச் செய்கிறான்? ஏன் இப்படிச் செய்கிறான்? என்பதை யோசித்தவளுக்கு பெரும் குழப்பமே மிஞ்சியது.

ஆனால் அவன் செய்கை மதியம் இரவு என வினு முன்னிலையில் தொடர்ந்தது.

அலுவலகம் முடிந்து வந்ததும் வினு முன்னிலையில் ரதியைப் பிரிந்த மன்மதன் போல் இறுக கட்டியணைப்பதும், வேண்டு

"இக்கால மாணவன் வருங்காலதூண் என்பர், இக்கால மாணவன் பற்றி..?"

"இன்றைய மாணவன் காதல் எனும் துரும்பை தூணாக்கி கூத்தாட்டம் போட்டு, ரசித்து.."

"போதும்... நிறுத்து!"

- என். குருமூர்த்தி, பெடமேசி





மென்றே அடிக்கடி அவளை அணைத்து கன்னங்களில் முத்தமிடுவதும் அதிகமாகிக் கொண்டே போனது.

நந்தினி பொறுக்க முடியாமல் அன்று தனியே அமர்ந்து ஸோஃபாவில் இசையை ரசித்துக் கொண்டிருந்தவனிடம் கேட்டாள்.

அவனும் இசையை முதலில் நிறுத்தினான் விநோத்.

"இப்போது... கேளு..." என்றான்.

"ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள்? என்னதான் தம்பி என்றாலும் அவன் முன்னிலையில் இப்படி அநாகரீகமாய் நடந்து கொள்வது...?"

அவள் முடிக்கும் முன்பே பெரிதாய் சிரிக்க ஆரம்பித்தான் அவன்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?" என்றாள் கோபமாய்.

"நந்தினி, நான் அப்படித்தான் நடந்து கொள்வேன். என்னால் நிறுத்த முடியாது. வேண்டுமானால் ஒன்று செய்வேன்..." என்றான் சலனமற்ற குரலில்.

"என்ன...?" என்பது போல் அவள் பார்க்க மெல்ல பழத்தில் ஊசியேற்றினான் அவன்.

"உன் தம்பி இங்கு இருப்பது தானே இதற்கெல்லாம் இடைஞ்சலாக இருக்கிறது...? பேசாமல் அவனை ஊருக்கு அனுப்பி விடு. பிரச்சனையெல்லாம் தீர்ந்து விடும்..."

பொட்டிலடித்த மாதிரி அவன் சொன்னபோது அவளுக்கு விஷயம் நன்கு உரைத்து விட்டது. அப்படியே திடுக்கிட்டுப் போனாள்.

ஆக... அவன் அப்படி சில்மிஷம் செய்து நடந்து கொண்டது... எல்லாம் காரணமாகத்தான்...!

அவள் தம்பியை விரட்டியடிக்கத்தான்... இப்படி விஷமமாய் நடந்து கொண்டிருக்கிறான்...!

என்ன ஒரு கல்நெஞ்சம்...!

அவள் தம்பி இரண்டு நாள் தங்கியிருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. அதற்காக அவன் முன்னிலையில் இப்படி ஒரு 'ரொமான்ஸ்' நாடகம்...! சே!

அலுத்தபடி சேர்ந்தவளைப் பார்த்து "இப்போது புரிகிறதா?" என அவன் விஷமச் சிரிப்புடன் கேட்டபோது அவனை எரித்துவிடுவது போலத்தான் நந்தினி பார்த்தாள்.

அவன் மேலும் சிரித்தபடி, "கோபப்படாதே நந்தினி நம் இருவருக்கும் இடையில் யாரும் கரடி போல் வரக்கூடாது. அதனால் தான் செய்கிறேன்..." என்றான் அமர்த்தலாக.

நந்தினி ஒன்றும் பேசவில்லை. மறுநாளே பத்துநாள் தங்க இருந்த தம்பி வினுவை ஐந்தே நாளில் ஊருக்குத் திருப்பி அனுப்பினாள்.

தம்பியை ஊருக்கு அனுப்பிவிட்டு அன்று முழுவதும் ஒருவித

வெறுமையான மனநிலையிலே இருந்தாள்.

அவனைப் பார்ப்பதை, அவனிடம் பேசுவதைத் தவிர்த்து நடமாடினாள்.

தனிமையில் சுவரை வெறித்தபடி எதுவும் தோன்றாமல் உட்கார்ந்திருந்தாள்.

ஆனால் இரவில் அவன் விடவில்லை. வேண்டுமென்றே திரும்பிப் படுத்தவளை தன் பக்கம் இழுத்தான். வேகமாக அணைக்கப் போனான்.

கைகளை தடுத்து கெஞ்சலாய்ப் பார்த்தவள், ''இன்று வேண்டாம். கொஞ்சம் அமைதியாய் இருக்க விடுங்கள்...'' என்றாள் மெல்லிய குரலில்.

தடுத்த கைகளைத் தட்டி விட்டபடி அவளை இழுத்து அணைத்தான். குனிந்து அவளது முகத்தை உற்றுப் பார்த்தான்.

''இன்று என்ன உனக்கு?'' என்றான்.

''அ... அது... அது... ஒரு மாதிரியாக இருக்கிறது...''

''ஒரு மாதிரியாக என்றால்...?''

''ஏதோ... ஒன்று... ஒரு வித சோகமான மனநிலை...''

''எனக்குத் தெரியும்... உன் தம்பியை ஊருக்கு அனுப்பி விட்ட வருத்தம். அப்படித்தானே?''

அவள் பேசாமல் இருந்தாள்.

அவன் சிரிக்க ஆரம்பித்தான்.

''இதோ பார் நந்தினி, உனக்கு அடிக்கடி என்னுடைய கொள்கை மறந்துவிடுகிறது என்று கொள்கைப்படி எனக்கு என் உணர்வு, என் விருப்பம் தான் முக்கியம். என் இஷ்டப்படி தான் நீ நடக்க வேண்டும். புரிகிறதா?'' என்றபடி தனது இரும்புப்பிடிக்குள் அவளை கொண்டு வந்தான்.

வழக்கம் போல் மனதையும் உடலையும் கல்லாக்கியபடி விட்டதை வெறிக்க ஆரம்பித்தாள் நந்தினி.

## 7

நந்தினி மறுநாள் அவன் அலுவலகம் சென்றதும் தோட்டத்துப் பக்கம் வந்து உட்கார்ந்தாள். கண்கள் விரிய ஒவ்வொன்றாய் யோசித்தாள்.

அவன் சொன்ன வார்த்தைகள் அப்படியே அவளது காதுகளில் ரீங்காரமிட்டது.


'என் இஷ்டப்படிதான் நீ நடக்க வேண்டும் நந்தினி.'

'என் இஷ்டப்படி...'

'என் நினைப்புப்படி...'

'பொஸஸிவ்நெஸ்' என்று ஆங்கிலத்தில் ஒரு வார்த்தையை அவள் கேள்விப்பட்டிருக்கிறாள்.





ஒருவர் மீது அதீத அன்பு கொண்டு தான் விரும்பும்படியெல்லாம் அந்த அன்பு கொண்டவர் நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது அது...

பணிந்து நடப்பது சரி. எத்தனை நாளைக்கு? எத்தனை வருடங்களுக்கு?

வாழ்க்கை முழுதுமா...?

வாழ்க்கை முழுதும் அவன் சொல் கேட்டுக் கொண்டு அடிமை போல் பணிந்து நடப்பாளா?

அவளால் அது முடியுமா?

யோசித்தவள் இது நாள் வரை நடந்த விஷயங்கள் ஒவ்வொன்றையும் பட்டியலிட்டுப் பார்த்தாள்.

ஒன்று அவளுக்குத் தெளிவாக புரிந்தது.

வினோத் அவள் உணர்வுகள் எதையும் மதிக்கவில்லை.

மதிக்கத் தயாராகவும் இல்லை.

சில நேரங்களில் அவன் நடந்து கொள்வதை அவளால் கொஞ்சமும் தாங்கிக் கொள்ள முடியாது. ரொம்பவும் மனமுடைந்து போவாள். பொறுக்க முடியாமல் அவனிடமே போய் கேட்போம் என விறாப்பாய் அவனிடம் செல்வாள்.

அன்றும் அப்படித்தான் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தவனிடம்,

"உங்களிடம் ஒன்று பேச வேண்டும்..." என்று ஆரம்பித்தாள். "தாராளமாய்ப் பேசுவோம். உட்கார் நந்தினி...." என்றான் அக்கறையாய்.

"என்ன விஷயம் நந்தினி?"

"அ... அது...அது..."

"சும்மாச் சொல் நந்தினி. என்னிடம் என்ன தயக்கம்?"

"நீங்கள்... நீங்கள்... ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள்?"

"இப்படி என்றால்...?"

"உங்கள் நினைப்புப்படியே நடந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிறீர்கள். என் உணர்வுகளைப் பற்றி கொஞ்சமும் மதிப்பதில்லை."

அவள் சொல்லும் போதே சிகரெட் ஒன்றை உருவி பற்ற வைப்பான். சட்சட்டென புகை வளையத்தை வேண்டுமென அவள் முகத்துப்பக்கம் ஊதுவான்.

"என்ன சொன்னாய்?" என்று திரும்பவும் காதில் விழாதவன் போல் கேட்பான்.

மறுபடியும் இவள் சொல்ல ஆரம்பிக்கும் போது சட்டென கையில் உள்ள டி.வி. ரிமோட்டால் டி.வி.யின் சப்தத்தை கூட்டுவான். அவள் பேசப் பேச டி.வி.யின் சப்தம் கூடிக் கொண்டே போகும்.

அவன் முகம் மட்டும் எவ்வித சலனமுமில்லாது, அவளை உற்றுப்பார்க்கும். காது கிழியும் சத்தத்தில் அவளால் என்ன பேச முடியும்? மேலும் சப்தத்தை சகிக்க முடியாமல் எழுந்து ஓடி விடுவாள் அவள்.

அவள் ஓடிச் சென்றதும் சிரிப்புடன் டி.வி.யின் சப்தத்தை குறைப்பான் அவன். அப்படி ஒரு குரூர ரசனை இருப்பதைக் கண்டு அவள் அதிரத்தான் செய்தாள்.

சில படங்களிலும் சில கதைகளிலும் சொல்வது போல் மன நிலை சரியில்லாத 'சைக்கோ'வாக இருப்பானோ? என்று கூட நினைத்தாள். அவள் அப்படி நினைப்பதை அறிந்தவன் போல் ஒரு நாள் அதற்கும் தேடி வந்து அவளுக்கு விளக்கம் கொடுத்தான்.

"நந்தினி, நான் நடந்து கொள்வதைப் பார்த்து நான் ஏதோ மன நிலை சரியில்லாத கிறுக்கனாய் இருப்பேனோ என்ற சந்தேகம் கூட உனக்குத் தோன்றும்? அப்படி நினைக்காதே... இது என் சுபாவம் அல்ல. சிறு வயதில் இருந்து நானே ஏற்படுத்திக் கொண்ட எனது குணம். எனது பிடிவாதம். உன்னை கல்யாணம் செய்யும் போதே முடிவெடுத்து விட்டேன். என் இஷ்டப்படி தான் நீ நடக்க வேண்டும். உன்னை ஆட்டி வைக்க வேண்டும் என்று. புரிகிறதா?"

அவன் கொடுத்த விளக்கம் அவளுக்கு தெளிவுபடுத்துவதற்கு பதில் பெரும் குழப்பத்தையே ஏற்படுத்தியது. ரொம்ப நாட்கள் தூங்காது, சிந்தித்தாள். இறுதியாய் திடமாய் ஒரு முடிவிற்கும் வந்தாள்.

இனி அவனை சகித்துப் போக முடியாது. அவனுடன் குடும்பம் நடத்த முடியாது என்று.

அவள் அப்படி மனதளவில் முடிவெடுத்த சமயம் தான், விதியும் வேறு ஒரு உருவில் உடம்பில் விளையாடியது.

8

நந்தினி இப்படி ஒரு விஷயத்தை கொஞ்சமும் நினைக்கவில்லை. நினைத்தும் பார்க்கவில்லை.

ஆனால் வழக்கமான பீரியட் தினங்கள் தள்ளிப்

"கோவில் நாவிதர், சந்தோஷத்துல தலை கால் தெரியாம குதிக்கிறாரே.. என்னாச்சு..?"

"தலைவருக்கே 'மொட்டை அடிச்சிட்டா ராம்..' அதான்"

- ஜக்கி, கோவை



போன போது தான் அதை உணர்ந்தாள். நாளாக நாளாக அது உண்மை தான் என உறுதி ஏற்பட்ட போது அவளுக்கு இனம் புரியாத உணர்ச்சியே ஏற்பட்டது.

குபீரென சந்தோஷம் ஒரு புறம் எழுந்தாலும், எந்த நேரத்தில் எந்த சூழ்நிலையில் இப்படி ஏற்பட்டிருக்கிறது என்பதை நினைத்த போது மனது வலித்தது.

அவனுடன் வாழவே முடியாது என்று திடமாய் முடிவெடுத்த சூழ்நிலையில் இப்படியொரு சோதனையா?

அன்று முழுவதும் தனிமையில் சிந்தித்தாள் டி.வி. விளம்பரங்களில் அவள் பார்த்த மழலை முகங்கள் எல்லாம் ஞாபகத்திற்கு வந்தன. அவளைப் பார்த்து சிரித்தன. ஆசையாய் கைகளை அசைத்தன. குண்டு கரு விழிகளாலும் பொக்கை சிரிப்பாலும் குறுகுறுவென அவைகள் பார்த்த போது நந்தினிக்கு மெல்ல மகிழ்ச்சி உண்டாயிற்று.

ஆசையாய் வயிற்றில் கை வைத்து தடவினாள்.

எவ்வளவு சந்தோஷமான விஷயம்...! இதற்குப் போய் கவலையாய் யோசித்துக் கொண்டிருந்தேனே என தன்னைத் தானே நொந்து கொண்டு உற்சாகமானாள்.

வேறொரு எண்ணமும் எழுந்து அவள் உற்சாகத்தை கூடியது.

வினோத் இப்போது சரியில்லை தான். அவளது உணர்வுகளை புரிந்து கொள்ளாத மரக்கட்டை தான்...!

ஆனால்... நாளை குழந்தை பிறந்த பின் அவனுக்கென ஒரு வாரிசு வந்த பின் அந்த மழலை முகம் பார்த்து அவன் மனம் மாறலாம் அல்லவா?

அப்படி மனம் மாறி, அவளது உணர்வுகளையும் புரிந்து கொண்டு அவளை சந்தோஷமாக வைத்துக் கொள்ளலாம் அல்லவா?

அந்த நினைப்பு சந்தோஷத்தை கொடுக்க வேதனைகள் மறந்து புது உற்சாகம் கொண்டாள்.

மதியம் அலுவலகம் முடிந்து வருபவனிடம் விஷயத்தை சொல்லி விட வேண்டும் என தீர்மானித்தாள். வீட்டிற்கு போன் அடித்து விஷயத்தை சொல்ல வேண்டும் என துடித்து துளிர்த்த ஆவலை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

மதியம் வினோத் வந்த போது அவன் முகக்குறிப்பையே உற்று கவனித்தாள். அவன் சிரித்த படியே வந்தது அவன் நல்ல மூடில் இருப்பதை அவளுக்கு உணர்த்திற்று.

மெல்ல அவன் பக்கம் போனவள் அவன் கைகளைப் பற்றி தன் வயிற்றுப் பக்கம் கொண்டு போய் மெத்தென வைத்தாள்.

வினோத் ஒரு கணம் புரியாமல் விழித்தான். வந்ததும் வராததுமாய் இவள் என்ன செய்கிறாள் என்று திகைப் படைந்தவன், அவள் முகத்தில் தெரிந்த அளவற்ற மகிழ்ச்சியையும், கண்கள் தாழ அவள் வெட்கப்படுவதையும் ஆச்சரியமாய் உற்றுக் கவனித்தான்.



மறுகணமே அவன் முகம் மாறியது. அவளை வினோதமாய் பார்த்தவாறு தனது கைகளை அவள் வயிற்றில் இருந்து எடுத்துக் கொண்டான்.

''என்ன நந்தினி, சினிமாவில் வரும் கதாநாயகி போல் கையை எடுக்கிறாய். வயிற்றில் வைக்கிறாய். நாணிச்சிரிக்கிறாய். என்னவாயிற்று உனக்கு?''

மிதமான கோபத்துடன் அவன் கேட்டாலும் அவள் மகிழ்ச்சியோடு முத்துப்பற்கள் தெரிய சிரித்தாள்.

''புரியவில்லை உங்களுக்கு?

''புரியவில்லை...

தலையை வேகமாய் உலுக்கியபடி அவன் பதில் சொன்னான்.

''கொஞ்சம் யோசியுங்கள். உங்களுக்குப்புரியும்...!''

அவள் கைகளைக் கட்டியபடி குறும்பாய் பார்த்த போது அவன் முகத்தில் எரிச்சலே படர்ந்தது.

''நிறைய வேலை இருக்கிறது. நீயாகச் சொல்லு. இல்லையென்றால் விடு...''

அவன் அதே அவசரத்துடன் அகலப் போனான்.

''ஐயோ, இருங்கள். இது முக்கியமான விஷயம். நீங்கள் அப்பாவாகப் போகிறீர்கள்...''

அவள் பட்டென கொட்டி விட்டு அவன் முகத்தையே ஆவலாய்ப் பார்த்தாள்.

அவள் சொன்னதைக் கேட்டு ஒரு கணம் வியப்பால் விரிந்த அவனது முகம் மறுகணமே மாறியது. எந்தவித சலனமும் இல்லாமல் அவளைப் பார்த்தான்.

''நிஜமாகவா சொல்கிறாய்?''

''நிஜம் தான். இன்றுடன் நாற்பத்தியெட்டு நாள்.''

அவன் அதன் பின் ஒன்றும் பேசாமல் டைனிங்டேபிள் பக்கம் சென்றான்.

நந்தினிக்கு அவன் உற்சாகம் கொள்ளாதது ஏமாற்றமாயிருந்தாலும் வெளிக்காட்டாமல் அவளும் பின்னாலே சென்று உணவு வகைகளை எடுத்து வைத்தாள். ஆசையாய் பரிமாறினாள்.

வினோத் ஒரு வித சிந்தனையுடனே சாப்பிட்டு முடித்தவன் எழுந்து கைகளை அலம்பித் துடைத்தபடி முன் ஹாலுக்கு வந்தான்.

அவன் ஏதோ பேசப் போகிறான் என்று உணர்ந்த நந்தினி, பின்னால் வந்து நிலைப்படி அருகே நின்றாள்.

''நந்தினி...!'' மெல்லிசாய் கூப்பிட்டபடி அவள் முகத்தை உற்றுப் பார்த்தான்.

அவன் முகத்தில் தெரிந்த ரேகைகள் அவளுக்கு ஏதோ விபரீதத்தை உணர்த்தியது. பயத்தோடு பார்த்தாள்.

''நந்தினி இப்போது இது தேவையில்லை என நினைக்கிறேன்.

நீ என்ன நினைக்கிறாய்?'' என்றான் உணர்ச்சியில்லாமல்.
''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்றாள் நடுங்கும் குரலில்.
''கல்யாணமான முதல் வருஷத்திலேயே குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டுமா? கொஞ்சம் யோசித்துப் பார்...!''
அவள் பதறிப்போய் ஏதோ சொல்ல வந்தாள்.
அவன் கைகளை உயர்த்தினான்.
''விளக்கம் சொல்ல வேண்டாம் நந்தினி. நான் சொன்ன கோணத்தில் யோசித்துப்பார். உனக்குப்புரியும்...''
நந்தினி ஒன்றும் பேசாமல் அவனையே உற்றுப் பார்த்தாள். அவளது பார்வையில் முறைப்பு கூடியது.
வினோத் திரும்பி வந்து அவள் முன் கை கட்டி நின்று பார்த்தான்.
''நீ என்ன சொல்ல வந்தாய்... சொல்லு...?''
''தாய்மை பெண்ணுக்கு அழகு. நீங்களும் புரிந்து கொள்ளுங்கள். எந்தப் பெண்ணும் தகுந்த காரணமில்லாமல் தன் முதல் சிசுவை அழிக்க நினைக்க மாட்டாள்.''
''தீர்க்கமான குரலில் சொல்லி விட்டு நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். இந்த விஷயத்தில் என்ன ஆனாலும் சரி பின் வாங்கி விடக்கூடாது. அவனுக்கு பணிந்து விடக்கூடாது என்பதில் உறுதியாய் இருந்தாள்.
''நந்தினி நான் என்ன சொல்கிறேன் என்றால்...''
இம்முறை அவன் வார்த்தைகளை முடிக்கும் முன் அவள் கைகளை உயர்த்தினாள்.
''நீங்கள் ஒன்றும் சொல்ல வேண்டாம். இந்த விஷயத்தில் நான் ரொம்பவும் தெளிவாய் உறுதியாய் இருக்கிறேன். எனக்கு குழந்தை வேண்டும். கண்டிப்பாக வேண்டும்.''
''அவன் அவளது துணிச்சலை எதிர்பார்க்காததால் திகைத்துப் போய் முகம் மாறினான்.''
''நான் விரும்பாவிட்டாலும்மா...?''
''ஆமாம்...'' என்றாள். அவள் அழுத்தந்திருத்தமாய்.
''என் இஷ்டத்தை மீறியா?''
கொஞ்சம் உஷ்ணமாகவே அவன் குரல் ஒலித்தாலும் அவள் சட்டை செய்யாது தலையை பலமாய் ஆட்டினாள்.
அவன் பேசாமல் கண்களை உருட்டி அவளையே முறைத்தான்.
அவன் முறைத்துப் பார்ப்பதை உணர்ந்த நந்தினிக்கும் சினம் அதிகமாயிற்று. ''அடுத்து...'' இவன் என்ன செய்வான். செவிட்டில் இரண்டு அறை அறைந்தாலும் அறைவான்...? ''ஆனால் இந்த விஷயத்தில் எக்காரணம் கொண்டும் பின் வாங்கக் கூடாது!'' என கோபமாய் நினைத்தவள், அந்த நினைப்பிலே வேகமாய் சிந்தித்து மற்றொரு முடிவும் எடுத்தாள்.

''இதோ... பாருங்கள்...'' என்றாள் ஆவேசமாய்.
வினோத் அவளை நோக்கி கண்களை இடுக்கினான்.
''இந்த விஷயத்தில் நீங்கள் சம்மதிக்காவிட்டால், இன்று முதல் நான் எதுவும் உண்ணமாட்டேன். நானும் எனது சிசுவும் பட்டினி கிடந்தே செத்து விடுவோம். இது... எனது உறுதியான முடிவு...!''
தீர்க்கமான குரலில் அவள் சொன்ன போது வினோத் அதிர்ந்துதான் போனான்.
அவனுள் ஆக்ரோஷமான துடிப்பு அதிகரித்தது. கைகளைப் பிசைந்தபடி கோபமாய் குறுக்கும் நெடுக்கும் நடந்தான். ''என்னையே மிரட்டுகிறாயா?'' என கர்ஜித்தான்.
அவளும் விடாமல் கைகளைக் கட்டியபடி கோபமாகவே நின்றாள்.
கடைசியில் ஒன்றும் சொல்லாமல் வேகமாய் அலுவலகம் கிளம்பிப் போனான் அவன்.

## 9

நந்தினிக்கு அவனது நடவடிக்கை அதிர்ச்சியாகத்தான் இருந்தது. ஆனாலும் இதை துணிச்சலாய் எதிர்கொள்ள தீர்மானித்தாள்.
முதலில் இந்தப் பிரச்சினையை வீட்டுக்கு சொல்லி விடுவோம் என்று நினைத்தாள்.
ஆனால்... மறுகணமே அது அவர்களுக்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்தாள். தான் சந்தோஷமாக மண வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பதாய் நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த விஷயம் எவ்வளவு அதிர்ச்சியை ஏற்படுத்தும்... துடித்துப் போய் விடுவார்களே... என பயந்தாள்.

''மாமா உங்க பொண்ணை நான் நல்லா வெச்சிருக்கேன்.. ஆனா கண்கலங்காம மட்டும் பார்க்க முடியல!''
''ஏன் மாப்பிளே!''
''சீரியல் நிறைய பார்க்கிறா மாமா! பார்க்காதேன்னாலும் கண்கலங்குறா மாமா!''
- ஆர்.ஸ்ரீ.அம்பிகைராமன், திசையன்விளை



மேலும் விஷயம் தெரிந்து அப்பாவோ வேறு யாருமோ வந்து வினோத்திற்கு அறிவுரை சொன்னால் அவன் அவர்களை அவமானப் படுத்திவிடக் கூடாதே... எனவும் அஞ்சினாள்.

எல்லாவற்றையும் விட.... இது தனது பிரச்சினை, தானே எதிர் கொண்டு சமாளிக்க வேண்டும் என்ற பக்குவமும் தனக்கு வரவேண்டும் என உறுதியாய் நினைத்தவள் திடமான மனதோடு நிமிர்ந்து கொண்டாள்.

எப்படியும் இந்த விஷயத்தில் வினோத்தை எதிர்த்து போராடட வேண்டும்... அதற்கு பட்டினி கிடந்து தனது கோபத்தைக் காட்டுவது ஒன்றுதான் வழி என முடிவிற்கும் வந்தாள்.

தனது முடிவை மறுநாள் முதல் செயல்படுத்த ஆரம்பித்து விட்டாள்.

மறு நாள் காலை பச்சைத் தண்ணீர் கூட அருந்தாமல் தனது உண்ணாவிரதத்தை தொடங்கினாள் நந்தினி.

வினோத்திற்கு முதலில் இது புரியவில்லை. மதியம் உணவருந்த வந்தபோது தான் காலை அவன் சாப்பிட்டது போக மீதி உணவு வகைகள் அப்படியே இருப்பது கண்டு அவள் உண்ணாவிரதத்தை தொடங்கிவிருப்பதை கண்டுபிடித்தான்.

"என்ன நீ சாப்பிடவில்லையா?" என்றான் நெற்றியைச் சுருக்கியவாறு.

இவள் வாய் திறக்காமல் தலையை மட்டும் மெல்ல அசைத்தாள்.

"எதற்கு?" என்ற படி அவள் பக்கம் வந்து கண்களை சுழற்றியவன் உதடுகளில் இறுக்கத்துடன் குனிந்த அவளது நிலையைக் கண்டு புரிந்து கொண்டான்.

"ஓ... நீ... அதற்காக உண்ணாவிரதம் தொடங்கி விட்டாயா?" ஏளனமாய் கேட்டவன் தோள்களைக் குலுக்கியபடி வேகமாய் காரை நோக்கி நடக்க ஆரம்பித்தான். பெருஞ்சிரிப்பு அவனது திசையில் இருந்து எழும்பியது.

அவன் போவதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் நந்தினி.

ஆயினும் பிடிவாதமாய் அவளது 'உண்ணாவிரதம்' மதியம், இரவு மறுநாள் என தொடர்ந்தது.

முதல் நாள் ஓரளவு தாக்குப்பிடிக்க முடிந்தவளுக்கு மறுநாள் முடியாமல் போனது.

கண்களில் கிறக்கம், தலை சுற்றல், உடல் சோர்வு என ஒவ்வொன்றாய் உருவாக ஆரம்பித்தது.

சில சமயங்களில் நடக்க ஜீவனில்லாமல் அவள் உடம்பே நடுங்கியது.

அன்று மாலை ரொம்பவும் சோர்ந்து தளர்ந்து போனவளாய் கீழே விழும் நிலைக்குப் போய் விட்டாள். ஆயினும் உறுதி குறையாமல்



அவனுக்கு டேபிளில் டிபன் எடுத்து வைத்துவிட்டு கைகளைக் கட்டியபடி பிடிவாதமாய் முகத்தில் இறுக்கம் காட்டி நின்றாள்.

டிபனைச் சாப்பிட்டு வினோத் காபியைப் பருகியவன் கண்களை இடுக்கியபடி அவளையே உற்றுப் பார்த்தான்.

"ஏய்,,," என்றான்.

அவள் வேண்டுமென்றே காதில் விழாதது போல் இருந்தாள்.

'ஹேய்... உன்னைத்தான்..." என்று அழுத்தமாய் அவன் கூப்பிட்டபோது அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

"இன்னும் நீ சாப்பிடாமல் தான் இருக்கிறாயா...?"

அவள் முகத்தில் உணர்ச்சியைக் காட்டாமல் தலையை மட்டும் அசைத்தாள். அது மட்டும் தான் அவளால் செய்ய முடிந்தது. பேசும் திராணியே கொஞ்ச நேரத்தில் போய் விடும் போல் இருந்தது.

ரொம்பவும் பலஹீனமாய் உணர்ந்தவள். அதை கொஞ்சமும் வெளிக்காட்டக்கூடாது என்பதிலும் பிடிவாதமாய் இருந்தாள். துணிச்சலாய் நெஞ்சு நிமிர்த்தி வீராப்புடன் இருக்கும் அவளை உற்றுப் பார்த்தபடி வினோத் எழுந்து வந்தான்.

அவன் முகத்தில் ஒருவித எரிச்சலான அருவை படர்ந்தது. கடுமையாகவே அவளைப் பார்த்தவன்", இதோ பார்... இப்படியே உன்னைப் பட்டினி போட்டு கொல்லும் அளவுக்கு நான் ஒன்றும் கொடுமைக்காரனில்லை..." என்றான் கோபமாக.

நடுங்கும் கைகளால் சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தவன் அப்படியே குறுக்கும் நெடுக்குமாய் வேகமாய் நடந்தான்.

டக்கென நின்றான்.

"இப்போ உனக்கென்ன குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டும் அவ்வளவு தானே?"

அவள் அதற்கும் வாய் பேசாமல் தலையசைத்தாள்.

அவனை அது எரிச்சல் படுத்தியது.

"வாயைத் திறந்து பதில் சொல்..." என்றான் கத்தலாய்.

"அ... அ... ஆ... மா... ம்..."

"ஹீம்... பெற்றுத் தொலை...! இந்த ஒரு விஷயத்தில் உனக்கு அனுமதி கொடுக்கிறேன். ஆனால் ஒன்று. அதற்காக நான் உனக்கு பணிந்து விட்டேன் என்று மட்டும் நினைக்காதே. இப்போதும் நான் அனுமதித்து என் இஷ்டப்படிதான் நீ குழந்தை பெற்றுக் கொள்ளப் போகிறாய்... புரிகிறதா?"

சொடுக்கிட்ட படி கோபமாய் பேசியவன் அதே வேகத்தோடு அங்கிருந்து அகன்றான். தாரை தாரையாய் கண்ணீர் பெருக சந்தோஷமாய் அழ ஆரம்பித்தாள் நந்தினி.

## 10

நந்தினிக்கு குழந்தை விஷயத்தில் அவனிடம் சம்மதம் வாங்கிவிட்டாலும் மனம் என்னவோ வலித்துக்

கொண்டே இருந்தது.

இந்த மகிழ்ச்சியான விஷயத்திற்கு கூட உடலை வருத்தி அவள் எவ்வளவு போராட வேண்டியிருந்தது? தனக்கு ஒரு வாரிசு வரப்போகிறது என்று மகிழ வேண்டியவன் இந்தப் பாடு படுத்தி விட்டானே!

இனி இவனால் எப்படி இவளை புரிந்து கொள்ள முடியும்? இல்லை, அவள்தான் அவனுடன் எப்படி குடும்பம் நடத்த முடியும்?

முன்பு கூட குழந்தை என்று ஒன்று பிறந்தால் அவன் மனநிலை மாறும் தம் வாழ்க்கை சந்தோஷமாகிவிடும் என்றெல்லாம் கனிவாய் நினைத்திருந்தாளே!

ஆனால் குழந்தை பெற்றுக் கொள்வதற்கே இந்த வரத்து வருகிறவன், நாளை குழந்தை பிறந்ததும் கொஞ்சவா போகிறான்? இல்லை நல்லவனாய் மனம் மாறி விடத்தான் போகிறானா?

இல்லையே இரண்டும் நடக்கக் கூடிய விஷயமாகவே தெரியவில்லையே...!

பின் எதற்காக இவனுடன் வாழ வேண்டும்?

கோபமாக சிந்தித்தவள் இவனை விட்டு அகன்று விட வேண்டும். இவனில்லாத ஒரு வாழ்க்கையை வாழ பழகிக் கொள்ள வேண்டும் என்று தீர்மானமாய் முடிவெடுத்திருந்ததை எல்லாம் நினைத்துப் பார்த்தாள்.

இப்போதும் அவளால் அப்படியொரு முடிவை எடுக்க முடியும். வீட்டில் அப்பா அம்மாவிடம் கூட விஷயத்தைச் சொன்னால் சரி என அவளுக்காக விட்டு விடுவார்கள்.

ஆனால் இன்னொரு முக்கியமான விஷயம் இருக்கிறதே? இப்போது அவள் தனி ஆள் இல்லையே இன்னொரு ஜீவனும் அல்லவா அவளுடன் ஒட்டிக் கொண்டு இருக்கிறது?

ஆசையாய் கை வைத்து வயிற்றைத் தடவியவள் வேதனையோடு நினைத்தாள். நாளை இந்தப் பிஞ்சு வெளி வந்து உலகத்தைப் பார்க்கும் போது அவள் அவனை விட்டு பிரிந்து வாழ்க்கை நடத்தினால் என்ன ஆகும்? அந்தப் பிஞ்சு வளர வளர, எல்லோரையும் போல் எனக்கு அப்பா இல்லையா? அவர் எங்கே எங்கே?'' என்று ஏங்க

''நமது படை ஆயுதங்கள் எப்படி இருக்கிறது மந்திரியாரே''

''துரு, துருன்னு இருக்கு மன்னா''

ஏ.பி.ஆர். புனிதா, ரமேஷ், நல்கலரம்.





ஆரம்பித்து விடுமே!

அதற்காகவாவது, அந்தப் பிஞ்சின் எதிர்காலத்திற்காகவாவது அவள் அவனுடன் சேர்ந்து வாழவேண்டும். அது கொஞ்ச வருடங்கள் என்றால் கூட போதும்...

மனம் விரக்தியாய்த்தான் அன்று முழுவதும் யோசித்தவள் ஒருவித வெறுமையான மனநிலையிலே அன்று முழுவதும் நடமாடினாள்.

மாலை, 'ப்ரைடே மார்க்கெட்' என சொல்லப்படும் வெள்ளிக்கிழமை சந்தைக்கு காய்கறிகள் வாங்க கிளம்பியபோது அவள் மனதை சந்தோஷப்படுத்தும் சம்பவம் ஒன்று அங்கு நடந்தது.

காரிலிருந்து இறங்கி வரிசையான சந்தைக் கடைகளில் தேவையான காய்கறிகளை கூடையில் பொறுக்கி எடுத்துக் கொண்டிருந்த போது யாரோ தன் தோளை படபடவென தட்டுவது கண்டு திகைப்பாய்த் திரும்பினாள்.

பார்த்தவளுக்கு பயங்கர ஆச்சரியம்!

அங்கு அவளது பள்ளித் தோழி நிர்மலா! பத்தாம் வகுப்பு வரை அவள் உடன் படித்து இரண்டு மூன்று வருடங்களில் சொந்த மாமாவைக் கட்டிக் கொண்டு சென்னை, சென்றவள் அப்போது ஒல்லியாய் சிகப்பாய் இருந்தவள் இப்போது சற்று கருத்து... உடம்பு குண்டடித்து தலை முடியில் சில நரைத்துப் போய் இவள் நிர்மலாதானா? என்ற சந்தேகத்தை நந்தினிக்கு எழுப்பியது.

''நீங்க... நீ... நீ... நிர்மலாதானே? என்றாள் திணறலாய்.

அவள் நிர்மலா சிரிப்பு பொங்க அவள் தோளைத் தட்டினாள். ''என்ன அதற்குள் மறந்து போச்சா? நான் அதே 'சுட்டி நிர்மலாதான்!' என்றாள் சிரிப்பை நிறுத்தாமல்

படபடவென கேள்விகளால் துளைக்க ஆரம்பித்த நிர்மலாவை 'உன்னிடம் நிறைய பேச வேண்டும் வா' என்று பக்கத்தில் இருந்த ரெஸ்ட்டாரண்ட் ஒன்றிற்கு கூட்டிச் சென்றாள் நந்தினி.

காபியை ஆர்டர் செய்து விட்டு இருவரும் உட்கார்ந்தார்கள்.

''முதலில் உன் கதையைச் சொல்...'' என்றாள் நந்தினி.

நிர்மலா சிரிக்க ஆரம்பித்தாள்.

''என்ன சிரிக்கிறாய் நிர்மலா?''

''நந்து'' என்றபடி நிர்மலா ஆரம்பிக்க, தனது செல்லப் பெயரை அவள் கூப்பிடும் அழகை ரசித்தவள் அவள் சொல்வதை ஆர்வமாய் கேட்க ஆரம்பித்தாள்.

''நந்து... நான் படிப்பை நிறுத்தி விட்டு சொந்த மாமாவை கட்டிக் கொண்டு போன விஷயம் தான் உனக்குத் தெரியுமே? அவருக்கு அரசாங்க கிளார்க் வேலை. ஊர் ஊராக ட்ரான்ஸ்பர் ஆகி கடைசியில் இந்த ஊருக்கு வந்தோம். இங்கு வந்து ஒரு வருடம் ஆகி விட்டது. இன்று தற்செயலாய் உன்னை சந்தையில் பார்த்ததும் எவ்வளவு சந்

தோஷமாய் இருக்கிறது தெரியுமா?'' நிர்மலா முகம் மலரச் சொல்லியவள் அவளையே ஓரிரு நிமிடம் உற்றுப் பார்த்தாள்.

''என்ன அப்படிப் பார்க்கிறாய் நிர்மலா?''

''நந்து... நீ மாறவே இல்லை. அப்படியே இருக்கிறாய்...'' என்றாள் நிர்மலா சிரிப்புடன்.

''அப்படியே இருக்கிறேனா... என்ன சொல்கிறாய்?''

''நான் உன் அழகைச் சொன்னேன் கல்யாணமாகியும் கட்டுக்கோப்பாய் அதே நளின உடல் அழகுடன் அதே முகக்கவர்ச்சியுடன் அன்று பார்த்தது போலவே இருக்கிறாய்...''

இம்முறை நந்தினி சிரித்தாள்.

''நீ மட்டும் என்ன நிர்மலா? நன்றாகத்தானே இருக்கிறாய்?'' என்றபடி நந்தினி அவளை அளவெடுத்த போது அவசரமாய் தடுத்தவள், ''வேண்டாம் என்னையெல்லாம் அப்படிப் பார்க்காதே உடம்பும் ஊளைச் சதையுமாய் கண்ணாடியில் பார்க்க எனக்கே சகிக்கவில்லை'' என்றாள் சிரிப்பும் கேலியும் பொங்க.

இருவரும் மனம் விட்டு சிரித்தனர்.

சூடான காபியை பருகியபடி வந்தவளாய் அவளை உற்றுப் பார்த்தாள்.

''ஆமாம் நந்து, நீ உன்னைப் பற்றி இன்னும் ஒன்றுமே சொல்லவில்லையே? நீ உன்னைப் பற்றி நிறுத்திவிட்டு யாரோ பெரிய தொழிலதிபர் ஒருவரை கட்டிக் கொண்டாய் என்று மட்டும் நம் தோழி ஒருத்தி மூலம் கேள்விப்பட்டேன். யார் அவர்? உன் குடும்ப வாழ்க்கையைப் பற்றி கொஞ்சம் சொல்லேன் என்றாள் நிர்மலா ஆவலும் ஆர்வமுமாய்.

நந்தினியின் முகம் மாறியது. அவள் கொண்டிருந்த உற்சாகமும் சந்தோஷமும் அவளையறியாமல் குறைந்தது. சுவாரஸ்யமில்லாமல் அவள் உதடுகளை பிதுக்கிய போது நிர்மலா ஆச்சர்யமாய் அதை கவனித்து அவள் பக்கத்தில் வந்து விட்டாள்.

''என்ன நந்து, நீ சந்தோஷமாக இல்லையா?'' என்றாள் குரலில் பரிவு பொங்க.

நந்தினிக்கு ஒருகணம் என்ன சொல்வதென்றே தெரியவில்லை. மெல்ல தலையசைக்க மட்டும் செய்தாள்.

அந்த சிறு தலையசைப்பே நிர்மலாவுக்கு ஓராயிரம் சந்தேகங்களை எழுப்பியது.

''நான் இப்படி நினைக்கவே இல்லையே நீ நல்ல வசதியுடன் சந்தோஷமாக வாழ்வாய் என்றல்லவா நினைத்தேன்!'' என்றாள் ஆற்றாமையாய்.

''வசதி இருக்கிறது. சந்தோஷம்தான் இல்லை'' என்றாள் நந்தினி வெறுப்பாக.

''என்ன சொல்கிறாய் நந்து? கொஞ்சம் விவரமாய் புரியும்படி



சொல்லு!'' என்றாள்

''அதை உன்னிடம், இல்லை யாரிடமாவது சொல்லாவிட்டால் என் தலையே வெடித்து விடும் போலிருக்கிறது'' என்று நந்தினி சொன்ன போது, ''அவ்வளவு சிரமமா உனக்கு? எதையும் வெளிக்காட்டாத கல்லுளி மங்கினியாய் அல்லவா முகத்தில் சிரிப்பை வைத்துக் கொண்டிருக்கிறாய். முதலில் விஷயத்தைச் சொல்லு, உன் பாரம் குறையும்'' நிஜ அக்கறையோடு ஆற்றாமையாய் அவள் கேட்க, கல்யாணமான முதலிரவில் இருந்து நேற்று நடந்தது வரை ஒன்றுவிடாமல் சொல்ல ஆரம்பித்தாள் நந்தினி.

எல்லாவற்றையும் பொறுமையாய்க் கேட்ட நிர்மலா விசித்திரமாய் அவளைப் பார்த்தாள், ''என்ன சொன்னாய் குழந்தை ஆசை கூட இல்லாமல் வேண்டாம் என்று சொல்கிறாரா அவ்வளவு கல்நெஞ்சா அவருக்கு?'' என்றாள்.

''அது... அது... அப்படி கூட இல்லை நிர்மலா''

''பின் எப்படி?''

''அவருக்கு எல்லாமே அவர் நினைப்புப்படி அவர் இஷ்டப்படி தான் நடக்க வேண்டும் என்கிற பிடிவாதம். மனைவியான எனக்கு உணர்வோ மனம் என்ற ஒன்றோ இருக்கக் கூடாது என்பது அவரது கொள்கை...''

''இது என்ன விசித்திரமாய் இருக்கிறதே?''

''இப்படியேதான் நானும் கேட்டேன். அதற்கு என்ன பதில் சொன்னார் தெரியுமா?''

''என்ன சொன்னார்?''

''துபாய் போன்ற அரபு நாடுகளில் பெரும் செல்வந்த ஷேக்குகள் மனைவிகளை இப்படித்தான் நடத்துகிறார்களாம். ஒரு பணக்கார ஷேக் ஐந்தாறு பெண்களை மணமுடித்து மனைவியாக்கிக் கொள்வானாம். அந்த ஐந்து பெண்களும் அவனது அடிமைகள் போல் அவன் சொன்னதையெல்லாம் கேட்டு நடப்பார்களாம். அவர்களுக்கென்று எந்த விருப்பமும் கிடையாதாம். இருக்கவும் கூடாதாம். மீறி எந்தப் பெண்ணும் நடந்து கொண்டால் 'தலாக்' சொல்லி விலக்கி வைத்து விடுவார்களாம்...''

''ஓஹோ... கதை அப்படிப் போகிறதா? அப்படி என்றால் உன் கணவர் தன்னை அரபு ஷேக் போல நினைத்துக் கொள்கிறாரா? என்றாள் நிர்மலா கண்கள் விரியும் வியப்புடன்.

''அது அப்படியில்லை நிர்மலா அந்த ஷேக்குகள் தங்கள் மனைவிமார்களை நடத்துவதைப் போல் தான் எல்லா ஆண்களும் தங்கள் மனைவிகளை நடத்த வேண்டுமாம். பெண் வர்க்கமே போகப் பொருளாய் ஆண்கள் விருப்பத்திற்காக கடவுளால் படைக்கப்பட்டவை என்பதே அவர் பைத்தியக்காரத்தனமாய் மனதில் கொண்டிருக்கும் வாதம் எண்ணம்''

''நீ சொல்வது சரிதான் சுத்தப் பைத்தியக்காரத்தனம் தான்'' என்று தலையை ஆட்டி ஆமோதித்தாள் நிர்மலா.

இருவரும் கொஞ்ச நேரம் எதுவும் பேசாமல் அமைதி காத்தார்கள்.

நிர்மலா நெற்றியை சுருக்கியவாறு அவளையே பார்த்தாள்.

''என்ன நிர்மலா அப்படிப் பார்க்கிறாய்?''

''உன் கணவர் படித்தவர்தானே?'' இரவு நேரத்தில் அப்படி மிருகம் மாதிரி நடந்து கொள்கிறார்... நீ எதிர்ப்புகாட்ட வேண்டியது தானே...?''

''இல்லை நிர்மலா. இரும்புப்பிடி அவர் பிடி. மேலும்...''

''சொல்லு...''

''நான் எதிர்ப்புக்காட்டினால் அவள் மூர்க்கமாகிவிடுவார். பின் அடி உதைதான். என் நிலைமை இன்னும் மோசமாகிவிடும்''

''அதுவும் சரிதான். நீ சொல்வதைப் பார்த்தால் அதையும் செய்யக்கூடியவர்தான் ஆமாம் இதுவரை அவர் உன்னை அடிக்கவில்லையே கை நீட்டும் பழக்கம்''

அவள் வார்த்தையை முடிப்பதற்குள், ''அடித்திருக்கிறார்... ஒரு முறை... என்றாள் நந்தினி மெல்லிய குரலில்.

''என்ன அடித்திருக்கிறாரா? எதற்காக... எதற்காக?'' என்றாள் நிர்மலா பரபரப்புடன்.

நந்தினி, அவர் நாகரீக உடை என்ற பெயரில் குட்டை பாவாடை, ஸ்கர்ட்டுகளை அணியச் சொன்னதையும், அதற்கு தான் மறுத்ததால் செவிட்டில் அடித்ததையும் விளக்கினாள்.

''ஐயோ நீ ரொம்பவும் பாவம் நந்தினி'' என்றாள் நிர்மலா. கூடவே, இதையெல்லாம் நீ பொறுத்துக் கொள்வது ரொம்பவும் தப்பு'' என்றாள்.

''மன்னர் முல்லைக்கு தேர் கொடுத்தேன்னு பீத்திக்கிட்டாரே.. இப்பதான் உண்மை வெளிய வந்திருக்கு..''

''ஏன் என்னாச்சு?''

''முல்லைங்கிறது மன்னரோட புது செட்டப்பாம்...''

-கோவை ஜி.எம்.சண்முகம்.





''பின் என்ன செய்யச் சொல்கிறாய்?''

''இதையெல்லாம் பிடிவாதமாய் எதிர்க்க வேண்டும். மீறிப் போனால் துணிச்சலாய் நீயே வேண்டாம் என உன் கணவரை விட்டு விலகிட வேண்டியது தான்''

''அப்படி ஒரு முடிவும் எடுத்துப் பார்த்தேன்!''

நிதானமாய் நந்தினி சொல்ல ''என்ன அதற்கும் துணிந்து விட்டாயா?'' என்றாள் நிர்மலா புருவம் உயரும் ஆச்சரியத்துடன். ''நந்து, ஒரு பேச்சுக்குத்தான் நான் சொன்னேன். உண்மையிலே அவ்வளவு தூரம் நீ வெறுத்துப் போய் முடிவெடுத்து விட்டாயா?''

உதடுகளை அழுந்தக் கடித்தபடி மெல்ல தலையசைத்தாள் நந்தினி.

''நான் அப்படி ஒரு முடிவெடுக்க துணிந்த போதுதான் வயிற்றில் ஒரு வாரிசு உருவாகிற விஷயம் எனக்கே தெரிந்தது பின் நான் என்ன செய்ய முடியும்?''

''நீ சொல்வது சரி'' பலமாய் ஆமோதித்தாள் நிர்மலா.

மீண்டும் ஒருவித அமைதி நிலவியது.

நிர்மலா எதையோ யோசித்தவளாய் நிமிர்ந்தாள்.

''நந்து, எனக்கு ஒரு சரியான வழி தோணுகிறது''

''என்ன வழி?''

''முதலில், உனக்கு இந்த யோகா மையம், தியானப் பயிற்சி, வாழும் கலை போன்ற விஷயங்களில் ஆர்வம் உண்டா?''

சொல்லு!'' என்றாள்.

நந்தினி மைவிழிகளை அகல விரித்தவள்'', நிறையக் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் எங்கும் சென்றதில்லை. எதற்கு கேட்கிறாய்?''; என்றாள் வியப்பு தோன்றியவளாய்.

''நந்து, எனக்குத் தெரிந்த யோகாப் பெண்மணி ஒருவர் இருக்கிறார். அவர் சமூக சேவையில் மிகுந்த ஈடுபாடு கொண்டு, பிரச்சினைகளுடன் வருபவர்களுக்கு நல்ல வழிகாட்டி பிரச்சினையைத் தீர்த்து வைக்கிறார். நீ ஒருமுறை அவர்களை சந்தித்தால் நன்றாக இருக்கும் என என் மனதுக்கு தோன்றுகிறது நீ என்ன நினைக்கிறாய்?''

நிர்மலா ஆவலாய் கேட்டபடி நந்தினியைப் பார்க்க நந்தினிக்கு அந்த யோசனை சரியாகவே பட்டது. ''உனக்கு ஒன்றும் சிரமம் இல்லையே?'' என்றாள் அவளை சங்கடப்படுத்தக் கூடாது என்ற நோக்குடன்.

''ஊஹூம்...! எனக்கு ஒன்றும் சிரமம் இல்லை. என்ன பேசுகிறாய்? என் உயிர்த்தோழி நீ! உனக்கு செய்யாமல் வேறு யாருக்கு செய்யப்போகிறேன்?'' என்றபடி பக்கத்தில் வந்து நந்தினியை தோளோடு அணைத்துக் கொண்டாள்.

''நாளை இதே நேரம் நீ வந்து விடு. நாம் இருவரும் அந்தப் பெண்மணியை சந்திப்போம்...'' என்றாள் நிர்மலா.

## 11

நிர்மலா சொன்னதோடு நிற்காமல் மறுநாளே நந்தினியை அந்த யோகாப் பெண்மணியிடம் கூட்டிச் சென்று விட்டாள்.

சாந்தமும் புன்னகை தவழும் முகமுமாய் இருந்த அந்தப் பெண்மணியை பார்த்ததுமே நந்தினிக்கு பிடித்துப்போய் விட்டது. தனது வீட்டின் கூரை வேய்ந்த மாடிப் போர்ஷனில் தியான மையமும், பிரச்சனைகளுக்கு தகுந்த ஆலோசனை வழங்கும் உதவியையும் சமூக சேவையாய் செய்து வந்த அந்தப் பெண்மணியை ஆச்சரியமாகவே பார்த்தாள்.

அந்தப் பெண்மணியின் பெயர் சரஸ்வதி அம்மாள். அறுபது வயதைத் தாண்டியிருந்தாலும் சுறுசுறுப்பு குறையாமல் அன்பொழுக ஆர்வமும் அக்கறையுமாக பேச ஆரம்பித்தாள்.

நந்தினி எந்தவித சங்கோஜமுமில்லாமல் தனது பிரச்சனை முழுவதையும் ஒன்று விடாமல் சொல்ல ஆரம்பித்தாள். பொறுமையாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்ட சரஸ்வதி அம்மாளின் முகம் நீண்ட சிந்தனைக்குப் போயிற்று.

சிறிது நேர மவுனத்திற்கு பின் சரஸ்வதி அம்மாள் நந்தினியையே உற்றுப் பார்த்தாள்.

''என்ன அம்மா அப்படிப் பார்க்கிறீர்கள்?'' என்றாள் நந்தினி.

''ஒரு விஷயம் எனக்குப்புரிந்து விட்டது நந்தினி''

''என்ன விஷயம் அம்மா?''

''உன் கணவருக்கு உன் மீது அன்பு இல்லை. வெறுப்பு தான் இருக்கிறது என்று தானே நீ உணருகிறாய்?''

''ஆமாம் அம்மா...''

''அதே போல் உன்னை யோசித்துப்பார்.''


''என்னையா? என்ன சொல்கிறீர்கள் அம்மா?''

புரியாதவளாய் திகைத்தவளை சாந்தமாய்ப் பார்த்தவள்,

''நந்தினி நீ உன் கணவர் மீது அன்பு வைத்திருக்கிறாயா?'' அன்பை வெளிப்படுத்துகிறாயா? என்று யோசித்துப் பார்! அவரைப் பார்க்கும் போதெல்லாம் அவரது செயல்களால் அவர் மீது வெறுப்பு தானே உனக்கு ஏற்படுகிறது? அதை மீறி அவரிடம் அன்பு செலுத்துகிறாயா எனக்காக கொஞ்சம் யோசித்துப் பார்த்து பதில் சொல்லம்மா!'' என்றாள் சரஸ்வதி அம்மாள் கனிவுக்குரலில்.

அந்த கேள்வி ஒரு கணம் நந்தினியை திகைத்து ஸ்தம்பிக்கவே வைத்தது.

சரஸ்வதி அம்மாள் சொல்வது எவ்வளவு பெரிய உண்மை. அவர்கள் சொல்வது போல் வினோத் அவளிடம் கடுமையாய் வெறுப்புடன் நடந்து கொள்வது சரி தான். பதிலுக்கு அவள் எப்



படி நடத்து கொள்கிறான்?

அன்பாகவா...?

இல்லையோ? அவன் செய்கைகளைப் பார்த்ததும் புன்னகையெல்லாம் மறந்து உம்மென்ற இறுக்கத்தோடு தானே அவளும் அலைகிறாள்? அதற்கு இறுக்கமான முகத்தை வைத்துக் கொண்டு அவளால் எப்படி அவனிடம் கனிவாய் பேச முடியும்? அப்படி கனிவாய்ப் பேச அவள் நினைத்தோ, முயற்சித்தோ பார்க்கவும் இல்லையே!

"நீங்கள் சொல்வது நிஜம் தான்" பவ்யமாய் தலையாட்டினாள் நந்தினி. கூடவே, "நீங்கள் சொல்லும் கோணத்தில் நான் யோசித்தே பார்க்கவில்லை அம்மா. அவரைப் பார்த்தாலே ஒரு வித பயமும் வெறுப்பும் தான் என்னையறியாமல் தோன்றி விடுகிறது" என்றாள்.

சரஸ்வதி அம்மாள் சிரித்தபடி நந்தினியின் கைகளை ஆதரவாய் பிடித்துக் கொண்டாள். "அது இயற்கை தான். அதனால் தப்பு ஒன்றும் இல்லையம்மா. ஆனால்"

"சொல்லுங்கள்"

"உன் பிரச்சனைக்கு மூல காரணமே அந்த விஷயம் தான். நீ நினைப்பது போல் உனக்கு ஏற்பட்டிருக்கும் சங்கடங்களுக்கு அந்த அன்பின் வெளிப்பாடு இல்லாமை தான் காரணம். உங்கள் இருவரில் யாராவது ஒருவர் அபரிமித அன்பு செலுத்தினால் பிரச்சனை எல்லாம் சரியாகி விடும்."

"அபரிமித அன்பா என்னம்மா சொல்கிறீர்கள்?"

"அது வேறொன்றுமில்லை. அன்பு தான் நந்தினி. இந்த உலக சிருஷ்டியின் முக்கிய ஆதாரமே அன்பு தான். அந்த அன்பு மூலமாகத் தான் சந்தோஷம், மகிழ்ச்சி, இன்பம் என எல்லா விஷயங்களையும் நம்மால் பெற முடியும். நீ உன்னுடைய ஒவ்வொரு செயலிலும் உன் கணவர் மீது நீ வைத்திருக்கும் அன்பை உணர்த்த வேண்டும். அவரும் அதை உணரும்படி செய்ய வேண்டும். இப்படி நடந்தால் உன் பிரச்சனைகள் எல்லாம் சரியாகி விடும்."

"ஆனால் அம்மா..."

"சொல் நந்தினி..."

"அவரிடம் ஒரு மிருகத்தனமான மூர்க்க குணமும் இருக்கிறதம்மா"

"எல்லாவற்றையும் அன்பால் மாற்றிவிட முடியும் நந்தினி"

"மேலும்"

"ம்ம் சொல்லம்மா"

"பெண் என்றாலே ஒரு போகப்பொருளாய், பெண்களைப் பற்றிய மட்டமான ஒரு எண்ணமும் ஆழமாய் அவர் மனதில் பதிந்திருப்பதை உணர்ந்திருக்கிறேன் அம்மா"

நந்தினி சொல்ல பலமாய்த் தலையாட்டினாள் சரஸ்வதி அம்மாள். "நீ சொல்வது சரியாக இருக்கலாம் நந்தினி. உன் கணவருக்கு மனதில் அப்படியொரு எண்ணம் தீவிரமாய் இருப்பதால் உன்னை அவர் இப்



படி நடத்தக் கூடும். அது எதனால் என்பதை உனது அன்பான ஆறுதலான பேச்சால் நீ தொடர்ந்து முயற்சி செய்தால் கண்டும் பிடித்து விடலாம். எல்லாம் உன்கையில், நீ நடந்து கொள்ளும் விதத்தில் தான் இருக்கிறது நந்தினி"

சரஸ்வதி அம்மாள் தன் பேச்சை முடித்து விட்டார்கள். அம்மாளின் பேச்சு நந்தினிக்கு உரைத்து புரிய வைத்தது. மெல்ல தலையசைத்தாள். அவள் மனதில் அன்பு செலுத்துவது பற்றிய தீவிர சிந்தனையொன்றும் ஓட ஆரம்பித்தது.

## 12

நந்தினி வீட்டிற்குத் திரும்பி விட்டாள். சரஸ்வதி அம்மாள் சொன்ன விஷயங்கள் எல்லாம் அன்று முழுவதும் அவள் மனதில் ஓடிக் கொண்டே இருந்தது.

சரஸ்வதி அம்மாள் சொன்ன ஒரு உண்மைக்கதையும் அவளை சிந்திக்க வைத்தது. ஆறு மாதங்களுக்கு முன்பு ஒரு பெண் தனது கணவன் தினம் குடித்து விட்டு வந்து அடித்து உதைக்கிறான். அவனுடன் குடும்பம் நடத்தவே முடியவில்லை என்ற பிரச்சினையுடன் வந்தாளாம்.

அவளுக்கும் இதே போல் அன்பு செலுத்த சொல்லி சரஸ்வதி அம்மாள் அறிவுறுத்த, அந்தப் பெண்ணும் அதே போல் கணவன் மீது அபரிமிதமான அன்பு செலுத்தினாளாம். அவள் அன்பு செலுத்த செலுத்த மிகுந்த ஆச்சரியம் கொள்ளும் அளவுக்கு அவளது கணவன் கடுமையைக் குறைத்து சிந்திக்க ஆரம்பித்தானாம். நாளடைவில் குடிப்பழக்கத்தையே நிறுத்திவிட்டானாம். இன்று அவர்கள் இருவரும் அன்பான கணவன் மனைவியாய் குடும்பம் நடத்துகிறார்களாம்.

இப்படியெல்லாம் நடப்பதை கேட்க நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் நடைமுறையில் இது சாத்தியப்படுமா என்றே நந்தினிக்கு

"என் கணவர் வாரத்திற்கு ஒரு நாள் கோழிக்கறி சமைத்துக் கொடுக்கச் சொல்றார்!"

"ஏதாவது திருடிட்டு ஜெயிலுக்குப் போகச் சொல்லு..! தவறாம வாரத்திற்கு ஒரு நாள் கிடைக்கும்."

- எஸ்.மாரியப்பன், தேனி



குழப்பமாய் இருந்தது.

ஆனால் அதற்கும் சரஸ்வதி அம்மாள் விடாமல், "குடிகார கணவனையே ஒரு பெண் அன்பு செலுத்துவது மூலம் திருத்தி விட்டாள். அப்படி இருக்கும் போது கடுமையாக உள்மனதைப் புரியாமல் நடக்கும் கணவனை அன்பால் திருத்துவது ரொம்பவும் சுலபம் நந்தினி" என்றாள்.

நந்தினி கண்களை விரித்து யோசிக்கவும், "நந்தினி, நான் இப்படி அன்பு, அன்பு செலுத்து என்று சொல்வதெல்லாம் உனக்கு ஒரு குழப்பத்தைக் கூட ஏற்படுத்தும். உனக்கு தெளிவுபடுத்த, அன்பைப் பற்றி நீ தெளிவாய் புரிந்து கொள்ள உனக்கு ஒரு புத்தகம் தருகிறேன். அதை படித்துப் பார். நான் சொன்னதை விட பல மடங்கு விஷயங்கள் உனக்குப் புரிந்துவிடும்" என்றாள் சிரிப்புடன்.

"புத்தகமா? அப்படி என்ன புத்தகம் இருக்கிறது?" என்றாள் நந்தினி குழப்பம் விலகாமல்.

சரஸ்வதி அம்மாள் சிரிப்பு மாறாமல், 'திருக்குறள் கையடக்க புத்தகம்' ஒன்றை நந்தினியின் கைகளில் திணித்தாள்.

"நான் சொன்ன புத்தகம் திருக்குறள் தான். அன்பைப் பற்றி திருவள்ளுவரை விட வேறு யாரும் இவ்வளவு அழகாக சொல்லியிருக்க முடியாது. படித்துப் பார். உனக்கே எல்லாம் புரியும்!"

சரஸ்வதி அம்மாள் சொன்னதெல்லாம் ஞாபகத்திற்கு வர வீட்டில் வேலைகளை முடித்து யோசனையுடன் இருக்கையில் அமர்ந்த நந்தினி அந்த திருக்குறள் புத்தகத்தை எடுத்துப் பார்த்தாள். அன்பு அதிகார பகுதியை எடுத்து படித்துப் பார்த்தாள். அதில், "அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து இன்புற்றார் எய்துஞ் சிறப்பு" என்னும் குறள் நந்தினியை மிகவும் கவர்ந்தது.

அதாவது, 'உலகில் இன்பமாக வாழ்கின்றவர்கள் பெறக்கூடிய சிறப்பு, அன்பு செலுத்தி வாழும் வாழ்க்கை தான்! அதன் மூலம் தான் இன்பமான ஒரு வாழ்க்கையை அவர்கள் பெற முடியும் என்கிற உண்மை. இரண்டு வரிகளில் அழகாக சொன்ன வள்ளுவரின் குறளை நினைத்து வியந்தவள் 'அன்பு' பற்றியே யோசிக்க ஆரம்பித்தாள்.

'அன்பு' எத்தனையோ வகைகளில் வெளிப்படும். அன்பை எத்தனையோ வழிகளில் உணர்த்தலாம். ஆனால் கணவன் மனைவிக்கு இடையில் ஏற்படும் அன்பு சரியான வழிமுறை இல்லாமல், சில சமயம் வெளிப்படுத்த இயலாமலே போய் விடுகிறது என்பதையும் உணர்ந்தாள். நம் நாட்டின் எழுதாத சட்டப்படி மனைவி கணவனுக்கு அடங்கி, அவன் சொல்படி நடக்க வேண்டும் என்பது சில வேளைகளில் மனைவியை அடிமையாகவே ஆக்கிவிடுகிறது.

அப்படி மனைவி அடிமை போன்ற நிலையை அடையும் போது அன்பு என்கிற பேச்சுக்கே இடமில்லாமல் கடுமைத்தனத்தில் அடி, உதை எல்லாம் சாதாரணமாகிப் போய் விடும் போது பெரும்



வெறுப்பே இருவரிடமும் மிஞ்சுகிறது.

இது போன்ற வெறுப்புச் சூழ்நிலையில், சரஸ்வதி அம்மாள் சொல்வது போல் யாராவது ஒருவர் அன்பை வெளிப்படுத்த வேண்டும். அப்படி வெளிப்படுத்தும் போது தான் கடுமைத்தனம் மறைந்து, அன்பின் மகத்தான சக்தியை இனிமையாய் புரிந்து கொள்ள முடியும்.

எண்ண அலைகளை ஒழுங்குபடுத்தி ரொம்பநேரம் சிந்தித்த நந்தினி தன் மனதில் ஒவ்வொன்றாய் பட்டியலிட்டாள். முதலில் அவள் நினைவு படுத்தி தேர்ந்தெடுத்தது புன்னகை. அழகாக இதழ் விரித்து செய்யும் அன்பான சிரிப்பு. விநோத் வரும் போது, அவனைப் பார்க்கும் போது, அவனது பார்வையில் படும் ஒவ்வொரு நேரமும் அவள் சிரிக்க வேண்டும்! சிரித்த முகமாய் இருக்க வேண்டும்!

அன்பிற்கான வாசல், அன்பிற்கான முதல்படி புன்னகைதான்! அதிலிருந்து அவள் விநோத் மீது கொள்ளப் போகும் 'அபரிமிதமான அன்பை' ஆரம்பித்து முடிவெடுத்தாள்.

அன்று மதியம் உணவருந்த வந்தபோது இதழ்களை விரித்து இனிமையாய் சிரித்தபடி அவனை வரவேற்றாள். புன்னகை மாறாமலே உணவு வகைகளை எடுத்துப் பரிமாறினாள். விநோத் அவளை ஓரக்கண்ணால் விநோதமாய்ப் பார்த்தபடி சாப்பிட்டான்.

அவன் ஏதாவது கேட்டாலும் அதற்கும் சிரிப்பு பொங்கவே பதிலளித்தாள். அப்படி எதற்கெடுத்தாலும் புன்னகையுடன் சிரித்த முகமாக இருப்பது முதலில் நந்தினிக்கே ஓரளவு கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால் புன்னகையால் உற்சாகமும் சந்தோஷமுமான மனநிலை தனக்கு ஏற்படுவதை உணர்ந்தாள்.

அந்த புன்னகை முகம் இரவு, மறுநாள் என தொடர்ந்தது. அவள் அப்படி திடீரென மாறி 'புன்னகை முகமாய்' இருப்பதை விநோத் உணர்ந்தவன், அதை உறுதிபடுத்திக் கொள்வதற்காகவே கோபமாயும் சில கேள்விகள் கேட்டுப் பார்த்தான்.

அதற்கும் அவள் சிரிப்பு மாறாமல் பதில் கூறவும் அவனுக்குப் புரிந்து விட்டது. அன்று இரவு அவளை அணைத்தபடி முத்தமிட்டான். திரும்பவும் இறுக அணைத்து முத்தமிட்டு விடுவித்தான்.

மற்ற நேரங்களில், முன்பெல்லாம் அவன் இப்படிச் செய்யும் போது அவள் முகத்தில் ஒருவித வெறுப்பும், இதழ்களில் ஒரு எளனமும் குபுக்கென பரவும். அதை விநோத் கவனித்து வேண்டுமென்றே அவளை மீண்டும் இறுக அணைத்து தனது இரும்பு பிடிக்குள் வைத்தபடி அவளுக்கு எரிச்சலூட்டுவான்.

ஆனால் இப்போது அவள் சிரித்தபடி 'புன்னகை முகமாய் இருந்தது அவனை ரொம்பவும் ஆச்சரியப்படுத்தியது. அவளை அதிசயமாய்ப் பார்த்தவன் தனது கரங்களால் அவள் முகத்தை நிமிர்த்தி உற்றுப் பார்த்தான். அப்போதும் அவள் சிரிப்பு மாறாமல் அவனைப்

பார்த்தான்.

''நீ நன்றாகத்தானே இருக்கிறாய்?'' என்றான்.

''ம்ம்... நன்றாக மகிழ்ச்சியுடன் இருக்கிறேன்'' என்றாள் அவள் இன்னும் முறுவலித்தபடி.

''உனக்கு ஒன்றும் ஆகவில்லையே?''

''இல்லையே'' என்றாள் அவள் இரு கைகளையும் விரித்து குழந்தை போல்.

''பின் ஏன் அடிக்கடி சிரித்துக் கொண்டு லூசு போல் அலைகிறாய்? உன் மண்டையில் நட்டு ஏதும் கழன்று விட்டதா?''

கண்களை உருட்டியபடி அவன் கேட்க, அவள் அதற்கும் பதில் சொல்லாமல் பொங்கும் சிரிப்பு சிரித்தாள்.

அவள் அப்படிச் சிரிப்பதையே உற்றுப் பார்த்தவன் அதற்கு மேல் பொறுமையிழந்தவனாய் முகத்தை அருவையாய் வெட்டியபடி திரும்பிப் படுத்துக் கொண்டான்.

நந்தினி ஒரு கணம் அவனையே உற்றுப் பார்த்தாள்.

தனது புன்னகை முகத்தால் அவனது செய்கையும் மாற ஆரம்பித்திருப்பதை உணர்ந்தாள்.

வழக்கமாய் இரவு அவன் பக்கத்தில் வந்து படுத்ததும் அவளை இறுக மூச்சு முட்டுமளவுக்கு அணைத்து முத்தமிடுவான். விரல்களால் அவள் புருவத்தை கன்னங்களை எல்லாம் வருடி அழகு பார்ப்பான். மனம் ஒட்டாமல் இந்த சரஸமெல்லாம் எதற்கு? என்ற நினைப்புடன் வெறுப்பாய் அவள் முகம் மாறும் போது வேண்டுமென்றே அவள் உதடுகளில் அழுத்தமாய் முத்தமிட்டு அவள் திணறுவதை ரசிப்பான். இந்த சில்மிஷ சேட்டைகள் முடிந்ததும் பெரிய மன்மதன் போல் அவனது மார்பில் நெஞ்சார அவளை சாய்த்துக் கொண்டு தூங்க ஆரம்பித்து விடுவான். அவனது கைகள் இரும்புப்பிடியாய் அவளை வளைத்து அவன் நெஞ்சோடு அழுத்தியிருக்கும். அவன் முழுவதும் தூங்கிய சூழ்நிலைக்கு போனபின்தான் அவளால் அவனது பிடியிலிருந்து விடுபட முடியும். நந்தினியும் அவன் கைகளை விலக்கிவிட்டு தூங்க ஆரம்பிப்பாள்.

இது வழக்கமாய் தினமும் இருவருக்கும் நடக்கும் விநோத லீலைதான். ஆனால் இன்று? அவளை அணைத்த போதும், முத்தமிட்ட போதும் அவள் முகத்தில் வெறுப்பைக் காட்டாமல் புன்னகைத்தது. அவனை திகைக்க வைத்தது மட்டுமில்லாமல், அவன் முரட்டுத்தனமான வழக்கத்தையும் மாற்றி விட்டது.

வழக்கம் போல் அவளை மேலும் எரிச்சலூட்ட முத்தமிட்ட, நெஞ்சோடு இரும்புப்பிடி போட்டு தூங்குகிறவன் இன்று அப்படிச் செய்யாமல் விட்டுவிட்டான்.

அவளையே திகைத்து வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தவன் அதிசயத்தவாறே தூங்கப் போனான்.

அப்படி தூங்க நினைக்கையில் சட்டென இன்னொரு மனம் அவனிடம் விழித்துக் கொண்டது.

அணைப்பது, நெஞ்சார தழுவி கிடப்பது கூட அன்புதானே? கணவன் மனைவிக்கு இருக்கும் அன்பின் வெளிப்பாடுதானே?

என்ன, அவன் அதை முரட்டுத்தனமாய் செய்கிறான். வெளிப்படுத்துகிறான்

அதையே அன்பாகச் செய்தால்...?

நந்தினி யோசித்தவள் மெல்ல தன் கரங்களை எடுத்து மென்மையாக அவனை அணைத்தாள்.

நிம்மதியாக தூங்க ஆரம்பித்தாள்.

## 13

நந்தினி ரொம்பவே மாறியிருந்தாள். விநோத்தான் தினம் தினம் அவளைப் பார்த்து அதிசயித்துக் கொண்டிருந்தான். காலையில் எழுந்தவன் தன்னை கரங்களால் அணைத்தபடி கிடக்கும் அவளை வைத்த கண் மாறாமல் பார்த்தான்.

பதிலுக்கு அவள் இனிமையான புன்முறுவலுடன் 'குட்மார்னிங்' சொன்ன போது அவனையறியாமல் புன்னகைத்தான்.

நந்தினி அவனின் 'புன்னகையை' உற்று நோக்கினாள். அவளுக்குத் தெரிந்து அவன் முதன் முதலாக அவளைப் பார்த்து புன்னகைப்பது இப்போது தான் என்று தோன்றியது.

அதுவே பெரிதும் மகிழ்வை கொடுக்க அன்று முழுவதும் அந்த உற்சாகத்துடனே நடமாடினாள். ஆனால் அவளது உற்சாகம் அவனுக்கு எரிச்சலை தந்திருக்க வேண்டும்.

காலையில் அலுவலகம் கிளம்ப காரில் ஏறப்போனவன் திரும்பி கண்களை உருட்டி அவளைப் பார்த்தான்.

''இங்கு...வா...'' என்றான்.


''டேய் சோம்பேறித்தனத்துக்கு உனக்கு யாராவது முதல் பரிசு கொடுத்தா நீ என்ன செய்வே?''

''யாரையாவது ஒருத்தரை அனுப்பி வாங்கிட்டு வரச் சொல்லுவேன்''

- முருகேசன், தேனி.




இவள் மலர்ந்த சிரிப்பை மேலும் மலர விட்டவாறு அவன் பக்கத்தில் போனாள்.

''இப்படி எதற்கெடுத்தாலும் சிரித்துக் கொண்டு போஸ் கொடுக்கிறாயே... இதற்கு என்ன அர்த்தம்?''

அவள் அதற்கும் பதில் பேசாமல் சிரித்தாள்.

''என்னைக்கேலி செய்கிறாயா?''

''ஐயோ! அப்படியெல்லாம இல்லை'' என்றாள் அவள் ஒரு கணம் பதறிப்போனவளாய்.

''பின் என்ன காரணம்?''

'' ஒரு புத்தகத்தில் படித்தேன். கணவன் முன் மனைவி எப்போதும் சிரிப்புடன் இருக்க வேண்டும். நல்ல குடும்ப வாழ்க்கைக்கு அது அழகு என்று''

''ஓஹோ'' என்றபடி அவன் தோளைக் குலுக்கிய போது அவள் தலை தாழ்த்தி குனிந்து கொண்டாள்.

வினோத் அதற்கு மேல் ஒன்றும் பேசாது காரிலேறி விருட்டென சென்று விட்டான்.

நந்தினி அதற்காக தனது சிரிப்பைக் குறைக்கவில்லை. புன்னகை முகமாகவே நடமாடினாள். தனது சிரிப்பு அன்பைத் தவிர வேறு எந்த தொனியையும் ஏற்படுத்தி விடக்கூடாது என்பதற்காக கண்ணாடி முன் நின்று சிரித்து வேறு பார்த்தாள். பூவிதழ் சிரிப்பு, முத்துப்பல் சிரிப்பு, கன்னக்குழி சிரிப்பு என ஒவ்வொரு வகையாய் சிரித்துப் பார்த்து அடக்கமான, அமர்த்தலான சிரிப்பு ஒன்றை தேர்வு செய்து அதன்படியே சிரிக்க முடிவும் செய்தாள்.

வெறும் சிரிப்பில் மட்டுமல்ல தனது ஒவ்வொரு நடவடிக்கையிலும் அவனுக்கு அன்பை உணர்த்த எண்ணினாள். காலையில் எழுந்து பாத்ரூம் செல்லும் அவனுக்கு ரூமில் தயாராய் டூத் பிரஷ்ஷிலிருந்து சகலமும் எடுத்து வைத்திருப்பாள். குளித்து முடித்து வரும் அவனுக்கு தயாராய் டைனிங் டேபிளில் உணவு காத்திருக்கும். சமையற்கார அம்மாளை ஒதுங்கச் சொல்லி விட்டு தன் கைபடவே சமைத்தாள். அதுவும் அவனிடம் கேட்டு கேட்டு அவனுக்கு பிடித்தமான உணவு வகைகளைப செய்ய ஆரம்பித்தாள்.

புரியாத போது கடைக்குச் சென்று குக்கிங் ரெசிபி புத்தகங்களை வாங்கி தெளிவுபட சமைக்கும் கலையை கற்றுக் கொண்டாள்.

உடைகளை விஷயத்திலும் அவனுக்குப் பிடித்தமான மஞ்சள், பச்சை நிற உடைகளையே தேர்வு செய்து தயாராய் எடுத்து வைத்திருப்பாள். வினோத் பொதுவாக தனது தேவைகளுக்கு தானாகவே யாரையும் எதிர்பார்க்காமல் செய்து பழக்கப்பட்டவன். திடீரென ஒவ்வொரு விஷயத்திலும் இவள் குறுக்கிட்டு உதவும் போது, ''இதெல்லாம் எதற்கு நீ செய்கிறாய்? நானே பார்த்துக் கொள்கிறேன்'' என மறுத்தான்.



ஆனால் நந்தினி விடாமல் பிடிவாதமாகவே இருந்தாள். அவனுக்குச் சேவை செய்யவே பிறந்தவள் போல் ஓடியாடி நடமாடினாள். அலுவலகம் கிளம்பும் அவனுக்கு தன் கையாலே பாலீஷ் போட்டு கறுப்பு நிற ஷூவை அவன் கால்களில் மாட்டி விட்டு விட்டு தான் தன்னைப் பற்றிய மூச்சே விட ஆரம்பிப்பாள்.

என்ன தான் பணி செய்து அன்பு காட்டினாலும் ஒரு விஷயம் அவளை ரொம்பவும் உறுத்தியது. வினோத்துடன் மனம் விட்டு பேசுவது என்பது அவள் முயற்சி செய்தும் முடியாத காரியமாகவே இருந்தது.

பொதுவாகவே வினோத் அவளுடன் பேசுவது குறைவு. ஒற்றை வார்த்தைகளிலே கேள்விகள் கேட்டு, பதில் சொல்லி முகத்தை திருப்பிக் கொள்வான். அவன் அதிகம் பேசுவதே அவள் மீது கோபப்படும் போது தான். உட்கார்த்தி வைத்து நீண்ட லெக்சர் அடித்து தன் ஆளுமையை காட்ட நினைப்பான்.

இரவு படுப்பவனிடம், ''உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும்'' என்று கூட நந்தினி கெஞ்சலாய் சொல்லிப் பார்த்தாள். ''எனக்குத் தூக்கம் வருகிறது'' என்று திரும்பிக் கொண்டான் அவன்.

நந்தினிக்கு அவனிடம் ஏதோ ஒரு விதமான அழுத்தம் இருக்கிறது என எண்ணினாள். அதன் பாதிப்பின் வெளிப்பாடே அவனுடைய கடுமையான சுபாவமாய் இருக்கக்கூடும் என எண்ணினாள். அந்த மன அழுத்தத்தை அவனுடன் பேசினால் தானே அவள் தெரிந்து கொள்ள முடியும்.

ரெண்டு தினங்கள் அதற்காகவே யோசித்தவள், மூன்றாவது தினம் அதற்கான வழியையும் கண்டுபிடித்தாள். அவனுடைய முக்கிய சுபாவமே தன்னைப் பற்றிய பிரமாண்ட கற்பனை, தான் என்ற ஆணாதிக்கிய அகம்பாவம் தானே? அதை வைத்தே அவனை மடக்குவது என முடிவு செய்தாள்.

அவள் நினைத்தது சரி தான். வினோத்திற்கு தான் மற்றவர்களை விட ரொம்பத் திறமையானவன், நிறைய சாதனைகளைச் செய்தவன் என்றெல்லாம் அளவுக்கு மீறிய கற்பனை இருந்தது. அந்த எண்ணமே அவன் சந்திக்கும் யாரையும் துச்சமாய் மதிக்கும் பாவனையை அவனுக்குத் தருவித்திருந்தது.

நந்தினி அதை சரியாக உணர்ந்து கொண்டாள். அன்று இரவே அவனிடம் வியப்பாய், ''தொழிலில் இவ்வளவு சாதனை செய்திருக்கிறீர்களே எப்படி?'' என்று பேச்சை ஆரம்பித்தாள்.

அவள் நினைத்தது போலவே முகம் சுழிக்காமல் உற்சாகமாய் திரும்பினான் வினோத்.

''என்ன கேட்டாய்?'' என்றான் ஆர்வம் பொங்க.

''என் தந்தை நம் கல்யாண சமயத்தில் நீங்கள் இளம் வயதிலேயே தொழிலில் கடுமையாக உழைத்து நிறைய சாதனைகள் செய்திருப்ப

தாக சொன்னார்கள். அது பற்றித் தெரிந்து கொள்ளவே உங்களிடம் கேட்டேன்'' என்றாள் பீடிகையுடன்.

அவள் மேலும் வியப்படையும் வகையில் வினோத் திரும்பி சுவாரஸ்மாய் கண்களில் ஆர்வம் மின்ன பேச ஆரம்பித்து விட்டான். தனது தொழில் பற்றி, தொழிலில் போட்டியாளர்களை சமாளித்து சாதுர்க்காய் தான் கொண்ட சூட்சமங்கள் பற்றி என ஒவ்வொன்றாய் விவரிக்க விவரிக்க தன்னுடன் இப்படி அவன் பேசும் அதிசயத்தை நம்ப முடியாத ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

அன்று மட்டும் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தான் வினோத். நந்தினி கண் கொட்டாது அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். சைக்காலஜி படிப்பவர்கள் சொல்லும் 'லிஸன்' மற்றவர்கள் சொல்வதை முதலில் கேளுங்கள் என்பது எவ்வளவு முக்கியமான விஷயம். ஒருவரையொருவர் நன்கு தெரிந்து கொள்ள எவ்வளவு அவசியம் என்றும் புரிந்தது.

அவன் பேசுவதையெல்லாம் ஆர்வம் பொங்க கேட்டவள் அவன் பேசி முடித்ததும் முகத்தில் வியப்பு பொங்க பார்த்தாள்.

''ஆச்சரியமாக இருக்கிறது எனக்கு! எவ்வளவு தடைகளைத் தாண்டி தொழிலை வெற்றிகரமாக கொண்டு வந்து சாதனை செய்திருக்கிறீர்கள். உங்களை கணவனாக அடைந்தது நான் செய்த பாக்கியம்!'' பெருமிதத்தோடு அவனைப் பார்த்துச் சொன்னவள் அவன் முகத்திலும் அந்த பெருமிதக்களை ஓடுவதை ரசித்தாள்.

தொடர்ந்து அவள் அவனையே பார்க்க வினோத் அதில் வெட்கப்பட்டவன் போல், '' என்ன அப்படிப் பார்க்கிறாய்?'' என்றான்.

''எனக்கு இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. நான் ஒன்று செய்யட்டுமா?'' என்றாள் கெஞ்சலாய்.

''ம்ம்...'' என்றான் அவன் புரியாத வியப்புடன்.

நந்தினி மெல்ல அவன் பக்கத்தில் வந்தாள். அவன் கன்னங்களில் தனது இதழ்களைப் பதித்து மென்மையாக முத்தமிட்டாள்.

## 14

நந்தினிக்கு முன்பை விட எல்லாமே இலகுவாய்த் தோன்றியது. கணவனோடு வெகு சகஜமாகப் பேசிக் கொள்ள முடிந்தது.

வெறும் ஒற்றை வார்த்தைகளிலே பதில் சொல்லி பழக்கப்பட்டவன் இப்போது அவளுக்காக கூடுதலாக ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசுவதை கவனித்தாள்.

தினம் காலையில் எழுந்ததும் அவன் மீது அபரீத அன்பு வைத்திருப்பதாகவும், தன் உயிரே அவன் தான் என்பதுபோலவும் எண்ணங்களை மனதில் ஏற்படுத்திக் கொண்டு நடமாட ஆரம்பிப்பாள்.

வேறு எந்த சிந்தனையுமில்லாமல் அதே எண்ணத்துடன் அவள்



அலைவதால் சாதாரணமாக அவன் அருகில் போய் அணைத்தபடி அமர்வதும், அவன் கைகளோடு தன் கையைக் கோர்த்துக் கொள்வதும், அவளுக்கு இயல்பாகவே போயிற்று. சில சமயம் காலையில் ஆர்வமாய் பேப்பர் படிக்கும் அவன் கழுத்தில் மாலையாய் கைகளைக் கோர்த்து அவனது தோளில் பெரும் அமைதி கிடைப்பது போல் நிம்மதியாய் சாய்ந்தும் கொள்வாள்.

வினோத் அது போன்ற சமயங்களில் திரும்பி ஆழமாய் அவளை ஒரு பார்வை பார்த்து விட்டு உள்ளுக்குள் ரசிப்புப் புன்னகை புரிந்து கொள்வான்.

அவளும் உள்ளுக்குள் ரசிக்கத்தான் செய்வாள். முன்பு அவன் தான் இதையெல்லாம் செய்தான். திடீர் திடீரென அவளை அணைப்பது, எதிர்பாராத நேரத்தில் முத்தமிடுவதும், வேண்டுமென்றே அவளை மடியில் அமர்த்திக் கொண்டு டி.வி. பார்ப்பது போன்றதெல்லாம் அவன் செய்தவை தான்...!''

ஆனால் இப்போது...?

அவைகளையெல்லாம் ஒன்று விடாமல் அவள் செய்ய ஆரம்பித்தாள். அவனுடன் பேசும் போதும் சரி, அவனுக்கு பணி விடை செய்யும் போதும் சரி அவனுக்கு நெருக்கமாய் இடித்துக் கொள்ளாத குறையாய் நிற்பாள். அவள் கை விரல்களும் அவனைத் தொட்டுக் கொண்டோ அவனது முதுகை அணைத்து வருடிய படியே தான் செயல்பட்டுக் கொண்டிருக்கும்.

தனது ஒவ்வொரு செயலிலும் பேச்சிலும் அவன் மீது தான் அபரிமிதமான அன்பு வைத்திருப்பதை உணர்த்துத் துடித்தாள். அவன் அலுவலகம் சென்ற பின்னும் கூட ஏதாவது சாக்கு வைத்து அவனுடன் போனில் பேசினாள்.

தினம் அலுவலகம் முடிந்து வருபவனை வயப்படுத்தவும், ஏதாவது செய்ய ஆரம்பித்தாள். அவனுக்கு மிகவும் பிடித்த உணவு பதார்த்

''அம்மா... தாயீ..!''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னால தானே சோறு போட்டேன்!''

''சாப்பாடு எல்லாம் முடிஞ்சுது! 'ரெண்டு மணி டி.வி. சீரியலை' உங்க வீட்டு டி.வி.யிலே ஒரு ஓரமா உட்கார்ந்து பார்த்துட்டு போயிடுறேனே...''

- கு.அருணாசலம், தென்காசி.



தங்களை டிபனாய் செய்து அவனை திக்குமுக்காட வைப்பாள். இன்னொரு சமயம் இரவெல்லாம் கண் விழித்து தான் டிராயிங் டீச்சரிடம் பயின்ற பயிற்சியை வைத்து ஆயில் பெயின்டிங்கில் அவன் உருவத்தை அழகாக வரைந்து அவனுக்குப் பரிசளித்தாள்.

முன்பு ''நனக்கு நன்றாக வரையத் தெரியும். ஆயில் பெயிண்டிங் கற்றிருக்கிறேன்'' என்றெல்லாம் அவள் சொன்ன போது காதிலே வாங்காதவன் இப்போது அக்கறையாய் படத்தைப் பார்த்தான்.

''பிரமாதமாக வரைந்திருக்கிறாய். நீயா வரைந்தாய்?'' என்று ஆச்சரியப்பட்டான்.

கூடவே, ''இதை பிரேம் செய்து மாட்டி விடுகிறேன்...'' என்று மறுநாளே அழகான பிரேமுடன் படுக்கையறையில் கொண்டு போய் மாட்டினான்.

''தொடர்ந்து ஓய்வு நேரங்களில் இது போல இயற்கை காட்சிகளை வைத்து ஓவியம் வரை. நன்றாக இருக்கும்...!'' என அவன் ஊக்குவிக்கவும் நந்தினியின் மை விழிகள் விரிய அழகாக சிரித்தாள். அன்று அவள் அடைந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை.

அவனது சின்னப்பாராட்டு கூட மயிலிறகாய் அவள் இதயத்தை வருடி அவளை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தியது.

அவளை மேலும் சந்தோஷத்தில் திக்குமுக்காட வைப்பது போல் அந்த மாத மெடிக்கல் செக் அப்பிற்கு அவள் கிளம்பிய போது அவனே அலுவலகத்திலிருந்து வந்து கூட்டிட்டுப்போனான்.

''மூன்று மாதம் முடிந்து விட்டது. ஸ்கேன் எடுத்து சிசு வளர்ச்சியை பார்த்து விடலாம்....'' என்று டாக்டர் சொன்ன போது கூடவே இருந்தான். ஸ்கேன் ரிப்போர்ட்டில் நல்ல வளர்ச்சி இருப்பதை டாக்டர் தெரிவித்ததும் கைத்தாங்கலாய் அவளைப் பிடித்திருந்தவன் அப்படியே அவளை தோளோடு அணைத்துக் கொண்டான்.

எதற்கு இப்போது குழந்தை? என்று கேட்டவனின் மனம் மாறி குழந்தை ஆசை அவனுக்கு வந்து விட்டதை உணர்ந்த நந்தினி பெரும் நிம்மதியடைந்தாள்.

ஆனால் அவள் நிம்மதிக்கு பெரும் சோதனை மறுவாரம் வரப் போவதை அப்போது அவள் உணரவில்லை.

## 15

மறுவாரம் ஆரம்பம் முதலே வினோத் இரவெல்லாம் சரிவரத் தூங்காமல் சிந்தனையுடனே இருப்பதைக் கவனித்தாள்.

என்ன... எதுவென்று அவள் மென்மையாக விசாரித்த போதும் அவன் சரிவர பதில் சொல்லாமல் திரும்பிக் கொண்டான்.

அவள் நன்கு கவனித்துப் பார்த்ததில் அலுவலகத்தில் அவனுக்கு ஏதோ பிரச்சனை என்பதைப் புரிந்து கொண்டாள். அலுவலகத்தில் சொந்த பிசினெஸ்ஸில் அப்படியென்ன பிரச்சனை வந்து விடப் போகிறதென்று அவள் தலையைப் போட்டு குழப்பிக் கொண்டிருக்க... நான்காவது நாள் அவனே பிரச்சனையை வெட்ட வெளிச்சமாக்கினான்.

அன்று காலை அலுவலகம் கிளம்பிச் சென்றவன் கிளம்பிய வேகத்திலேயே வீட்டிற்குத் திரும்பி வந்து விட்டான்.

புரியாமல் பதறிப் போய் பார்த்தவளிடம், ''எல்லாம் முடிந்து விட்டது...'' என்றான் உணர்ச்சியற்ற குரலில்...

''முடிந்து விட்டதா... என்ன சொல்கிறீர்கள்?'' என்றாள் நந்தினி உள்ளுக்குள் படபடப்புடன்.

''பெருத்த நஷ்டம் ஏற்பட்டு விட்டது. 2 கோடி ரூபாய் போய் விட்டது...''

''2 கோடியா...? என்ன சொல்கிறீர்கள்?''

''காண்ட்ராக்ட் எடுத்ததில் தவறு நிகழ்ந்து 2 கோடி நஷ்டம்''

''ஐயோ... நீங்கள் இதை அந்த காண்ட்ராக்ட் கம்பெனியிடம் எடுத்துச் சொல்ல வேண்டியது தானே?'' என்றாள் பதற்றமாய்.

''எடுத்துச் சொல்ல.... என்ன?'' போய் சண்டையே போட்டேன். உன் சங்காத்தமே வேண்டாம் என்று மொத்த காண்ட்ராக்ட்டையும் ரத்து பண்ணி விட்டார்கள். இப்போது பெரும் இக்கட்டான சூழ்நிலை. முக்கியமான காண்ட்ராக்ட் போய் விட்டதால் தொழிலில் பின்னடைவு ஏற்பட்டு ஆரம்பித்த நிலைக்கே வந்து விட்டேன்.''

கைகளை விரித்தபடி அவன் தலையைக் கவிழ்ந்த போது அவளும் பதைப்பதைப்புடனே அவன் பக்கம் போனாள்.

''நீங்கள் கொஞ்சம் பொறுமையாக போய் இருக்கலாமே. அவசரப்பட்டு சண்டை போட்டு விட்டீர்களே...!'' என அவள் ஆறுதல் போல் சொல்லி முடித்ததும் தான் தாமதம்... குனிந்திருந்தவன் படக்கென நிமிர்ந்தான்.

விரக்தி கலந்த ஒருவித வெறியுடன் பளபளப்பாய் சிவந்திருந்த கண்கள் அவனது கோபத்தை உணர்த்த ஒரு கணம் அரண்டு போனாள்.

அவள் பயந்தபடியே நடந்தது.

துடிக்கும் கோபத்தில் எழுந்தவன் ஓங்கி அவளை அறைந்தான்.

''என்ன எனக்கே புத்தி சொல்கிறாயா? உன்னை தொலைத்து விடுவேன் தொலைத்து...''

பற்களை கடித்தபடி முன்னால் வழியில் இருந்த இருக்கையை உதைத்து தள்ளி ஆவேசமாய் அங்கிருந்து அகன்றான் அவன்.

நந்தினி இதை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அவன் சொன்ன சிறு சொல்லுக்கு அடிக்குமளவுக்கு கோபப்பட்டு விட்டானே!'

அப்படியே அதிர்ந்து போனாள்.

அன்பு செலுத்தி, போராடி கொஞ்சம் கொஞ்சமாய் வெளிக் கொண்டு வந்த அவனது நல்ல மனம் மறைந்து வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதையாய் அந்த வெறித்தனமான கோபம் அவனிடம் திரும்பி விட்டதே! இது தொழிலில் நஷ்டமாகி ஏற்பட்ட விரக்தியின் வெளிப்பாடா? இல்லை நிஜமாக மீண்டும் மாறி விடுவானா...?

பழைய படி 'குரங்கனாய்' ஆகி விடுவானா?

அடித்த கன்னங்களில் தாரையாய் கண்ணீர்த்துளிகள் விழுந்து ஓடின. திகைத்து யோசித்தவளுக்கு அவன் அடித்த அடி நெஞ்சினில் சுரீரென பட்டாற்போல் வலித்தது.

கொஞ்சம் கொஞ்சமாய் அவனது கடுமையான சுபாவத்தை தனது அன்பால் மாற்றி விட்டதாய் எவ்வளவு சந்தோஷப்பட்டாள்? மூளைச் சலவை செய்தது போல் தனது மனம் முழுவதையும் அவன் மேல் திருப்பி அவன் காலடியே சரணம் போல் எப்படியெல்லாம் நடந்து கொண்டாள்...?

எல்லாம் வீணாய் போயிற்றா...? தொழிலில் நஷ்டம் என்றதும் அவன் முரட்டு சுபாவம் அப்படியே திரும்பி விட்டதே இனி என்ன செய்ய...?

கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போம். இரண்டொரு நாளில் அவனது சுபாவம் மாறி விடும் என நினைத்தாள். தன்னைத் தானே ஆறுதல் படுத்தினாள்.

ஆனால் அவளது நினைப்பு பொய்யாயிற்று.

இரண்டு மூன்று நாளில் நிலைமை மேலும் விபரீதமாயிற்று.

அவள் பயந்தது போல் அதன் பின் வினோத் பழைய 'வினோத்'தாகவே மாறி விட்டான். சொல்லப்போனால் முன்பை விட கோபமும் கடுமையும் அவனிடம் அதிகமாயிருந்தது.

எடுத்ததெற்கெல்லாம் எரிந்து விழுந்தான். அவள் எது பேச வந்தாலும் அவளை பேச விடாதபடி கடுஞ்சொற்களை வீசினான்.

''ஒரு கட்டத்தில் அதையும் தாண்டி, என் கண் முன்னே நிற்காதே...போ!'' என கதறினான்.

'பீடை, தரித்திரம், உன்னால் தான்... உன்னைக் கட்டிக்கிட்ட பிறகு தான் எனக்கு இந்த நிலை, சரியான அழுமூஞ்சி...'என்றெல்லாம் அவனது வசவுகளில், வார்த்தைகளின் பலம் கூடி அவளை ரொம்பவும் பாதித்தது.

நந்தினி அவ்வப்போது துடித்து சோர்ந்தாலும் மனதளவில் தளராமல் இருந்தாள்.

முதலில் அவன் முன் அழுவதை நிறுத்தி, 'அழுமூஞ்சி' பட்டத்தை தவிர்த்தாள்.

திரும்பவும் யோசித்தாள்.

புன்னகை... அன்பு..

அது தானே அவளது ஆயுதம்? அதை ஒரு போதும் கைவிடக்கூடாது என உறுதி பூண்டாள்.

அவளும் பழைய நிலைக்கு மாறினாள். புன்னகை முகமாய் அவன் முன் நின்றாள். நடமாடினாள்.

அவன் எது சொன்னாலும் எதிர்ப்பு காட்டாது. தலையை தாழ்த்தி சில சமயம் அடிமை போல் கூட நின்றாள்.

வினோத் அவள் நடவடிக்கைகளையோ சுபாவத்தையோ உற்றுக் கவனித்த மாதிரி தெரியவில்லை.

அவன் பாட்டுக்கு அவளைப் பற்றிய நினைப்பேயில்லாமல் நடமாடிக் கொண்டிருந்தான்.

இரவெல்லாம் தூங்காமல் சிகரெட்டுகளை ஊதியபடி குறுக்கும் நெடுக்கும் நடந்தான்.

திடீர் திடீரென காரை எடுத்துக் கொண்டு விருட்டென கிளம்பிச் செல்வான். நடு இரவில் சாவகாசமாய் திரும்பினான்.

இந்த வேளையில் எங்கு சென்று வருகிறான் என்று பதைப்புடன் கேட் கதவைப் பிடித்துக் கொண்டே பல மணிநேரம் நிற்பாள் நந்தினி.

அப்படி ஒரு நாள் நடு இரவு திரும்பி வந்தவன் காரை விட்டு இறங்கி தள்ளாட்டமாய் நடந்து வந்த போது தான் அவன் குடிக்க ஆரம்பித்திருப்பதை உணர்ந்தாள்.

''பாரில்... இன்னைக்கு ஓவரா ஊத்திக் கொடுத்திட்டான்...'' என்று குழறலாய் அவன் சொன்ன போது அவளுக்கு எல்லாம் புரிந்து விட்டது.

தினம் இரவு 'பாரு'க்குச் சென்று குடிக்க ஆரம்பித்திருக்கிறான் வினோத்.

குடிப்பழக்கம்...?

ஆபத்தான... அடிமைப்படுத்தும்... பழக்கமாயிற்றே...? குடியால் எத்தனை குடும்பங்கள் பாழாகி, சீரழிந்து உருத்தெரியாமல் போயிருக்கிறது...? நினைத்துப் பார்த்த நந்தினிக்கு உடம்பே நடுங்கியது.

''இவர் எவ்வளவு குடிச்சாலும் தடுக்கி விழமாட்டார்.''

''எப்படிச் சொல்றே?''

''குடிச்சவுடனே பிளாட் ஆயிடுவாரே!''

- ஆர்.என். செழியன், சென்னை.



## 16

நந்தினி பயந்த மாதிரியே அவளுக்கு சோதனையும் தொடர்ந்தது.

பார் சென்று குடிக்க ஆரம்பித்தவன் ஓரிரு வாரத்தில் வீட்டிற்கே பாட்டில்களை வாங்கி வர ஆரம்பித்தான். நிதானமாய் கோப்பைகளில் ஊற்றி நடுஹாலில் உட்கார்ந்து குடிக்க ஆரம்பித்தான்.

பல்லைக் கடித்தபடி பதற்றமாய் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தாள் நந்தினி.

அவன் குடிப்பதை தடுக்கப்போனால் என்ன நடக்கும் என்று உணர்ந்தவள் அதற்கு மாறாகவே செயல்பட்டாள்.

மது பாட்டில்களை திறக்கவும், கோப்பையில் ஊற்றி ஐஸ் துண்டுகளைப் போடவும், அவளே உதவி செய்தாள். சில சமயம் அவன் குடிக்கும் எண்ணத்தில் சேரில் வந்து அமரும் போது தயாராய் மதுவை ஊற்றி விடுவாள்.

ஒரு நாள் அவள் நீட்டுவதை ஓரிரு வினாடிகள் வாங்க யோசித்து விட்டு படக்கென்று வாங்கி குடித்தான். குடித்துவிட்டு நிமிர்ந்து பார்க்கும் போது கைகளைக் கட்டியபடி அவள் புன்னகையுடன் நின்றது அவனுக்கு எரிச்சலைத் தந்தது.

அவளையே கண்களை உருட்டிப் பார்த்தவன், அப்படியே எரிச்சலாய் பாட்டியை கீழே தள்ளி உடைத்துவிட்டு கோபமாய் எழுந்து போனான்.

அவன் என்ன செய்தாலும் சரி நந்தினி தன் சுபாவத்தை கொஞ்சமும் மாற்றிக் கொள்ளவில்லை.

'புன்னகை... அன்பு...'


அந்த இரண்டும் தான் அவளது ஆயுதம்! அதை வைத்து தான் அவனை மடக்க வேண்டும். எப்படியும் அவளால் முடியும். அவனை கண்டிப்பாய் திருத்த முடியும் என்பதில் உறுதியாய்- தீவிரமாய் இருந்தாள்.

அவன் உணரும்படி அவளது ஒவ்வொரு நடவடிக்கையிலும் அவனுக்கு அன்பைக் காட்டினாள்.

குடித்து... குபுக்கென வாந்தியெடுக்கும் அவனை அப்படியே பரிவாய் தன் நெஞ்சினில் சாய்த்து துடைத்து விடுவாள். முகம் சுளிக்காமல் அவன் உடைகளை மாற்றி கைத்தாங்கலாய் பிடித்து கொண்டு போய் படுக்கையில் படுக்கச் செய்வாள். அவன் கால்களைப் பிடித்தபடி காலடியிலே தவம் போல் ரொம்ப நேரம் உட்கார்ந்து அவனையே பார்த்தபடி இருப்பாள்.

மயக்கம் தீர்ந்து அவன் விழித்ததும் மின்னல் வேகத்தில் அவனுக்குப் பிடித்த உணவுகளை உண்டாக்கி சாப்பிட வைப்பாள். அவன் சாப்





பிடும் போது அவன் தோளை அணைத்தபடி அவன் மேல் சாய்ந்து கொண்டு வாஞ்சையாய் அவன் தலைக்கேசத்தை நீவி விடுவாள்.

அதுபோன்ற சமயங்களில் என்னதான் வீம்பாய் இருந்தாலும் விநோத்தை சூற்ற உணர்ச்சிதாக்கும். ஓரக்கண்ணால் அவளையே பார்த்துவிட்டு தலையை குனிந்து கொள்வான்.

இப்படி ஒரு வாரம் போக விநோத் தினம் பார் செல்லும் வழக்கத்தையும் இடை இடையே வீட்டிலே குடிப்பதையும் வழக்கமாகிக் கொண்டிருந்தான்.

எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு புன்னகை சிந்தும் இன்முகமாய் தொடர்ந்து நட்மாடிக் கொண்டிருந்தாள் நந்தினி. அவன் முன் என்னதான் சிரித்தாலும் உள்ளுக்குள் அவளுள் நடுக்கம் ஏற்படாமல் இல்லை.

முன்பாவது கடுமையாக நடந்து கொள்கிறான் என்ற முரட்டு சுபாவம்தான் அவனிடம் இருந்தது. இப்போதோ... குடிக்க ஆரம்பித்து பெரும் குடிகாரனாய் ஆகி விட்டான். இந்த குடிப்பழக்கத்தை எப்படித்தான் நிறுத்துவது? என்ற பயம் தினமும் எழுந்து அவளை வளைத்தது.

இரண்டு மூன்று நாள் அதே யோசனையில் நடமாடியவள் மூன்றாம் நாள் அந்த யோகா பெண்மணியைத் தேடிப் போய் ஆலோசனை கேட்டாள். அந்தப் பெண்மணி சொன்னது அவளுக்கு மிகவும் ஆறுதலாகவும் இருந்தது.

''நீ எதற்கும் கலங்காதே நந்தினி. விரக்தியில் திடீரென உன் கணவனுக்கு ஏற்பட்டது தான் இந்த குடிப்பழக்கம். அவனுக்கு குடிப்பது மீதும் வெறுப்பு வரும்படி ஏதாவது செய். அவன் மனநிலையை குடிப்பழக்கத்திலிருந்து வேறு எங்காவது திசை திருப்பி விடு. அவன் குடிப்பதை நிறுத்தி விடுவான்...'' என்றாள் அவள்.

நந்தினி வீட்டிற்கு வந்து யோசித்தாள். அவள் சொல்வது சரிதான். ஆனால் எப்படி விநோத்திற்கு மதுவின் மீது வெறுப்பு வரும்படி

''என்னங்க..! உங்க பெண்ணு கல்யாணத்தை சனிக்கிழமை வைத்துள்ளீர்கள்...?''

''திங்கள் முதல் வெள்ளி வரை பகல் முழுவதும் சீரியல் இருக்காம். பெண்கள் வரமாட்டார்கள் என்று என் மனைவி தான் வைக்கச் சொன்னாள்.''

- என். மாரியப்பன், தேனி.





செய்வது... அது மிகவும் கடினமாயிற்றே? என நினைத்தாள்.

இன்னொரு விஷயமாய், அவன் மனநிலையை வேறு ஏதாவது பக்கம் திசை திரும்பினால் மதுபழக்கத்தை மறந்து விடுவான் என்ற நம்பிக்கையும் அவளுள் வந்தது.

மதுப்பழக்கத்திலிருந்து விடுபட அவன் மனநிலையை திசைதிருப்புவது தான் ஒரே வழி என்று நினைத்தாலும் அது எப்படி என யோசித்தவளுக்கு குழப்பமே மிஞ்சியது.

ஆனால் வழக்கம் போல் அவன் வந்து குடிக்கும் நினைப்புடன் உட்காரும்போது அவசர அவசரமாய் அவளே மதுவை கோப்பையில் ஊற்றி புன்னகையுடன் அவனுக்கு நீட்டுவாள்.

கோப்பையை வாங்க வருபவன் அவளது சிரித்த முகத்தைப் பார்த்ததும் எரிச்சலாகிவிடுவான், ''ஹேய்... எதற்கு சிரிக்கிறாய்? உனக்கு கோபம் வரவில்லை?'' என்றான் ஆத்திரமாய்.

''எனக்கு கோபம் இல்லை... சந்தோஷம் தான்...! நீங்கள் எது செய்தாலும் எனக்கு சந்தோஷம்தான். சந்தோஷமாவே நான் ஏற்றுக் கொள்வேன்...''

முகம் மலர அவள் புன்னகையுடன் சொல்லியபோது அவனுக்கு எரிச்சல் பன்மடங்காகி அவள் தன்னை கேலி செய்கிறாள் என்ற ஆத்திரமே வந்தது.

மதுக்கோப்பையை வாங்கி குடிக்காமல் சுவற்றில் வீசினான்.

அவளது புன்னகையான செய்கை எல்லாம் அவனுக்கு, அவள் தன்னை கேலி செய்து பரிகாச சிரிப்பு சிரிக்கிறாள் என்ற உணர்வையே ஏற்படுத்த அவன் மிகவும் ஆவேசமானான்.

அவளை ஏதோ பழிவாங்க வேண்டும் என்று இரண்டு நாள் குடியைத் தொடாமல் யோசித்தவன் மூன்றாவது நாள் அவள் பயப்படும்படி அந்த காரியத்தைச் செய்தான்.

அலுவலகம் முடிந்து திரும்பியவன் கூடவே ஒரு இளம் பெண்ணை வீட்டுக்கு கூட்டி வந்தான்.

## 17

நந்தினி இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை. அப்படியே திகைத்துப் போனாள்.

விநோத் சர்வ சாதாரணமாய் அந்த இளம் பெண்ணை தோளோடு அணைத்தபடி கூட்டிவர, பதிலுக்கு அந்த பெண்ணும் கரங்களால் அவன் இடுப்பை வளைத்திருந்தாள்.

அதிர்ந்து நடுக்கத்துடன் பார்த்த நந்தினி முன் கெக்கலிப்புடன் நின்றான் விநோத்.

''என்ன பார்க்கிறாய்? இவள் தான் ஹேமா. என்னோட புது பர்ஸனல் செகரட்டரி. பர்ஸனல் செகரட்டரின்னா ...பர்ஸனலா... அந்

தாங்கமா... என்னோட கூடவே இருக்கப்போகிற செகரட்டரி. அத னால புரிஞ்சு நடந்துக்கோ...''

சொல்லியபடி அவளது நடுங்கிய நிலையை ரசித்தவாறு வெறி சிரிப்புடன் அகன்று உள்ளே செல்ல ஆரம்பித்தான்.

அவனின் இந்த தாக்குதலை சற்றும் எதிர்பார்க்காத நந்தினி நிலை குலைந்து தான் போனாள். மற்ற எந்த பழக்கமானாலும்... விஷயமானாலும் சமாளித்து விடலாம். ஆனால்... இந்தப்பெண் சகவாசம் ஒரு பெண்ணுடன் நெருக்கமான பழக்கம்... இதை எப் படி சமாளிப்பது?...

மேலும்... தொழில் நஷ்டத்தால் அவனுக்கு ஏற்பட்ட கோபம் விரக்தி எல்லாம் இப்போது திடீரென தலைகீழாய் மாறி அவளைப் பழிவாங்க அலைவது போல் ஆகிவிட்டதே!

அவன் நடவடிக்கையும் அப்படித்தானே இருக்கிறது? கூட ஒரு பெண்ணை கூட்டி வந்ததும் அவள் நடுங்கி தவித்ததை அவன் குரூரமாய் ரசித்ததை அவளும் கவனிக்கத்தானே செய்தாள்?

அப்படியானால்...?

முன்பு அவளிடம் மூர்க்கமாய் முரட்டுத்தனமாய், நடந்து அவள் திணறுவதை ரசித்த அவனது 'ஸேடிஸ்ட்' குணம் மறுபடியும் திரும்பி இருக்கிறது?

அதனாலே அவளை துன்புறுத்தி அதில் சந்தோஷம் காண முயல்கிறான்?

வேறு வழியில்லை! முன்பு செய்தது போல் புன்னகை, அன்பு தான்...! அது தான் அவளது வழி!

அது தான் அவளது ஆயுதம்!

அவள் திணறி வேதனைப்பட்டால், துடித்தால்... அவன் மேலும் மேலும் ரசிப்பான். அவனது நடவடிக்கை கூடிக் கொண்டே போகும்...

அதே நேரம் அவள் முகம் வாடாமல் புன்னகைத்தால் புன் சிரிப்போடு நடமாடினால் அவன் திகைத்து திணற ஆரம்பித்து விடுவான்.

அப்படி அவனை திகைத்து திணற வைத்தால் தான் அவள் தப்பிக்க முடியும். அவனது பழிவாங்கும் விசித்திர சுபாவத்தை நிறுத்த முடியும். அவனை மீண்டும் நல்லவனாக மாற்ற முடியும்...

வெகு தீவிரமாக சிந்தித்த நந்தினி மனக்கவலைகளை எல்லாம் உதறினாள். கண்களை சிறிது நேரம் மூடி மனதை ஒருநிலைப்படுத்தினாள்.

திரும்பவும் மை விழிகளை விரித்த போது அவள் மனது ரொம்பவும் தெளிவாகி இருந்தது.

அடுத்து வந்த சில நாட்கள் வினோத் தினமும் அந்த ஹேமாவை மதியம் கூட்டி வருவதும். இருவரும் டி.வி. முன் அமர்ந்து சிரித்து



சிரித்து கொட்டமடிப்பதும் வாடிக்கையாயிற்று.

நந்தினியை வேண்டுமென்றே அவள் முன் கூப்பிட்டு அதட்டுவான் வினோத்.

'ஜூஸைக் கொண்டு வா...! மாலை டிபனாக சூடான சப்பாத்திகள் வேண்டும்! நூடுல்ஸ்ஸிம், ஃப்ரைடு ரைஸ"ம் ரெடி பண்ணு...!' என வித விதமாய் கட்டளை போடுவான்.

எல்லாவற்றையும் புன்னகையுடன் கேட்டு புன்னகை முகமாகவே பரிமாறினாள் நந்தினி.

அந்த செகரட்டரி ஹேமாவும் முதலில் வினோத்துடன் சேர்ந்து அவளை அதட்டி அதிகாரம் செய்தவள் நந்தினியின் இன் முகத்தையும் ஸ்நேகமான சிரிப்பையும் பார்த்து திகைக்கத்தான் செய்தாள்.

சில சமயம் அதட்டும் வினோத் முன் நந்தினியின் முகம் கோணாத நடவடிக்கை ஹேமாவுக்கு சங்கடமாயும் இருந்தது.

என்ன இருந்தாலும் அவளும் ஒரு பெண் தானே...! என்ற உணர்வு ஹேமாவை பலமாய் தாக்க ஒரு நாள் அடக்க முடியாமல் வினோத் பின்னால் சென்ற சமயமாய்ப் பார்த்து நந்தினியிடம் வந்தாள்.

''உங்களுக்கு கோபமே வராதா?'' என்றாள் நந்தினியைப் பார்த்து...!

நந்தினி பதில் சொல்லாது சிரிக்கவும், ''உங்களை இந்த பாடு படுத்துகிறார். எல்லாவற்றையும் நீங்கள் சகித்துக் கொண்டு இருக்கிறீர்களே?'' என்றாள் வினோத ஆச்சரியத்துடன்.

அதற்கும் நந்தினி பதில் சொல்லாமல் புன்னகைக்கவே செய்தாள்.

ஹேமாவுக்கு வேறு வழியில்லாது போயிற்று. குழப்பமாய் பார்த்தவாறு அங்கிருந்து அகன்றாள்.

அதன் பின்னும் ஹேமாவின் வருகை தொடர்ந்தது. டி.வி. முன் அமர்ந்து சி.டி.யில் ஆங்கிலப் படங்களை போட்டவாறு கொட்டமடிக்கும் வழக்கமும் தொடர்ந்தது. ஆனால் ஹேமா அடிக்கடி நந்தினியின் முகத்தை உற்றுப் பார்த்தாள். எதையோ படிக்க முயன்றாள் என்பது நந்தினிக்கு புரிந்தது.

நந்தினி, ஹேமாவின் வினோத பார்வையின் அர்த்தம் புரியாமல் திகைத்தவளுக்கு மறுநாள் வினோத் மூலமாக விஷயம் புரிந்தது. வினோத் காலை எழுந்தவன் யோசனையாய் அவளிடம் வந்து, ''உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும்...'' என்ற போது புரியாமல் விழித்தாள் நந்தினி.

ஓரிரு நிமிடங்களில் பேசாமல் நெற்றியைச் சுருக்கியபடி கண் களை உருட்டிப் பார்த்தவன் கடகடவென பேச ஆரம்பித்தான்.

''இதோ பார் நந்தினி. இப்போதெல்லாம் உனக்கும், எனக்கும் அவ்வளவு ஒத்துப்போவதில்லை. உன்னைக் கண்டாலே எனக்கு எரிச்

சமாளி விடுகிறது. என் கோபத்தையும், முரட்டுத்தனத்தையும் உன்னிடம் காட்டினாலும் நான் விரும்பிய மாதிரி உன்னால் நடந்து கொள்ள முடியவில்லை. அதனால்...''

சொல்லியபடி அவன் நிறுத்தவும், காதுகள் அடைக்க அப்படியே நடுங்கிப் போய்விட்டாள் நந்தினி. அவன் என்ன சொல்ல வருகிறான் என்பதை ஓரளவு உணர்ந்த போது உதடுகள் உலர்ந்து ஒட்டிக் கொண்டன.

''நந்தினி, நான் சுற்றி வளைக்க விரும்பவில்லை. நேரிடையாகவே சொல்லி விடுகிறேன்...'' என்று பீடிகையாய், நிறுத்தியவன் தொடர்ந்து அவளை அதிர வைத்தவாறு,' ''நாம் இருவரும் பிரிந்து விடுவது நல்லது என நினைக்கிறேன். மேலும் ஹேமாவும் அதையே விரும்புகிறாள். அப்போது தான் என்னுடன் எப்போதும் இருக்க சம்மதிப்பாளாம்...''

சொல்லியவன் அவள் முகம் அழும் நிலைக்குப் போன போக்கை பார்த்து அதிர்ந்து, ''பிரிந்து விடுவது என்றால்... டைவர்ஸ், விவாகரத்து என்றெல்லாம் நினைத்து பயந்து விடாதே...! என்னையும் ஹேமாவையும் பொறுத்தவரையில் நீ இந்த வீட்டில் இருக்கக்கூடாது என்பது தான் பிரிந்து விடுவதன் அர்த்தம்...'' என விளக்கமும் சொல்லி முடித்தான் வினோத்.

நிலை குத்திய கண்களில் இருந்து கன்னங்களில் தாரை தாரையாய் நீர் வழிய அசையாது நின்று கொண்டிருந்தாள் நந்தினி.

**18**

புன்னகை... அன்பு தான் அவளது ஆயுதம்! அதை வைத்து தான் அவனது அத்தனை அஸ்திரங்களையும் சமாளித்தாள்.

ஆனால் இப்போது முதலுக்கே மோசமாய், நீ பிரிந்து போய் விடு... என்கிறானே? இதை எந்த முகத்தை, எந்த புன்னகையை காட்டி எதிர்கொள்வது?

ஒரு கணங்கள் அப்படியே செய்வதறியாமல் தவித்துப் போனவள். மறுகணமே சுதாரித்து விட்டாள். கன்னங்களை துடைத்தவள், '' ஒரு வாரம் அவகாசம் கொடுங்கள். யோசிக்க வேண்டும்...'' என்றாள்.

வினோத் இதை எதிர்பார்க்கவில்லை. உதடுகளை பிதுக்கி யோசித்தவன், வேறு வழி தெரியாதவனாய் தோள்களை குலுக்கினான். ''ம்ம்... ஓகே... ஒரு வாரம் எடுத்துக் கொள்...'' என்றவன் முகத்தை கடுமையாய் வைத்தபடி, ''இதில் நீ யோசிக்க ஒன்றும் இல்லை. என் விருப்பப்படி தான் நடக்க வேண்டும். நடக்கப் போகிறாய்...நீ...!'' என உறுமலாய் கர்ஜித்து விட்டு அகன்றான்.

நந்தினி அடுத்து வந்த நாட்களை சிந்திக்க ரொம்ப சிரமப்பட்டாள். இரண்டு நாட்களை நகர்த்துவது கூட பெரும் பாடாயிற்று.

ஒரு வாரத்தில் வினோத்திற்கு என்ன பதில் சொல்வது?

அவன் சொல்வது போல் பிரிந்து செல்ல வேண்டுமா? பிரிந்து போய் என்ன செய்ய முடியும்? என்ன செய்வாள்?

இவ்வளவு நாள் மனத்தை ஒரு நிலைப்படுத்தி பாசம், புன்னகை என அன்பாய் அவள் பொழிந்ததற்கு எல்லாம் இனி அர்த்தமில்லாமல் போய் விடுமே?

இதற்காகவா இவ்வளவு கஷ்டப்பட்டாள்? இதற்காகவா எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு அன்பு ஒன்று தான் அவனைத் திருத்தும் ஆயுதம் என வெறியாய் அலைந்து சிரமப்பட்டாள்?

அவள் சிறு சிறு அடுக்களாய் கட்டிய மணல் கோட்டையை ஒரே நாளில் தகர்க்கப் பார்க்கிறானே?

தன்னை ஒரேயடியாய் தலை முழுகப் பார்க்கும் அவனை இனி எப்படித் திருத்துவது?

இனி அவ்வளவு தானா?

அவளால் ஒன்றும் செய்ய முடியாதா?

திகைத்துப் போய், தலையில் இடி விழுந்தவள் போல் அப்படியே சிலையாய் நின்று யோசித்தாள்.

இறுதியில் அவளையறியாமல் எண்ணங்கள் உறுதி பெற்றன.

'என்ன ஆனாலும் சரி விடக்கூடாது. அவன் என்ன செய்தாலும், என்ன முடிவெடுத்தாலும் அவளது ஆயுதம் அன்பு தான். புன்னகை தான். அதை வைத்து கடைசி வரை போராடிப் பார்த்து விட வேண்டும். தோற்றாலும் சரி. அதனால் அவளது வாழ்க்கையே தொலைந்து பாழாய் போனாலும் சரி. அவளது நிலையை மட்டும் மாற்றிக் கொள்ளப்போவதில்லை.

தொடர்ந்து போராட வேண்டும். தான் அவன் மீது வைத்திருக்கும் அன்பை அவன் புரிந்து கொள்ளும் வரை அவள் போராட வேண்டும். அவள் போராடத்தான் போகிறாள்.

நந்தினி நிமிர்ந்து கொண்டாள்.

எதையும் எதிர்கொள்ளும் பக்குவம் வந்தவள் போல் இரண்டு

''அந்தப் பூசாரி பேய் ஓட்டுவதில் வல்லவர்..''
''எப்படிச் சொல்றே?''
''அவர் மனைவியையே விரட்டி விட்டார்னா பார்த்துக்கோயேன்!''

ஆர்.என் செழியன்.
சென்னை.



நாட்கள் நடமாடினாள். சிரித்த முகத்தையும் புன்னகை தோற்றத்தையும் கொஞ்சமும் மாற்றாமல் அவள் இருப்பது கண்டு வினோத்தும், ஹேமாவும் அதிசயிக்கவே செய்தனர்.

ஹேமா அதிலும் அடக்கமாட்டாதவளாய், அவளிடம் கேட்டே விட்டாள். "இன்னும் ஒரு வாரம் தான். அதற்குள் நீ போய் விட வேண்டும். உனக்குப் புரிகிறது தானே?"

ஹேமா கேட்டதற்கு நந்தினி புன்னகையையே பதிலாக்கினாள். ஹேமா எரிச்சலானாள்.

"உன்னிடம் தான் கேட்கிறேன். பதில் சொல். நீ என்ன செய்யப்போகிறாய்? உன் பிறந்த வீட்டிற்கு போகப்போகிறாயா? அல்லது வேறு ஏதாவது முடிவு எடுத்திருக்கிறாயா?"

அதற்கும் பதில் சொல்லாமல் சிரிப்பையே நந்தினி தர ஹேமா எரிச்சலுடன் அகன்றாள்.

வினோத்தும் தன் பங்கிற்கு அவளிடம் வந்து முறைத்தான். "இதோபார், உன் வீட்டில் உன் அப்பாவிடம் சொல்லி ஏதாவது பிரச்சனை செய்யலாம் என எண்ணி இருக்கிறாயா?" என்றான் கோபமாய்.

"அப்படியெல்லாம்... இல்லை..." என்றாள். இவள் நடுங்கும் பற்களால் உதட்டைக் கடித்தபடி.

"ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள். உன்னை எனக்குப் பிடிக்கவில்லை. என் மனதில் உனக்கு இடமில்லை. அதனால் யாரும் என்னை கட்டாயப்படுத்தியோ, சட்டம், போலீஸ் என மிரட்டியோ என் மனதில் உனக்கு இடம் கொடுக்கும்படி செய்ய முடியாது. அதனால் அது போன்ற முயற்சிகள் ஏதுவும் எடுத்து என்னை எரிச்சல் படுத்த நினைக்காதே. மீறி... நீ... எடுத்தால்..." என்றபடி கண்களை உருட்டி மறுபடி முறைத்தான் அவன்.

"இல்லை... அப்படியெல்லாம் செய்யப்போவதில்லை..." என்றாள் நந்தினி நிதானமாக.

அவன் தோள்களை அலட்சியமாய் குலுக்கியபடி திரும்பப் போனான். "ஒரு நிமிஷம்..." என்றாள் அவள்.

குரல் கம்ம...

திரும்பி, "என்ன?" என்றான்.

"உங்களிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும்..."

"கேள்..." என்றான் ஒற்றை வார்த்தையாய்.

"என்னை... ஏன் வெறுக்கிறீர்கள்? நான் என்ன தப்பு செய்தேன்?" என்றாள் அவள் ஒடிந்த குரலில்.

அவன் நிதானமாக அவள் பக்கம் நடந்து வந்து கைகளைக் கட்டிக் கொண்டான். அவள் கண்களையே உற்றுப் பார்த்தான்.

"உன்னை எனக்குப் பிடிக்கவில்லை..." என்றான்.

"அதான்... ஏன்... ஏன்... என்கிறேன்...? உங்கள் மீது எவ்வளவு



பாசம் வைத்திருக்கிறேன்... எவ்வளவு அன்பு செலுத்துகிறேன் உங்கள் காலடியே கதி என்று எப்படி விழுந்து கிடக்கிறேன். இருந்தும்... ஏன்... ஏன்... என்னை உங்களுக்குப் பிடிக்கவில்லை?"

ஆற்றாமையாய் அவள் சொல்லச் சொல்ல அவன் பலமாய் தலையசைத்தான்.

"ம்ம்... இதான்... இந்த அன்பு தான், நீ சொல்கிறாயே... அன்பு... உங்கள் காலடியே சரணம்... என்று... நீ காட்டுகிற அன்பு தான் எனக்குப் பிடிக்கவில்லை! அதனால்... அதனாலே... உன்னை வெறுக்கிறேன்...!" என்றான் அவன் கோபமாக.

அவள் துடித்து நிமிர்ந்தாள்.

"என்ன... அன்பு செலுத்துவது பிடிக்கவில்லையா? என்ன சொல்கிறீர்கள்?"

அவன் பதில் சொல்லாமல் ஒரு நிமிடங்கள் யோசித்தவன், "நீ அன்பு செலுத்துவது எனக்குப்பிடிக்கவில்லை. ஏனெனில்..." என்று சொல்லி நிறுத்தினான்.

நிமிர்ந்து இடுங்கும் கண்களால் அவள் மை விழிகளை உற்றுப் பார்த்தான். "அது... எனக்கு பெரும் குற்ற உணர்ச்சியை ஏற்படுத்துகிறது!" என்று முடித்தான்.

பேசி முடித்த வேகத்திலே விறுவிறுவென அகலவும் செய்தான்.

திகைத்துப் போய் நின்றாள் நந்தினி.

## 19

நந்தினி ஒரு கணம் குழம்பித்தான் போனாள். 'நீ அன்பு செலுத்துவது பிடிக்கவில்லை... என்பதோடு நிறுத்தியிருந்தால் பரவாயில்லை. நீ அன்பு செலுத்துவது குற்ற உணர்ச்சியை ஏற்படுத்துகிறது என்றல்லவா சொல்லியிருக்கிறான்?

அது என்ன குற்ற உணர்ச்சி...?

திகைத்துப் போய் யோசித்தவளுக்கு ஒரு விஷயம் மெல்ல புரிந்தது. தான் செலுத்தும் அன்பு, காட்டும் பரிவு அவனை உறுத்துகிறது. இப்படி அன்பு செலுத்துபவளிடம் கடுமையாக நடந்து கொள்கிறோமே என பலமாய் அரித்து உலுக்குகிறது. அந்த உறுத்தலே... குற்ற உணர்ச்சியாய் மாறி அவனைப் பெரிதும் வதைக்கிறது.

அப்படியானால்...?

இதில் இருந்து என்ன தெரிந்து கொள்ள முடிகிறது...?

அவனுள்ளும் ஒரு நல்ல மனம் இருக்கிறது. அது மெல்ல மெல்ல விழிக்கிறது.

அந்த நல்ல மனதின் விழிப்பே குற்ற உணர்ச்சியாகி அவனை உறுத்துகிறது.

அது போதுமே...! நல்ல மனம் விழிக்க ஆரம்பித்தால்...!

கொஞ்சம் கொஞ்சமாய் மாறி விடுவானே! நல்லவனாய் ஆகி விடுவானே! அப்படி நடந்தால் அது அவளுக்கு வெற்றி தானே! அவள் பாடுபட்டது அதற்குத்தானே!

அந்த நினைப்பே அவளுள் பெரும் சந்தோஷத்தை உண்டாக்க அன்று முழுவதும் உற்சாகமாய் நடமாடினாள்.

ஆனால் வினோத்தோ அவளை வெளியேற்றுவதிலே குறியாயிருந்தான். மறுநாள் காலையில் எழுந்தவன் அவளிடம், "இதோ பார், இன்னும் ரெண்டு நாட்கள் தான் இருக்கிறது. உனது உடைமைகளை எல்லாம் 'பாக்' செய்து நீ தயாராகி விடுவது நல்லது..." என்றான்.

அவன் சொன்னதற்கு ஏற்றார் போல் அன்று மாலையே ஹேமா இரண்டு பெரிய சூட்கேஸ்களில் அவள் உடைமைகளை துணிமணிகளை கொண்டு வந்து விட்டாள். அவளுக்கு தன் ரூமிலே ஒரு அலமாரியை ஒதுக்கி கொடுத்தான் வினோத்.

அந்த சில நாட்களிலே ஹேமாவின் நடவடிக்கையும் மாறி விட்டது. அவள் தான் வினோத்தின் மனைவி போலவும் அந்த வீட்டுக்கே எஜமானி போலவும் நடமாடினாள். நந்தினி தான் தனது நிலையை உணர்ந்து கூட்டுக்குள் சுருங்கும் நத்தையாய் மாறிக் கொண்டிருந்தாள்.

நான்காவது நாள் தான் அந்த பெரும் விபரீதச் சம்பவம் நடந்தது.

வினோத் மாலை அலுவலகம் முடிந்து காரை ஓட்டி வந்தவன் ஆக்ஸிடெண்ட் ஒன்றில் சிக்கிக் கொண்டான். முன்னால் சென்ற டேங்கர் லாரியை முந்தப் போனவன் எதிரே வந்த லாரி மீது நேருக்கு நேர் மோதிக் கொண்டான்.

கை, கால்களில் பலத்த அடி. உடனடியாக பக்கத்து பெரிய ஹாஸ்பிடல் ஒன்றில் சேர்க்கப்பட்டு விட்டு நந்தினிக்கு தகவல் கொடுத்தார்கள். அந்த நேரத்தில் ஹேமாவும் வீட்டில் தான் இருந்தாள்.

விஷயத்தை கேள்விப்பட்டு நந்தினிக்கு மயக்கமே வரும் போல் இருந்தது.

ஐயோ! என அலறியபடி தலையைப் பிடித்துக் கொண்டாள்.

"நீங்கள் மட்டும் வித்தியாசமாய் ஆபீஸ் போகும் போது ஸ்வீட் வாங்கிட்டுப் போறீங்களே?"

"அங்கேயும் வேலைக்காரி இருக்கிறாளே!"

ஆர்.என்.செழியன்
சென்னை-41





ஹேமாவோ எவ்வித பதற்றமும் காட்டாமல் கண்களை உருட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நந்தினி தாமதிக்கவில்லை. படபடவென பதறியபடி கிளம்பினாள். ஹாஸ்பிடல் விலாசம் கண்டுபிடித்து அவள் சென்ற போது தீவிர கண்காணிப்பு பிரிவில் வினோத்தை அட்மிட் செய்திருந்தனர். இரண்டு நாள் கழித்தே ஆபத்து நீங்கி வினோத் அபாய கட்டத்தை தாண்டி விட்டதாக டாக்டர்கள் அறிவித்த போது தான் நந்தினிக்கு மூச்சே வந்தது.

கால்களிலும் கைகளிலும் எலும்பு முறிவு ஏற்பட்டு பலத்த பாண்டேஜ் கட்டுகளுடன் பரிதாபமாய் இருந்தான் வினோத். அன்று தான் இன்டென்சிவ் யூனிட்டில் இருந்து சாதாரண வார்டிற்கு மாற்றியிருந்தார்கள்.

நந்தினி ஓடியாடி தூக்கமில்லாது கண்ணும் கருத்துமாய் அவனை கவனித்தாள். நேர நேரத்திற்கு மாத்திரைகளையும் போட வேண்டிய ஊசிகளையும் தெரிந்து வைத்துக் கொண்டு ஞாபகப்படுத்தினாள்.

உணர்வு வந்து இரண்டொரு நாட்களில் கொஞ்சம் கொஞ்சமாய் விழித்துப் பார்க்க ஆரம்பித்தான் வினோத்.

அவன் முன் புன்னகை முகமாய் நடமாடி உற்சாகமாய்பேசி தைரியமூட்டினாள். எல்லாவற்றையும், கண்கள் குளமாக பார்த்துக் கொண்டிருந்தான் வினோத்.

தொடர்ந்து நேரம் கிடைக்கும் போதெல்லாம் தன் முன் ஓடியாடி தனக்கு பணிவிடை செய்யும் அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்தான் வினோத்.

எதற்கும் ஆரம்பம் முடிவு என்று ஒன்று உள்ளது போல் அவனது செய்கைகள் எல்லாம் முடிந்து அவனுக்கெதிராகவே திரும்பி அவனை ரொம்பவும் இம்சித்தன. இப்படி நம்மேல் அன்பு வைத்திருக்கிறவளைப் போய், எப்படியெல்லாம் கொடுமைப்படுத்தியிருக்கிறோம்? எவ்வளவு கடுமையான வார்த்தைகள் எல்லாம் பேசி நிந்தித்திருக்கிறோம்? என்றெல்லாம் நினைத்தான்.

தனிமை,நிறைய நேரம் அவன் ஓய்வாய் இருக்க வேண்டிய சூழ்நிலை எல்லாம் அவனை வெகுவாக சிந்திக்க வைத்தது.

அந்த ஹேமா இந்த விஷயம் கேள்விப்பட்டு, 'இனி இவன் சரிப்படமாட்டான்' என வேறு ஒரு பணக்காரனைத் தேடிப்போய் விட்டதாகவும்... பார்க்க வந்த நண்பன் மூலமாக அவனுக்கு சேதி வந்தது.

நொந்து நூலாகிப் போனவனாய் இரவெல்லாம் இரண்டு நாள் தூங்காமல் யோசித்தான் அவன்.

மூன்றாம் நாள் ஹாஸ்பிடலில் 'டிஸ்சார்ஜ்' கொடுத்து வீட்டிற்கு அழைத்துச் செல்ல அனுமதி கொடுத்தனர். மூன்று மாத ரெஸ்ட் கண்டிப்பாக எடுக்கவேண்டும் என்ற டாக்டர்களின் அறிவுறுத்தலோடு வீட்டிற்கு வந்தான் வினோத்.

20

[illegible]



[illegible]



வில்லை. அப்போது உங்கள் குணம் மனநிலைதான் என்ன?'' என்றாள் ஆழமாய் அவனைப் பார்த்தவாறு.

அவள் கேட்டதற்கு பதில் சொல்லாமல் ஒரு கணம் நீளமாய் மூச்சிழுத்தவன், ''நீ கேட்பது சரிதான் நந்தினி. ஆரம்பத்தில் நீ மட்டுமல்ல, என்னாலே என்னைப் புரிந்து கொள்ள முடியவில்லை. உனக்குத் தெரியுமா? [illegible] உன்னை நான் மணம் முடித்த போது என்னுடைய மனநிலை எப்படி இருந்தது தெரியுமா?''.

''எப்படி இருந்தது?'' என்றாள் அவள், ஆவலாய்.

''உன்னை எனக்கு சுத்தமாய் பிடிக்கவில்லை. அது போன்ற மனநிலையில் தான் இருந்தேன்'' அவன் நிதானமாய் முடிக்கவும் அதிர்ந்து போனவளாய் அவனைப் பார்த்தாள். ''என்ன என்னைப் பிடிக்கவில்லையா?'' என்றாள் ஆற்றாமையுடன்.

அவளை செல்லமான சிணுங்கலுடன் முதன் முறையாய் தன்னோடு அணைத்தவன், ''நந்தினி நான் சொல்வது கதை போல் இருக்கும். முழுமையாகக் கேள். அப்போது தான் உன்னால் புரிந்து கொள்ள முடியும்'' என்றான் மென்மைக் குரலில்.

''ம்ம் சொல்லுங்கள்'' என்றாள் அவள், தன்னை இடையோடு அவன் அணைத்திருக்கும் நிலையை எண்ணி பரவசமாகி.

''உன்னைப் பிடித்திருக்கவில்லை என்று சொன்னது கூட தவறு. உனது அழகைப் பிடிக்கவில்லை என்று சொல்லியிருக்க வேண்டும். ஏனெனில் அழகான பெண்களை எனக்கு சுத்தமாக பிடிக்காது. அப்படி அழகானவர்களைப் பார்த்தால் உடனே பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் தான் தோன்றும். அப்படி ஒரு வெறி என் மனதில் உண்டு''

அவன் சொல்லச் சொல்ல இரண்டு மை விழிகளையும் அகல விரித்து வியப்போடு பார்த்தாள். ''நிஜமாகவா?'' என்றாள்.

ஒரு வித குற்ற உணர்ச்சியுடன் தலையாட்டியவன், 'நிஜம் தான் நந்தினி. அப்படி ஒரு வெறியான உணர்வு எனக்கு ஏற்பட்டதற்கு காரணம் சிறு வயதில் நான் வளர்ந்த விதம். எனக்கு ஏற்பட்ட அனுபவம் தான். அதைச் சொல்லட்டுமா?'' என்றபடி கதை போல் சொல்ல ஆரம்பித்தான் விநோத்.

''இதுவரை மூணு பேரைத் திருமணம் செய்து விவாகரத்து பண்ணிவிட்டாளே..! இது நல்லவளா இருக்கு..?''

''நல்லா இல்லே..!ன்னு தானே விவாகரத்து பண்ணினேன்..!''

- எஸ். மாரியப்பன், தேனி





''நந்தினி, நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் செல்வச் செழிப்பில் தான். என் தந்தை நிலக்கிழாராய் பரம்பரை பணக்காரராய் உருவெடுத்து வளர்ந்தவர். சிறு வயதிலேயே தாயை இழந்து விட்டேன். அம்மா பாசம் என்ன என்பது தெரியாமல் வளர்ந்த எனக்கு அப்பா மறு தாரமாய் மண முடித்துக் கொண்ட இரு சித்திகள் தான் அன்னையாகினர். அன்னை என்றால் கொடுமைக்கார அன்னைகள். அப்படி ஒரு துவேஷம் அவர்களுக்கு! அன்பு என்றால் என்ன என்று கேட்கும்படி என் மீது வெறுப்புக் காட்டி என்னைக் கொடூரமாகவே வளர்த்தனர். அவர்களை மீறி என்னால் ஒன்றும் செய்ய முடியாத நிலை. அப்பாவுக்கு இதெல்லாம் புரிந்தாலும் அவராலும் ஒன்றும் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை. அப்பா என் மீது காட்டிய பரிவு, நிஜ அன்பு என்னை எல்லாவற்றையும் சகித்துக் கொள்ள வைத்தது. ஆனாலும் அந்த இளம் பிராயத்தில் ஏற்பட்ட வெறுப்பான உணர்வுகள் அப்படியே வடுக்களாய் என் மனதில் பதிந்து விட்டது. காலப்போக்கில் அந்த சித்திகள் இருவரும் கார் ஆக்ஸிடெண்ட் ஒன்றில் சிக்கி உயிரிழந்து விட்டனர். அதே சூழ்நிலையில் நானும் வளர்ந்து பெரியவனானேன். ஆனால் என் மனதில் அப்போதிலிருந்தே அழகான பெண்களை பிடிக்காமல் போய் அவர்களைப் பழி வாங்க வேண்டும் என்ற வெறி தோன்றி விட்டது!''

அவள் நிறுத்த அவன் சொல்வதையே விசித்திரமாய் பார்த்துக் கொண்டிருந்தவள் குழப்பமாகி, ''நீங்கள் சொல்வது சரி. இரண்டு சித்திகளும் உங்களை கொடுமைப்படுத்தி வளர்த்திருக்கிறார்கள். அதற்கும் அழகுக்கும் என்ன சம்பந்தம்? என்றாள் நந்தினி புரியாதவளாய்.

அதற்கு அருமையாய் தலையசைத்தவன், ''சம்பந்தம் இருக்கிறது நந்தினி. எனக்கு சித்தியாய் வந்த இரண்டு பேருமே அழகானவர்கள். அழகான இளம் பெண்களாய் இருந்த அவர்கள் அழகில் மயங்கி தான் என் தந்தை ஒரு சேர அவர்களை மணமுடித்தார். அந்த அவர்களது 'பொல்லாத அழகில்' மயங்கி தான் என்னை அவர்கள் கொடுமைப்படுத்தியதையும் அவர் சகித்துக் கொண்டார். எந்த அழகு என் வாழ்க்கையில் விளையாடி சிறு பிராயத்தில் நான் துன்பப்பட காரணமாயிருந்ததோ. அதன் மீது அளவு கடந்த வெறுப்பொன்று என்னையறியாமல் ஏற்பட்டு விட்டது. அதனாலே அழகை, அழகான பெண்களை வெறுத்து பழி வாங்க துடித்தேன். அப்படியொரு சூழ்நிலையில் தான் வசமாய் பருந்திடம் சிக்கிய கோழிக்குஞ்சு போல் நீ என் மனைவியாய் வந்து சிக்கினாள். அதற்குப்பின் நடந்த விஷயங்கள் எல்லாம் உனக்குத் தெரிந்தவைகள் தானே'' என்றபடி சோகமாய் பெருமூச்சு விட்டவன், ''ஆனாலும் எதையோ நினைத்துக் கொண்டு, எதற்காகவோ பழி வாங்குவதாய் உன்னை நான் நோகடித்து எப்படியெல்லாம் வேதனைப்படுத்தியிருக்கிறேன்'' என்றான் நிஜமான வருத்தத்துடன்.

சோகம் பொங்க பேசியவனை குழப்பமாய் [illegible] நீங்கள் சொல்வதை வைத்து ஓரளவு என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனாலும் ஒரு விஷயம் புரியவில்லை'' என்றாள்.

''என்ன நந்தினி? எதுவானாலும் கேள் பாவமன்னிப்பு போல் எல்லாவற்றையும் சொல்லி.. உன்னிடம் பிராயச்சித்தம் தேட தயாராயிருக்கிறேன்'' என்று மருகியவனின் தலையை நிமிர்த்தியவள், தன்னை வாட்டியதற்காக இப்படி உருகுகிறானே என ஆனந்தமே அடைந்தாள்.

''நான் கேட்க விரும்புவது என்னவென்றால்'' என்றவள் தனது கேள்வி அவனை சங்கடப்படுத்துமே என ஒரு கணம் தயங்கினாள்.

''தயங்காமல் கேள் நந்தினி'' என்றான் அவன் மறுபடியும்.

''கல்யாணம் ஆன புதிதில் அந்த இரவுகளில் மூர்க்கமாய் நீங்கள்''

அவள் வார்த்தையை முடிக்கும் முன்பே பலமாய் தலையாட்டினான் அவன். ''எல்லாம் உன்னுடைய அபரிமிதமான அழகை கசக்கிப் பிழிய வேண்டும் என்ற கொடூரமான எண்ணத்தினால் தான் நந்தினி. இப்போது நினைத்தால் எனக்கே ஆச்சியமாய் இருக்கிறது. நானா அப்படி நடந்து கொண்டேன் என்று. எப்படியெல்லாம் உன் உடம்பை இம்சித்து துன்பப்படுத்தியிருக்கிறேன். நான் ரொம்பவும் அயோக்கியன். என்னை மன்னித்து'' என்றபடி திரும்பவும் மருகப்போனவனை அவசரமாய் தன் நெஞ்சோடு அணைத்தவள், ''அது இருக்கட்டும் இடையில் திருந்தி நன்றாக வந்தீர்கள் தொழிலில் பெரும் நஷ்டம் ஏற்பட்டதால் தானே மறுபடியும் மாறினீர்கள்?'' என்றாள் ஆவலாய்.

பலஹீனமாய் தலையசைத்தவன் பலஹீன குரலிலே, ''அதுவும் அப்படித்தான் கொஞ்சம் திருந்திய என் மனதில் மறுபடியும் சைத்தான் புகுந்து கொண்டு அந்த பழைய குரங்கு குணம் வந்து விட்டது. ஆனால் நான் கொடுத்த அத்தனை துன்பங்களையும் சகித்துக் கொண்டு நீ புன்னகையுடன் நடமாடி என் மீது அபரீத அன்பு செலுத்தியது என்னைத் தடுமாற வைத்து ரொம்பவும் யோசிக்க வைத்தது. அது எப்படி நந்தினி பொறுமையாய் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டாய்? படித்த பெண்ணான நீ இப்படி நடந்து கொண்டது எனக்கு ஆச்சரியமே!'' என்றான் வியப்புடன்.

அவன் வியப்பைப் பார்த்து அடக்க முடியாமல் முத்துப்பற்கள் தெரிய சிரித்தவள், ''படித்தவள் என்றால் எனக்கு இரண்டு கொம்பா முளைத்திருக்கிறது? மேலும் படித்ததினால் தான் என்னால் நிலைமையை புரிந்து கொள்ள முடிந்தது. அவசரப்பட்டு முடிவெடுத்தால் வாழ்க்கை முழுவதும் அவஸ்தைபட வேண்டும் என்பதும் புரிந்தது. யோசித்தேன். 'அன்பிற்கு உண்டோ அடைக்கும் தாழ்'' என்ற வள்ளுவர் வாக்கு தான் நினைவுக்கு வந்தது. யோகா பெண்மணி ஒருவர் கொடுத்த அறிவுரையும் எனக்கு தைரியமூட்டியது. அன்பு தான் என்



னுடைய ஆயுதம். அதை வைத்து தான் உங்களை வீழ்த்த வேண்டும் என்ற உறுதியான முடிவுக்கு வந்தேன். தீவிரமாய் போராடினேன். இறுதியில் வெற்றியும்'' என்றவள் ஒரு கணம் நிறுத்தி, வெற்றி பெற்று விட்டேன் தானே?'' என சிரிப்புடன் கேட்டாள்.

''அதில் இன்னும் சந்தேகமா?'' என்ற படி அவளுக்கு இன்னும் நெருக்கமாய் வந்தவன் அவள் முகம் நிமிர்த்தி படபடக்கும் அவள் மை விழிகளை கெஞ்சலாய் பார்த்தான். ''கண்மணி'' என்றபடி அவளது கன்னங்களை மிருதுவாய் வருடினான்.

''என்ன சொன்னீர்கள் கண்மணியா?'' என்றபடி விழி விரிய ஆச்சரியப்பட்டு அதிசயத்தவளை, மேலும் அதிசயப்படுத்தும் விதமாய், ''இனி என் உயிர் என் செல்லம் என் எஜமானி எல்லாமே நீ நீ தான்! உன் சொல் படி தான் நடப்பேன். நீ தான் என் உலகம் உன் காலடி தான் என் சரணம்'' என கெஞ்சலுடன் கொஞ்சியவனை நிறுத்தி.'' நான் மட்டுமல்ல உங்கள் மனங்கவர்ந்த இன்னொரு வி.ஐ.பி.யும் இருக்கிறார்'' என்றாள் கன்னக்கதுப்புகளில் வெட்கம் படர.

''யார் அது நந்தினி?''

புரியாமல் கேட்டவனின் முகத்தை தன் மருதாணி விரல்களால் வளைத்து வயிற்றைக்காட்டினாள்.

''ஓ மறந்து விட்டேனே!'' என குபீர் சந்தோஷம் கொண்டவன் மெல்லக் குனிந்து மென்மையாய் அவள் வயிற்றில் முத்தமிட்டான்.

அப்படி முத்தமிட்டவனை நெஞ்சார அணைத்து தன்னோடு ஐக்கியப்படுத்தியவள் திடீரென ஞாபகம் வந்தவளாய், ''உங்களது தொழில் நஷ்டம் சரிவு.. அதையெல்லாம் எப்படி சரி செய்யப் போகிறீர்கள்?'' என்றாள் புதுக்கவலை பொங்க.

பதிலுக்கு வினோத் சிரிப்புடன் நிமிர்ந்து அவள் காது மடல்களை அசைத்து அதிர வைத்தவன், ''நந்தினி இப்படி உன் நெஞ்சார அணைப்பும், அரவணைப்பும் இருந்தால் எந்த நஷ்டத்தையும், சரிவையும் சரி செய்து விடலாம். இனி எந்த கவலையும் வேண்டாம். உன் துணையோடு நான் எடுக்கிற எல்லா முயற்சிகளும் இனி ஜெயம் தான் வெற்றி தான்'' என்றவன், மனதில் ஏதோ தோன்ற, மறுகணமே சீரியஸாகி, ''அதற்கு முன் முக்கியமான ஒன்றை நீ எனக்கு கொடுத்து விட வேண்டும்'' என்றான் கறார் குரலில்.

''முக்கியமான ஒன்றா?'' என்றாள் அவள் புருவம் உயர.

''அது தான் உன் ஆயுதம்! அன்பும், புன்னகையுமான ஆயுதம். அதை வைத்து வாழ் நாள் முழுவதும் உன்னை வீழ்த்தப் போகிறேன்'' அவன் சொல்லச் சொல்ல, ''நீங்கள் வீழ்த்துவது என்ன? நானே வீழ்ந்து விடுகிறேன்'' என்றபடி அவன் மார்பில் விழுந்தாள். மேன்மையாய் அவன் அணைக்க, அந்த அணைப்பில் கட்டுண்டு, தன் வசமிழந்தவளாய் வெட்கம் படர கண்கள் மூடிக்கொண்டாள் நந்தினி.

-முற்றும்-